# HISTORY OF TAMILNADU FROM 1801 TO 1967 C.E
# SUBJECT CODE; 18K2H04
# UNIT-I
## தென்னிந்தியப் புரட்சி
## (SOUTH IND/AN REBELLION, 1800-1801)

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கெதிராகத் தோன்றிய மிகப் பெரிய எதிர்ப்பே 1800-ம் வருட தென்னிந்தியப் புரட்சியாகும். தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலையால் ஆங்கிலேயர் தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொண்டனர். கர்நாடகப் போர்களும், மைசூர் போர்களும் தமிழகத்தில் அவர்களின் அரசியல் ஆதிக்கத்தை உறுதி செய்தன. ஆங்கிலேயரின் இந்த ஏகாதிபத்திய வளர்ச்சியினால் மக்கள் மத்தியில் வெறு*ப்பு*ணர்வு ஏ*ற்பட்ட*து. எனவே மக்கள் அந்நிய ஆதிக்கத்திற்கெதிராக புரட்சி செய்யத் திட்டமிட்டனர். பல சி*ற்ற*ரசர்களும் பாளையக்காரர்களும் ஒன்றிணைந்து ஆங்கிலேயர் களுக்கெதிராக பல கூட்டிணைப்புகளை ஏற்படுத்தினர். சிவகங்கை மருது சகோதரர்கள் மற்றும் திண்டுக்கல், கோயம்புத்தூர், மலபார் ஆட்சியாளர்கள் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயருக்கெதிராக கிளர்ச்சித் திட்டம் வகுத்தனர். இதுவே புகழ்பெற்ற தென்னிந்தியப் புரட்சியாகும். இதனை முதலாவது சுதந்திரப் போர் என்று கூறுகிறார் டாக்டர் இராஜய்யன்.

**கிளர்ச்சிக்கான காரணங்கள்**

**1. அரசியல் காரணங்கள்**

a) தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிட்டு ஆங்கிலேயர் செல்வாக்குப் பெற்றனர். ஆங்கில ஆட்சியின் தலையீட்டை எதிர்த்த அரசுகள் ஒடுக்கப்பட்டு சீரழிக்கப்பட்டன. திண்டுக்கல், சேலம், கோயம்புத்தூர், வேணாடு, மலபார், கனரா போன்ற பகுதிகள் அடங்கிய பெரும் நிலப்பரப்பை இணைத்துக் கொண்டனர். இப்படி இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த இந்திய ஆட்சியாளர்கள் புரட்சியில் ஈடுபட தயாராயினர்.

b) ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்ட சிற்றரசுகளும் தங்கள் பழைய அந்தஸ்தை இழந்தன. இந்த அரசுகளின் ஆட்சியாளர்களை நாய்கள் போல் நடத்தினர். கம்பெனியிடம் பணிந்து தங்கள் அந்தஸ்தை நிலை நாட்டினர். வெறும் பொம்மைகள் போன்றே நடத்தப்பட்டனர். இந்த சிற்றரசுகளின் பாதுகாப்பிற்கு கம்பெனி உத்திரவாதம் அளித்தது. ஆனால் அதற்குப் பதிலாக கம்பெனியின் இராணுவச் செலவுகளை

இந்த சிற்றரசுகள் ஒத்துக் கொண்டன. இதனால் இந்த சி*ற்றர*சுகள் நாங்கள் இழந்த உரிமைகளையும், அந்தஸ்தையும் மீண்டும் பெற வங்கிலேயரை எதிர்க்க மு*ற்பட்ட*னர்.

c) ஆற்காட்டு நவாப் முகமது அலி தன்னை எதிர்த்த என்றரசுகளை ஒடுக்குவதற்கு கம்பெனியின் உதவி***யை நாடினார்.*** 87-ல் கம்பெனியுடன்

உடன்படிக்கை ஒன்றை *செய்து கொண்டு* சங்கில ஏகாதிப*த்தி*யத்தை ஏற்றுக் கொண்டார் *தனது* கோட்டைகளை எல்லாம் ஆங்கிலேயரிடம் ஒ*ப்ப*டைத்தார். ஆங்கில வாசு நடத்தும் எந்தப் போருக்கும் தனது வருவாயில் ஐந்தில் ஒரு பகுதியைத் தருவதாக ஒப்புக் கொண்டார். 1793-ல் முகமது அலி பாளையக்காரர்களிடமிருந்து நேரடியாக வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கியேலர்களுக்குக் கொடுத்தார். இதனால் பாளையக்காரர்கள் பெரும் துன்பத்திற்குள்ளானார்கள். இது தென்னிந்தியப் புரட்சிக்கு

முக்கிய காரணம் ஆகும்.

d) தஞ்சை அரசியல் விவகாரத்தில் ஆங்கில அரசு தேவையில்லாமல் தலையிட்டது. 1790-ல் தஞ்சை அரசின் வருவாய் நிர்வாகத்துறையை ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டனர். அதேபோல் பெரும்பான்மை*யான பாளையக்காரர்களையும், பாளையங்களை*யும் *தங்*களது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அவர்களது கோட்டைகள் அழிக்கப்பட்டன. இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் மூலம் கன்னியாகுமரி முதல் கிருஷ்ணா நதி வரை தங்கள் ஆதிக்கத்தை *ஏற்ப*டுத்தினர் ஆங்கிலேயர். இவர்கள் நிர்வாகத்தில் ஊழலும் நிர்வாகச் சீர்கேடுகளும் பெருகின. நாட்டுப்பற்று மிகுந்த பாளையக்காரர்கள் குறுநிலத் தலைவர்கள் போன்றோர் ஆங்கிலேயர்களின் வருவாய்த் துறை, இராணுவத்துறை கொள்கைகளை எதிர்த்தனர்.

**2. பொருளாதாரக் காரணங்கள்**

a) நடைமுறையிலிருந்த வரிவசூல் முறையை நிராகரித்து *ஆங்கி*ல அரசு தன்விருப்பப்படி கிராமங்களிலிருந்து ஏராளமான வரிவசூல் செய்தது. தாமதமாக வரி செலுத்திய விவசாயிகள் துன்புறுத்தப் பட்டனர். லஞ்சமும், ஊழலும் வருவாய் நிர்வாகத்தின் அனைத்து துறைகளிலும் ஊடுருவியிருந்தன. கம்பெனியின் குத்தகைதாரர்களான நவாபுகள் பணம், தானியம் ஆகியவற்றை வசூலிப்பதில் எத்தகைய நீதிமுறையையும் கடைப்பிடிக்கவில்லை. உயிர் வாழ்வதற்கு வைத்திருந்த தானியம் முழுவதையும் கூட எடுத்துச் சென்றன*ர். வீட்டி*லிருந்த பாத்திரங்களைக் கூட அள்ளிச் சென்றனர். தெனால் ஆங்கிலேயர் மீதான நம்பிக்கையை இழந்த மக்கள் புரட்சி செய்யத் தயாராயினர்.

b) கம்பெனியில் இருந்த சிவில், இராணுவ அதிகாரிகள் இந்திய சிற்றரசர்களுக்கும், குறுநிலத் தலைவர்களுக்கும் தாங்கள் சட் விரோதமாகத் திரட்டிய ஏராளமான செல்வத்தைக் கடனாக

கொடுத்தனர். இதற்காக அதிக வட்டி வசூலித்தனர். எனவே வாங்கிய தொகையை யாரும் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது மேலும் ஆங்கிலேயர் தாங்கள் செய்த போர்களுக்கான செலவுகளை தமிழக மக்களிடமிருந்தே பிரித்துக் கொடுக்குமாறு பாளையம் காரர்களை கட்டாயப்படுத்தினர். எனவே தங்களது தாயகத்தில் இருந்து கொண்டே தங்களைச் சுரண்டும் ஆங்கிலேயர்களை சிற்றரசர்களும் தலைவர்களும் எதிர்க்கத் தொடங்கினர்.

c) தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஆங்கிலேயர் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆங்காங்கே இராணுவத்தை நிறுத்தி

வைத்திருந்தது. தங்கள் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்ள இராணுவத்தையே நம்பியிருந்தனர். இதனால் சிற்றரசுப் பகுதிகளில் நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டது. வரி வசூலிக்க இராணுவ உதவி நாடப்பட்டது..

d) வாணிபத்திலும் ஆங்கிலேயர் தலையிட்டு சுயலாபம் தேட முற்பட்டனர். கடல் வழியாக தானியங்கள் இறக்குமதி செய்யத் தடை *வி*தித்தனர். தாங்கள் சேமித்து வைத்திருந்த தானியங்களையே விற்க முற்பட்டனர். இதன் விளைவாக தானியத்தின் விலை அதிகரித்தது. உற்பத்தியாளர்கள் கம்பெனிக்கே தங்கள் பொருட்களை விற்க வேண்டும் என்று கூறியதுடன் அவர்களுக்கு குறைந்த விலையே கொடுத்தனர். ஏற்கனவே பஞ்சத்தாலும் நோயாலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் அதிக வரி வசூலாலும், கொள்ளை வாணிபத்தாலும் மேலும் அல்லலுற்றனர்.

e) அரசியல் பொருளாதாரச் சிக்கல்களுடன் சமுதாய சமயக் கோட்பாடுகளும் தடைப்படுத்தப்பட்டன. மக்கள் தங்கள் சமுதாய விழாக்களையும் உரிமைகளையும் செயல்படுத்தவிடாது தடுக்கப் பட்டனர். இவ்வாறு தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் தீமைகளும், *பா*ழான பொருளாதாரத்தில் ஏற்பட்ட அதிகப்படியான கொடுமை களும் அமைதியின்மையை ஏற்படுத்தின. மனக்குறைவு கொண்ட மக்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிக்கவும், பழம் சிறப்போடு பழைய அரசு நிறுவனங்களை மறுபடியும் அமைக்கவும் தீர்மானித்தனர். எனவே மக்களும் பாளையக்காரர்களும் சேர்ந்து *ஆங்கி*லப் பேரரசு ஆதிக்கக் கொள்கையை எதிர்க்க முற்பட்டனர்.

**மருது சகோதரர்கள்**

மருது சகோதரர்களின் புரட்சி நடவடிக்கைகள் கட்டபொம்மன் செய்த புரட்சியின் தொடர்ச்சியே என்று கருதலாம். சிவகங்கைச் சீமை மன்னர்களின் கீழ் பணிபுரிந்த மொக்கைப் பழனி சேர்வைக்காரர் பொன்னாத்தாள் ஆகியோரின் இரு புதல்வர்கள் தான் மருது சகோதரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில் மூத்த சகோதரர் பெரிய மருது அல்லது வெள்ள மருது என்றும் இளைய சகோதரர் சின்ன மருது என்றும் அழைக்கப்பட்டனர்.

மருது சகோதரர்கள் இருவரும் பேராற்றலும், போர்த்திறனும் மிக்கவர்களாக வி*ளங்கி*னர். வாள் வீசிப் போரிடுவதிலும், விளரித்தண்டை எறிந்து விரும்பிய இலக்கைத் தாக்குவதிலும் சிறந்து *விள*ங்கினர். எதிரிகளின் பலவீனங்களை விரைவாகப் புரிந்து கொள்ளுதல், அவைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுதல், தமக்கு நல்லது என்று *நம்பு*வதை எதிர்விளைவு கருதாது துணிந்து செயலாற்றுதல் போன்ற போற்றுதலுக்குரிய பண்புகள் சின்ன மருதுவிடம் காண*ப்பட்ட*ன.

சின்னமருது சிறந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார். அப்போது தமிழகத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைக்கான காரணத்தை அவர் தெளிவாக எடை போட்டார். அரசர்கள் பின்பற்றிய முட்டாள் தனமான கொள்கையைக் கண்டித்தார். மக்களிடையே ஏற்பட்ட பகைமை உணர்வு,

ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை, அதிகாரத்திற்கு கீழ்படியும் மக்களின் மனப்பாங்கு ஆகியவை அரசியல் சீர்கேடுகளுக்கு வழிவகுத்தன என்று கருதினார். ஆங்கிலேயருக்கு ஆதரவளித்த இந்திய அரசர்களைக் கண்டனம் செய்தார். பல இந்திய *அரச*ர்களுக்குக் கடிதம் எழுதி அவர்களின் ஆதரவைத் திரட்டினார். தென்னக அரசுகளின் கூட்டமைப்பு அமைக்கப்படுவதற்கு இவர் ***முக்கிய காரணமாவார்*.** புரட்சியின் போக்கு

***1800*-ம்** வருட தென்னிந்தியப் புரட்சியானது பொதுமக்களின் திட்டவட்ட முயற்சியின் உச்சகட்டமாகும். இந்தக் கிளர்ச்சி பிரிட்டிஷ் பிடியிலிருந்து ஜம்புதீபகற்பத்தை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தியாவின் பிற பகுதிகளில் ஐரோப்பிய ஆதிக்க வீழ்ச்சியை முன்னறிவிப்பதாக அமைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியைத் *தூ*க்கி எறிவதற்கு ஒரு வலிமைமிக்க கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. சிவக*ங்கை* மருதுபாண்டியர், திண்டுக்கல் கோபால நாயக்கர், *கோயம்பு*த்தூர் கான் -இ-ஜகான், மலபார் கேரளவர்மா, மைசூர் **கிரு*ஷ்ணப்ப நா*ய**க்கர், மராட்டிய தூன்டாஜிவாக் ஆகியோர் சேர்ந்து இக்கூட்டமைப்பை உருவாக்கினர்.

திண்டுக்கல்லில் சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டு 1800-ம் ஆண்டு ஜூன் மூன்றாம் தேதி ஆயுதம் தாங்கி கோயம்புத்தூரை, தாக்கினர். இக்கிளர்ச்சியானது வடக்கில் ஷோலாப்பூரிலிருந்த *தெற்*கில் நாங்குநேரி வரை பரவியது. இப்பெரிய போராட்டத்தில் தமிழர்கள் அதிகம் பங்கேற்றனர். கோய*ம்புத்தூ*ர் படையெடுப்பைச் தொடர்ந்து தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் கிளர்ச்சி பரவியது திருநெல்வேலியில் இக்கிளர்ச்சி வலி*மையாக* நடைபெற்றது.

*1801*, ஜனவரி 30-ல் மருதுபாண்டியர் தலைமையிலான *புரட்சியாள*ர்கள் விருப்பாட்சியிலிருந்த ஆங்கிலப் படையைத் தாக்கிக் தோற்கடித்தனர். பிப்ரவரியின் ஆரம்பத்தில் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்ட கட்டபொம்மன் உறவினர்களை விடுவித்தனர். புரட்சியாளர்கள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டு சிவத்தையா என்பவரை ஆட்சியாளராக நியமித்தனர். கலகக்காரர்கள் வெடிமருந்து, பீரங்கிகளை கடற்கரைப் பகுதியிலுள்ள பரதவர்களிடமிருந்து பெற்றனர். ஊமைத்துரையின் தலைமையில் இயங்கிய கலகப்படையினர் திடீர்த் தாக்குதலில் ஈடுபட்டு ஆங்கிலேய இராணுவ நிலைகளை அழித்தனர். தூத்துக்குடி கோட்டை
முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டது.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்க கம்பெனி காலின்மெக்காலே என்பவரின் தலைமையில் ஒரு படையை அனுப்பியது. இவர் ஒரு பெரிய இராணுவத்தைத் திரட்டி கலகக்காரர்களை எச்சரித்தார். புரட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகளை மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரம், சிவகங்கை பகுதிகளை மையமாக வைத்து செயல்படத் தொடங்கினர். தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆட்சியாளர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவளித்தனர். கோவில்பட்டிக்கு தளபதி அக்னியூ தலைமையில் அனுப்பப்பட்ட ஆங்கிலப்படை ஒன்று பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கி அழித்தது. அக்னியூ பிடிக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களைக் கொலை செய்தார்.

இத்தோல்விக்குப் பிறகு கிளர்ச்சியாளர்கள் திருநெல்வேலியிலிருந்த தங்கள் அனைத்து அரண்களையும் காலி செய்தனர். எனவே ஆங்கிலேயர் தங்கள் கவனத்தை சிவகங்கை மீது திருப்பினர்,

அதிருப்தி அடைந்த தளபதிகளை ஒருங்கிணைத்தும் அவர்களது மாவட்ட மக்களைத் திரட்டியும் மருது பாண்டியரும் *அவர*து நண்பர்களும் ஒரு வலிமைமிக்க படையைத் திரட்டின *அ*வர்கள் முத்துக்கருப்பத் தேவரை இராமநாதபுரத்தின் கிளர்ச் தலைவராகப் பிரகடனப்படுத்தினர். 1801-மே மாதம் சிவகங்கையில் கம்பெனிப் படைக்கும் உள் நாட்டவருக்கும் மோதல் ஏற்பட்டது. நத்தம், திரு*ப்ப*த்தூர் போர்களில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்து மதுரை நோக்கி புரட்சிக்காரர்கள் விரைந்தனர். ஊமைத்துரை மதுரைக்கு அருகாமையிலுள்ள பாளையநாட்டைக் கை*ப்பற்றினார்*. ஜூன் மாதம் கிளர்ச்சி காவேரிக் கரைக்கும் பரவியது. சின்னமருதுவும், செவத்தையாவும் இணைந்து பல ஆங்கிலேய இராணுவ முகாம்களைத் தகர்த்தனர். இராமநாதபுரத்துக்கும் ஒரு படை அனு*ப்ப*ப்பட்டு சேதுபதியின் பெரும்பான்மைப் பகுதிகள் விடுவிக்க*ப்ப*ட்டன. இவ்வாறு தென்னிந்தியப் புரட்சி பல இடங்களுக்கும் பரவத் தொடங்கியது. புரட்சியாளர்கள் எல்லாப் பகுதிகளிலும் பெற்ற வெற்றிச் செய்தி சென்னையைச் சென்றடைந்தது.

**அக்னியூவின் அறிக்கை**

புரட்சியாளர்களுக்கு மக்கள் பேராதரவு அளித்தால் ஆங்கில ஆட்சிக்கு உலைவைத்து விடுமோ என்று அஞ்சும் நிலை ஏற்பட்டது. எனவே 1801, ஜூன் 12-ம் தேதி ஒரு அறிக்கையை அக்னியூ வெளியிட்டார். இதுவே அக்னியூ அறிக்கை என*ப்பட்ட*து. இந்த அறிக்கை மருது சகோதரர்களின் புகழைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கதுடன் வெளியிடப்பட்டது. மருதுபாண்டியர் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது. மருது சகோதரர்களுக்கு ஆதரவளிக்கும் மக்களையும் எச்சரித்தது இந்த அறிக்கை. சட்ட ரீதியான ஆட்சியாளரே சிவகங்கையில் அமர்த்தப்படுவர் என்று இந்த அறிக்கை கூறியது.

**மருதுபாண்டியரின் திருச்சிராப்பள்ளி பிரகடனம்**

அக்னியூவின் அறிக்கைக்கு எதிராக மருதுபாண்டியரின் பெயரில் திருச்சிராப்பள்ளி கோட்டையில் பெரிய வாயிற்கதவு ஒன்றில் எதிர் அறிக்கை ஒன்று 1*80*1, ஜூன் 16-ல் ஒட்டப்பட்டது. இதன் மூலம் தென்னிந்திய மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதில் *கம்பெ*னியின் கொள்கைகள் கண்டிக்கப்பட்டன. கம்பெனி இந்திய மக்களை நாய்கள் போல நடத்துகிறது. இந்தியாவில் பல இனத்தவர் வாழ்ந்து வருவதால் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. மக்கள் *அந்நி*யரான ஆங்கிலேயருக்கு அடிபணிந்து செயல்பட வேண்டியுள்ளது. பரம்பரை மன்னர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும், அதிகாரங்களையும் மீண்டும் பெற்றுக் கொள்வது அவர்கள் உரிமையாகும். அந்நியரை விரட்ட மக்களிடமுள்ள ஒரே ஆயுதம் புரட்சியாகும் என்று திருச்சி பிரகடனத்தில் கூறப்பட்டிருந்தது.

மருதுபாண்டியரின் இந்த அறிக்கை தமிழக அரசிய வரலாற்றில் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராளிகள் அணியிலிருந்து வெளியிடப்பட்ட முதல் வேண்டுகோளாகும். மேல இந்த அறிக்கை அக்கால

கட்டத்தில் நவாப் தீவு எனப்படும் தென்னிந்திய மக்களின் சமூக அமைப்பையும், அதை ஆண் மன்னர்களின் தவறுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிற அதுமட்டுமல்லாமல் அரசியல் அறிவற்ற இந்த மக்களை எப்படியெல்லாம் தட்டி எழுப்பி வீர உணர்வு கொள்ளச் செய் முடியுமோ அப்படியெல்லாம் செய்வதற்காகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் நோக்கம் வீணாகவில்லை *பட்டி*தொட்டிகளிளெல்லாம் இருந்த பாமர மக்கள் கூட பங்கு கொள்ளும்படி செய்து அதை மக்களின் போராட்டமாக மார்ச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. புரட்சியின் இறுதிக்கட்டம் கர்னல் அக்னியூவின் படை தொண்டைமான் படைகளுடன் சேர்ந்து கொண்டு திருப்பத்தூர் கோட்டை, சிவகங்கையிலுள்ள ஒக்கூர் ஆகியவற்றைக் கைப்பற்றிய பின்பு 1801, ஜூலை 30-ம் தேதி மருது சகோதரர்களின் அரண்மனைச் சிறுவயல் கிராமத்தை அடைந்தது. அங்குள்ள அத்தனை வீடுகளும் கொளுத்தப்பட்டன. அங்கிருந்த மக்கள் தெற்கே உள்ள அடர்ந்த காட்டுக்குள் ஓடிவிட்டனர்.

*பி*ன்னர் கர்னல் ஸ்டுவர்ட் தலைமையில் பிரான்மலை முற்றுகை இடப்பட்டது. இது ஆங்கிலேயர்களுக்குச் சாதகமாக அமைந்து. இதற்கிடையில் ஊமைத்துரையின் தலைமையில் ஒரு படை மதுரைக் கோட்டையைப் பிடிக்கச் சென்று தோல்வியடைந்தது. மற்றொரு படை சின்னமருதுவின் மகன் சின்னத்தம்பியின் தலைமையில் முன்னேறியது. ஆனால் இந்த முன்னேற்றம் ஆங்கிலத் தளபதி பிளாக்பர்ளின் தாக்குதலால் தடைபட்டது.

1801, ஜூலை 21-ல் வெள்ளை மருதுவின் தலைமையிலான *படைப்பி*ரிவு கமுதிக் கோட்டையைத் தாக்கியது. அதனை தளபதி மெக்காலே முறியடித்தார். காளையார்கோவில் முற்றுகை அரண்மனைச் சிறுவயலைக் கைப்பற்றிய ஆங்கிலப் படை காளையார்கோவிலை முற்றுகையிடுவதற்கான அனைத் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பதினெட்டு அடி உயரமு கற்கோட்டையால் சூழப்பட்ட அழகு பொருந்திய காளை *முள்ள* கோவிலில், மருது சகோதரர்களின் தலைமையில் புரட்சியாளர்கள் ஆங்கிலேயர்களின் தாக்குதலை எதிர் நோக்கியிருந்தனர்.

இதனிடையே தங்கள் வசமிருந்த கடலோரப் பகுதிகளை எங்கிலேயர்களிடம் மருது சகோதரர்கள் இழந்தனர். ஆங்கிலேயர் மேற்கொண்ட சூழ்ச்சிகளின் விளைவாக மருதுவின் படை*ப்பி*ரிவில் இருந்த ஒற்றுமை தகர்க்கப்பட்டது. பலர் படையிலி*ருந்து* விலகி ஓட ஆரம்பித்தனர். பல சிற்றரசர்கள் ஆங்கிலேயரின் சூழ்ச்சிக்கு இறையாகி மருதுவுக்கு எதிராக ஆங்கிலேயர்களிடம் சேர்ந்து கொண்டனர். இந்நிலையில் காளையார்கோவிலுக்குச் செல்லும் ரகசிய வழிகளை அறிந்து வைத்திருந்த முகமது கலீல் என்பவரை தம் வசப்படுத்திக் கொண்டனர் ஆங்கிலேயர். காளையார்கோவில் வீழ்ச்சி

காளையார் கோவிலுக்குச் செல்லும் வழிகளை துரோகி முகமது கலீல் மூலம் அறிந்து கொண்ட ஆங்கிலேயர் தாக்குதல் நடத்த விரிவான ஏற்பாடுகளைச் செய்தனர். கா*ளையார்* மீது பன்முனைத் தாக்குதல் 1801, செப்டம்பர் 30-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. தளபதி அக்னியூ, இன்னஸ், கர்னல்

ஸ்பிரே, மேஜர் ஷெப்பர்ட் பிளாக்பர்ன் ஆகியோர்களின் தலைமையில் நான்கு புறங்களிலிருந்தும் காளையார்கோவில் தாக்கப் பட்டது. விடுதலைப் படையுடன் வெள்ளையர் படை முப்பது நாள் போராட வேண்டியதிருந்தது.

காளையார்கோவில் கோட்டைக்கு உள்ளும் வெளியிலும் கி*ளர்ச்சி*க்காரர்கள் சேர்த்து வைத்திருந்த ஆயுத இருப்புகளை ஆங்கிலப் படை தேடிப்பிடித்து அழித்தது. எஞ்சியிருந்த வீரர்களும் மருது சகோதரரும் சுரங்கப்பாதை வழியாக கோட்டைக்குத் தெற்கே உள்ள காட்டுப் பகுதிக்குள் ஓடிவிட்டனர். மருது சகோதரர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசு வழங்குவதாக ஆங்கிலேயர் அறிவித்தனர்.

ஆனால் ஆங்கிலப் படை காட்டுப்பகுதியில் புகுந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது. வழியில் பிடிபட்டவர்களை ஆங்காங்கே தூக்கிலிட்டு மகிழ்ந்தது. வெள்ளை மருதுவின் மகன்களான கருத்த தம்பியும், மோலிக்குட்டித் தம்பியும் தூக்கிலிடப்பட்டனர். இறுதியில் 1801, அக்டோபர் 19-ம் தேதி சோழபுரம் காட்டுப் பகுதியில் பெரிய மருதுவையு*ம்*, சின்னமருதுவையும் பிடித்தனர் ஆங்கிலேயர். அக்டோபர் 24-ம் தேதி திரு*ப்ப*த்தூர் கோட்டையில் மருது சகோதரர்கள் இருவரும் தூக்கிலிடப்பட்டனர். மற்றும் பல தலைவர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

மருது சகோதரர்களின் இந்த தியாகப் போராட்டம் பாமர மக்களின் உள்ளத்தில் முதன் முதலாக தேசிய உணர்வை விதைத்தது. ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதற்காக நடத்தப்பட்ட போர்களில் மருது சகோதரர்களின் இந்த தென்னிந்தியப் புரட்சியை முதல் சுதந்திரப் போர் என்று வர்ணிக்கிறார் டாக்டர் இராஜய்யன். புரட்சியின் தன்மை

இப்புரட்சி சரியானபடி திட்டமிட்டு நடத்தப்படாததால் தோல்வியடைந்தது. ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் புரட்சி தோன்றவில்லை. பல இந்திய சிற்றரசர்கள் முக்கியமாக கர்நாடகம், மைசூர், தஞ்சாவூர், ஹைதராபாத், திருவிதாங்கூர் மன்னர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவு அளித்தனர். புரட்சியாளர்கள் கொரில்லா போர் முறையைப் பின்பற்றாததாலும் தோல்வியடைந்தனர். மேலும் கிளர்ச்சியாளர்களிடம் போதுமான செய்தித் தொடர்பு வசதிகள் இருக்கவில்லை. இறுதியாக ஆங்கிலேயரின் ராணுவ வலிமை கிளர்ச்சியின் தோல்விக்கு முக்கிய காரணமாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழிக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலேயே 1800-ம் வருட கிளர்ச்சி நடத்தப்பட்டது. பரந்த பகுதிகளுக்குப் பரவ ஒரு மக்கள் இயக்கத்தின் தன்மையைப் பெற்றது. புகழ் பெற்ற தலைவர்கள் முக்கியமாக மருதுபாண்டியர் இப்புரட்சியை முன்னின்று நடத்தினர். இந்தக் கிளர்ச்சியின் போது ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் தாங்களாகவே முன்வந்து கிளர்ச்சியில் பங்கு பெற்றனர். ஆனாலும் கம்பெனியின் இராணுவ வலிமை, சிற்றரசர்களின் ஆதரவு, மூலவளங்கள் ஆகியவற்றினால் கிளர்ச்சி நசுக்கப்பட்டது.

## வேலூர் புரட்சி

(**Vellore M**utiny, 1806)

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வேலூர்க் கோட்டையில் தங்கியிருந்த இந்திய சிப்பாய்கள் 1806-ம் ஆண்டு ஜூலை 10-ம் தேதி புரட்சி செய்தனர். இது ஆங்கில ஏகாதிபத்தியம் சட்டரீதியாக இந்தியாவில் வேரூன்றிய பின் நடைபெற்ற முதல் பெரும் புரட்சியாகும். இது ஆங்கில ஏகாதிபத்திய வேரை வெட்டிச் சாய்க்க முதன் முதலாக நடந்த ராணுவப் பு*ரட்சியா*கும். இதனால் இந்தப் புரட்சியை *இந்திய* நாட்டின் முதல் சுதந்திரப் போர் என்று கூறலாம். இதற்குப் பிறகு ஆங்கில ஆட்சியை எதிர்த்து பல புரட்சிகளும் கலகங்களும் ஏற்பட்டாலும் வேலூர்ப் புரட்சி இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்க*ப்பட* வேண்டிய ஒரு நிக*ழ்ச்சியாகும். 185*7 ல் நடைபெற்ற சிப்பாய் கலகத்திற்கு வேலூர்ப் புரட்சி ஒரு முன்னோடியாக விள*ங்கியது* வேலூரின் புகழ் சங்க காலத்து தமிழகத்தை ஆட்சி புரிந்த ஈரமும், வீரமும் ஒருசேரப் பொருந்திய வேந்தர்களுள் ஒருவன் ஒய்மா நாட்டு நல்லியக் கோடன் ஆவான். பத்துப் பாட்டுள் மூன்றாவது பாட்டாகிய *சிறுபாணாற்றுப்ப*டை போற்றும் தலைவன் இவன் ஆவான். நல்லியக் கோடனின் பெருமை வாய்ந்த ஐந்து ஊர்களில் வேலூரும் ஒன்றாகும். வேல மரங்கள் அதிகமாக இருந்தமையால் அந்த இடம் வேலூர் என்ற பெயர் பெற்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சிறுபாணாற்று*ப்ப*டை வேலூரின் அழகினை விவரித்துக் கூறுகிறது. இப்படி சங்க காலம் முதல் புகழ் பெற்று விளங்கிய வேலூர் தற்போது வேலூ*ர்* மாவட்டத்தின் தலைநகராக உள்ளது.

வேலூரில் உள்ள கோட்டையும், கோவிலும் இன்றும் இந்த பெருநகரின் அழகிற்கு இன்றியமையாத அணிகலன்களாக உள்ளன. வேலூர்க் கோட்டை தமிழகத்தின் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஒருசில கோட்டைகளுள் ஒன்றாக உள்ளது. பலம் வாய்ந்த இந்தக் கோட்டை சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள பத்ராசலத்து பொம்மி ரெட்டியார் என்பவரால் கட்டப்பட்டதாகும். எதிரிகள் எளிதில் நுழைந்து விடாதபடி கட்டப்பட்ட வலிமைமிக்க கோட்டையாகும். கோட்டைக் கட்டிடக்கலைக்கு தென்னிந்தியாவில் இக்கோட்டையே சிறந்த எடுத்துக் காட்டாகும். இக்கோட்டையின் வடகிழக்குப் பகுதியில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய கோவிலையும் நிறுவினார் பொம்மி ரெட்டியார். இந்தக் கோவிலில் உள்ள கல்யாண மண்டபம் சிறந்த சிற்பக் கலைக்க*ளஞ்சி*யமாக விள*ங்கு*கிறது.

இந்த வேலூர் கோட்டையில் தான் சுமார் இரண்டு *நூ*ற்றாண்டுகளுக்கு முன்பாக உலகமே திகிலடையும்படியான வீரப்புரட்சி ஒன்று நடைபெற்றது. ஆம், பத்ராசலத்து ரெட்டியார் கட்டிய கோட்டை ஏகாதிபத்திய வெறியர்களுக்கு கல்லறையாக மாறியது. சுதந்திர வீரர்களின் பாசறையாக காட்சியளித்தது. ***ஆங்கிலே***யர் அஞ்சத்தக்க எரிமலையாய் உருக்கொண்டது!

**1806-ம் வருட வேலூர்ப் புரட்சிக்கான காரணங்கள்**

1) **புரட்சியாளர்களின் மைய இடமாக வேலூர்**

   வேலூர் புரட்சியாளர்களின் மைய இடமாக விளங்கியது. இதற்கு பல மூலகாரணங்களைக் கூறலாம்.

a) முதலாவது, தென்னகத்தில் நடைபெற்ற பாளையக்காரர் களின் புரட்சியை அடக்கிய ஆங்கிலேயர்கள் அங்கு பலரைக் கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தனர். இந்தக் கைதிகள் ஆங்கிலேயர்கள் மீது வெறுப்பு கொண்டிருந்தனர். ஆங்கிலேயர்களுக் கெதிராக புரட்சி செ*ய்ய*வும் தயாராக இருந்தனர்.

b) இரண்டாவதாக, தமிழ்நாடு முழுவதும் பல இளைஞர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அதன் காரணமாகத் தங்கள் சொத்துக்களை இழந்து வேலையில்லாமல் திரிந்தனர். அவர்கள் ஆங்கிலேயரின் படையில் சேர்ந்து வயிற்றுப் பிழைப்பிற்காகப் பணியாற்றினர். அவர்களிடம் ஆங்கிலேய எதிர்ப்பு மறையவே இல்லை. அப்போது வேலூர்க் கோட்டையை 1500 இந்திய வீரர்களும் 379 ஐரோப்பியர்களும் காவல் புரிந்து வந்தனர். இந்த இந்திய வீரர்கள் புரட்சி செய்யும் மனப்பான்மையுடன் காண*ப்ப*ட்டனர்.

c) மூன்றாவதாக, மைசூர்ப் போரில் திப்புசுல்தான் கொல்லப் பட்ட பிறகு அவரது 12 ஆண் பிள்ளைகளும், 6 பெண் பிள்ளைகளும் வேலூரில் தான் சிறை வைக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் குடும்பத்தினருடனும், வேலைக்காரர்களுடனும் கோட்டையில் வாழ்ந்து வந்தனர். திப்புசுல்தானுக்கு நெருக்கமான குடும்பத்தவர் பலர் வேலூரில் வந்து குடியேறினர். திப்பு சுல்தான் குடும்பத்தினர் சுதந்திரமாக நடமாடினர். எனவே இவர்கள் புரட்சியாளர்களுடன் எளிதில் தொடர்பு கொள்ள முடிந்தது. புரட்சியை தூண்டிவிட முடிந்தது. இவ்வாறு வேலூர் வீழ்ந்து விட்ட புரட்சியாளர்களின் மையமாக விளங்கியது. இதனால் தான் வேலூர் புரட்சி வெடித்தது.

**2) புரட்சியாளர்களின் இரகசிய உடன்படிக்கைகள்**

புரட்சியாளர்கள் பக்கீர் என்ற மதபோதகர்கள் வேடம் அணிந்து பல ஊர்களுக்குச் சென்று அங்கங்கே இருந்து படைத் தலங்களில் புரட்சியைத் தூண்டி விட்டனர். இந்தியாவை ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுவிக்க வேண்டும் என்று இந்திய சிப்பாய்களிடையே போதித்தனர். இரவு நேரங்களில் இரகசியத் கூட்டங்கள் நடத்தி ஒவ்வொரு படைப் பிரிவிலும் புரட்சி செய்வதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்தனர். தென் இந்தியா முழுவதும் அனைத்துப் படைப் பிரிவிலும் ஒரு குறிப்பிட்ட நாளில் புரட்சி வெடிக்கச் செய்து அனைத்துப் படைத்தலங்களையும் கைப்பற்றி ஆங்கில ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதே இந்த புரட்சியாளர்களின் திட்டமாகும்.

இந்த தீவிரப் புரட்சியாளர்கள் இந்தியச் சிப்பாய்களின் இல்லங்களுக்குச் சென்றும், பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் நடத்தியும், மத போதனைகள் செய்தும் புரட்சியைத் தூண்டி விட்டனர். இந்தப் புரட்சியாளர்களில் திப்புசுல்தான் குடும்பங்களுக்கு நெருக்க மானவர்கள் பலர் இருந்தனர். இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் புரட்சியைத் தூண்டி விட்டார்கள். இந்தியப் படை வீரர்கள் புரட்சியாளர்களுக்குப் பேராதரவு அளித்தனர்.

**3) கம்பெனி அறிமுகப்படுத்திய புதுமாதிரியான தொப்பி**

இப்படி தென்னிந்தியா முழுவதும் புரட்சிக்கனல் ஓங்கியிருந்த சமயத்தில் வேலூர்க் கோட்டையிலிருந்த தமிழ் வீரர்களின் இதயத்தில் ஈட்டி எடுத்து குத்துவதைப் போன்ற கொடிய செயல்களைச் செ*ய்ய* ஆரம்பித்தது ஆங்கிலேய அரசு. அப்போது சென்னை மாநிலத்தின் தலைமை தளபதியாக இருந்த ஜான் கிரடாக் என்பவர் இந்திய வீரர்களின் உள்ளத்தைப் புண்படுத்தும் விதமாக வீரர்களின் உடையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

சென்னை மாநில சிப்பாய்களுக்கு ஒருவகையான புதிய தலைப்பாகை அணிவதற்கான ஆணை 1805, நவம்பர் 14-ல் பிறப்பிக்கப் பட்டது. அத்துடன் புதுவகையான காலுறைகளும், தோலினால் செய்யப்பட்ட குல்லாய் செண்டுகளும் (Leather Cockades), இறகு செண்டுகளும் அணிய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். மேலும் மார்பில் சிலுவையைப் போன்ற ஒரு பொருளைத் (Tunscrew) தொங்க விட்டுக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

இவை தவிர, இந்து ராணுவ வீரர்கள் பயிற்சிக்கு வரும் போது தங்கள் காதுகளில் கடுக்கண் அணியக்கூடாது என்றும் நெற்றியில் திருநீறு இடக்கூடாது என்றும் கட்டளையிட்டனர். இஸ்லாமிய வீரர்கள் தங்கள் தாடிகளை முற்றிலும் வழித்து விடவேண்டும் என்றும், மீசை*யைக்* கூட ஒரு குறிப்பி*ட்ட* வகையில் ஒரு குறிப்பிட்ட அளவிலே கத்தரித்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

இத்தகைய தேவையற்ற திடீர் உத்தரவுகளால் இந்திய சிப்பாய் களிடம் பெரும் மனக்கசப்ப எற்பட்டது. முக்கியமாகத் தமிழ் வீரர்கள் தங்கள் சுயமரியாதையை விற்றுவிட ஒருநாளும் தயாராக இல்லை. தலைமுறை தலைமுறையாகத் தங்கள் ரத்தத்தில் ஊறிவந்த பண்பாடுகளை இழிவுபடுத்த அவர்கள் மனம் இணங்கவில்லை. இவ்வாறு கலக்கமடைந்த இந்து மத வீரர்களும், இஸ்லாமிய வீரர்களும் இந்த ஆணைகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்தனர். தங்கள் மதக் கோட்பாடுகளைப் பேணிக் காக்க முடிவு செய்தனர். இதனால் அவர்களிடம் புரட்சிக் கனல் மேலோங்கி நின்றது.

**4) வேலூர்ப் படைவீரர்களின் எதிர்ப்பு படைத் தளபதியின் புதிய ஆணையின்படி** 1806, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் புதுத் தொப்பிகள் வேலூர்ப் படைப்பிரிவுக்கு அனுப்பப்பட்டது. வேலூர்க் கோட்டையில் முகாமிட்டிருந்த நான்காவது படையின் இரண்டாவது பிரிவு வீரர்கள் இந்த தலைப் பாகையை அணிய மறுத்தனர். இந்த செய்தி சென்னையை அடைந்ததும், ஆணைக்குக் கட்டுப்படாத போர் வீரர்களை விசாரணை செய்ய சென்னை அரசு ஆணையிட்டது. உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த எண்ணங்களை ஒளிக்காமல் வெளியிட்ட வேலூர் வீரர்கள் விசாரணைக்காக சென்னை கொண்டு செல்லப்பட்டனர்.

கர்னல் மிக்கிரஸ், காமஸ் மாரி, போர்பஸ் ஆகியோர் அடங்கிய 'நீதி மன்றம்' விசாரணை செய்து தீர்ப்பளித்தது. அதன்படி ஒரு முஸ்லீம் வீரனுக்கும், இந்து வீரனுக்கும் தலா தொள்ளாயிரம் சாட்டையடிகள் கொடுக்கப்பட்டது. மற்ற

பத்தொன்பது பேருக்கு தலா ஐநூறு சாட்டையடிகள் கொடுக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் புரட்சி செய்த வேலூர்ப் படைப்பிரிவையே கலைத்து விட்டு புதுப்படைப் பிரிவை அமைத்தது, கம்பெனியின் இந்த கொடுஞ்செயல்கள் வேலூர்ச் சிப்பாய்கள் உள்ளத்தில் ஆத்திரத்தை ஊட்டியது. அவர்களிடம் ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்தியது.

### 5) திப்புசுல்தான் வாரிசுகளின் தூண்டுதல்

*திப்பு*சுல்தான் இறந்த பிறகு மைசூரில் இருந்த அவரது குடும்பங்கள் வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தன. இந்த அரச குடும்பத்தைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேலூர் சிறைக்கு அழைத்து வரப்பட்ட போதே அவர்களைப் பின்தொடர்ந்து வேலூரில் குடியேறினர். இவர்களில் பலர் கோட்டையில் சிறை வைக்கப்பட்ட அரச குடும்பங்களில் பணியாளர்களாக கோட்டைக்குள் சென்று வர அனுமதிக்கப் பட்டிருந்தனர்.
*திப்பு*வின் மகன் பட்டேல் ஹைதர் மற்றும் அப்துல் ஹாலிக் மொகைதீன், முகமது யாசின், முகமது சுபான் ஆகிய இளவரசர்களுக்கும் புரட்சியாளர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இரகசிய ஆலோசனைகள் பல நாட்கள் நடத்தப்பட்டன. திப்புவின் புதல்வர்கள் புரட்சியாளர்களுக்கு ஊக்கமளித்து இந்தியப் படைகளில் உள்ள புரட்சியாளர்களை ஒன்று திரட்ட ஆதரவளித்தனர். புரட்சியாளர்களின் தலைவர்கள் அரச குடும்பத்தின் பணியாளர்களாக வேடம் அணிந்து கோட்டைக்குள் சென்று இளவசரர்களைச் சந்தித்தனர்.

வேலூர்ப் புரட்சி வெடிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக புரட்சியாளர்களின் தலைவர்கள் கோட்டைக்குள் சென்று திப்புவின் இளவரசர்களைச் சந்தித்தனர். ஆங்கில ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் அவர்களால் அழிக்கப்பட்ட ஆற்காடு, வாலாஜாபாத் நவாப்களின் வாரிசுகளையும் மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்றும் அதற்காகத் தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்யத் தயார் என்றும் அனைவரும் சத்தியம் செய்து கொண்டனர். இவ்வளவும் மிகவும் ரகசியமாக நடைபெற்றன. புரட்சி 1806, ஜூலை 10-ம் தேதி வெடித்தது. புரட்சி வெடித்த போது வேலூர்க் கோட்டையின் தளபதியாக இருந்தவர் கர்னல் கேன் கோர்ட் என்பவராவார். புரட்சி பொங்கி எழப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் வேலூர்க் கோட்டையில் காணப்பட்டன. புரட்சியின் போக்கு

### a) புரட்சி வெடித்தது

இந்தச் சூழ்நிலையில் 1806, ஜூலை 10-ம் தேதி கோட்டையில் ராணுவ நாள் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே முதல் நாள் இரவு சிப்பாய்கள் அனைவரும் கேர்ட்டையினுள் உறங்க அனுமதிக்கப்பட்டனர். கோட்டை சிப்பாய்களுள் ஜமோதர் ஷேக் *காசிம்* என்பவன் புரட்சிக்கு முக்கிய காரணமாக விளங்கினான், ஜூலை 9-ம் தேதி இரவு எங்கும் ஒரே அமைதி. நடைபெறப் போகும் இரத்தப் புரட்சியைப் பற்றி சாடை காட்டி நட்சத்திரங்கள் பேசிக் கொண்டன!

1806, ஜூலை 10-ம் தேதி விடியற்காலம் இரவு 2.00 மணிக்கு *பு*ரட்சி வெடித்தது. ஆம், இந்தியச் சிப்பாய்களின் படைத் தலைவர்களின் தலைமையில் புரட்சி சிப்பாய்கள் அணிவகுத்தனர். *அவ*ர்களுக்கு ஆயுதங்கள் வழ*ங்கப்ப*ட்டன. 500 சிப்பாய்கள் அடங்கிய படை*ப்பி*ரிவு ஆங்கிலப் படைத் தலைவர்கள் தங்கியிருந்த மாளிகைக்கு அனு*ப்பப்பட்ட*து. புரட்சிப் படையினர் வெவ்வேறு இடங்களை *அடை*ந்ததும் சுடத் தொடங்கினர்.

**b) புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் கோட்டை**

ஷேக்காசிம், சுபேதார் ஷேக் காதம், ஜமேதார் ஷேக் ஹுசைன் ஆகியோர் புரட்சிப் படையை நடத்திச் சென்றனர். அனைவரும் ஒரே நேரத்தில் சுடத் தொடங்கினர். சுட்டுக் கொண்டே இருந்தனர். வெளியே வந்த ஆங்கிலப் படைத் தளபதிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர். நூற்றுக் கணக்கான ஆங்கில வீரர்களும் கொல்லப் பட்டனர். கோட்டையிலிருந்து முக்கியமான பகுதிகள் புரட்சி வீரர்களால் கைப்பற்றப்பட்டன. கோட்டைக்குள் இருந்த ஜலகண்டேஸ்வரர் ஆலயமும் கைப்பற்றப்பட்டது. கோட்டையில் இருந்த வெடிமருந்து கிடங்கு கைப்பற்றப்பட்டது. கோட்டையின் பிரதான வாயில் புரட்சியாளர்களின் கையில் சிக்கியது. அங்கு காவலில் இருந்த கர்னல் மி*க்கி*ராய் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றும் ஒரு தளபதி வில்சனும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புரட்சி தொடங்கியவுடனே திப்புசுல்தான் குடும்பங்களின் பணியாளர்களும் திப்புவின் இளவரசர்களில் சிலரும் புரட்சி*யாள*ர்களுடன் இணைந்தனர். அதிகாலை ஐந்து மணியளவில் புரட்சியாளர்கள் கோட்டை முழுவதையும் கைப்பற்றினர். புரட்சியாளர்கள் அரண்மனைக்குள் இருந்த இளவரசர் மைசுதினைச் *சந்தி*த்தனர். அவர் தனது தந்தை திப்புசுல்தானின் புலிக் கொடியைக் கொடுத்து கோட்டையின் கொடிமரத்தில் ஏற்ற உத்தரவிட்டார். அதன்படி திப்புவின் கொடி கோட்டையில் பறக்க விடப்பட்டது. c) ஆங்கிலப் படைகளின் எதிர்த் தாக்குதல்

கோட்டையில் திப்புவின் கொடி ஏற்றப்பட்ட இச்சமயத்தில் புரட்சியாளர்களின் ஒரு பிரிவினரும், திப்புவின் குடும்பப் பணியாளர்களில் ஒரு பிரிவினரும் கோட்டைக்குள் இருந்த கஜானாவை உடைத்துக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். இதைக் கேள்விப்பட்ட மற்ற புரட்சியாளர்களும் கொள்ளையடிக்கத் தொடங்கினர். இச்செய்தி வெளியே பரவியதும், கோட்டையின் வெளியில் இருந்தும் பலர் கொள்ளையடிப்பதற்காகக் கோட்டைக்குள் புகுந்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் புரட்சியாளர்களின் அணி சிதைந்தது.

இதற்கிடையில் அதிகாலை அங்கு வந்த மேஜர் கோட்ஸ் என்பவன் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு புத்திசாலித்தனமாக வேலூரிலிருந்து 16 மைல் தூரத்திலிருந்து ஆற்காடு கான்டோன் மெண்டின் காவலன் கில்லஸ்பிக்குச் (Gillespie) செய்தி அனுப்பினான். கொதித்தெழுந்த கில்லஸ்பி ஒரு பெரும் படையுடனுடம் கர்னல்

கென்னடி, கேப்டன் யங், லெப்டினன்ட் வுட்ஹவுஸ் ஆகியோருடன் காலை பத்து மணி அளவில் வேலூர்க் கோட்டை வந்தடைந்தான். கோட்டை முற்றுகையிட*ப்ப*ட்டது. அதற்குள்ளாக ஆயிரக்கணக்கான புரட்சியாளர்கள்

கொள்ளைப் பொருட்களுடன் வெளியேறி விட்டனர். எனவே கில்லஸ்பியின் படைகள் எளிதாக கோட்டையினுள் நுழைந்து விட்டது.

கண்ணில் பட்ட புரட்சி வீரர்களை வெள்ளையர் பட்டாளம் கொன்று குவித்தது. எட்டு மணி நேரம் விடுதலை வீரர்களின் பாசறையாக விள*ங்கி*ய வேலூர்க் கோட்டை அரை மணி நேரத்தில் ஆங்கிலேயர்களின் கையில் சிக்கியது. மொத்தம் மூவாயிரம் போகளுக்கு மேலாக கொல்லப்பட்டனர். 600-க்கும் மேற்பட்ட வீரர்கள் கைது செ*ய்ய*ப்பட்டு விலங்கிடப்பட்டனர். ஆங்கில வீரர்களும் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டிருந்தனர். பதினான்கு வெள்ளை அதிகாரிகள் பலியானார்கள். பல வெள்ளை பிரபுக்கள் படுகாயப்படுத்தப்பட்டனர். வேலூர்ப் புரட்சி தோல்வியடைந்தது. தோல்விக்கான காரணங்கள்

a) வேலூர்க் கோட்டை இறுதியில் இவ்வளவு எளிதில் பிடிபட்டதற்கு முக்கியமான காரணம் முதல் இரண்டு கோட்டை வாயில்களைப் பலமாகக் காக்காமல் புரட்சி வீரர்கள் அலட்சியமாக இருந்து விட்டதேயாகும். இல்லை என்றால் வெள்ளையர்களால் இவ்வளவு விரைவாகக் கோட்டையைக் கைப்பற்றியிருக்க முடியாது.

b) வேலூர்ச் சிப்பாய்களில் பெரும்பாலோருக்கு இருந்த சுதந்திர *உணர்ச்சி*க்கு உலை வைக்கக் கோட்டைக்கு உள்ளேயே சில கருங்காலிகள் இருந்தனர். அதைக் காட்டிலும் கொடுமையானது வேலூர்ப் புரட்சியை அடக்க வெள்ளையர்களுக்கு உதவியாக ஆற்காட்டிலிருந்து வந்த இந்தியக் கூலிப் பட்டாளமே பேருதவி புரிந்தது. வேலூர்ச் சிப்பாய்கள் சினந்தெழுந்த நேரத்தில் சற்றும் தயங்காமல் பாரதமெங்கும் இருந்த சிப்பாய்கள் வீரவாளை உருவியிருந்தால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எப்போதோ விரட்டப் பட்டிருக்கும்.

c) வேலூர்ப் புரட்சி முன்கூட்டியே நன்கு திட்டமிட்டே செய்யப் *பட்ட*து. ஆனாலும் தோல்வியடைந்து விட்டது. ஏனெனில் அது குறிப்பிட்ட நாளில் ஏற்படாமல் முன்கூட்டியே வெடித்துவிட்டது. இவ்வாறு முன்கூட்டியே நடந்து விட்டதால், திட்டமிட்டபடி செயலாற்ற முடியாமல் சிப்பாய்களும், புரட்சித் தலைவர்களும் த*டுமாறிப் போய்வி*ட்டனர். மேலும் புரட்சியாளர்கள் எதிர்பார்த்தபடி
அவர்களுக்கு உதவி வந்து சேரவில்லை . மருந்தும், படைக் கருவிகளும் பற்றாக் குறையாகி விட்டது.

d) வேலூர்ப் புரட்சியின் தோல்விக்கு முக்கியக் காரணம், சரியான தலைமையில்லாமல் போய்விட்டதே ஆகும். சரியான திட்டமிட்ட செயல் முறை இல்லை. சிப்பாய்களும் நவீன காலப் படைமுறையையோ, படைக் கலன்களை உபயோகிக்கும் முறையையோ அறியாதவர்களாக இருந்தனர். திப்புவின் பிள்ளைகளிடம் திறமை இல்லை. விவேகமும், தந்திரமும் இல்லாமல் செயல்பட்டனர்.

e) இறுதியாக, ஆங்கிலப் படைத் தளபதி கில்லஸ்பியின் கொடுஞ்செயல்களால் இந்திய வீரர்கள் படுகொலை செ*ய்யப்பட்*டனர். ஆங்கியேலர்கள் படைவலிமை முன்பு கோட்டையிலிருந்த வீரர்களால் ஈடு

கொடுக்க முடியவில்லை. மேலும் ஆங்கிலேயர்கள் பீரங்கிகளையும் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தினர். இதனால் புரட்சி எளிதாகத்

**தோற்கடிக்கப்பட்டது. வேலூர்ப் புரட்சியின் விளைவுகள்**

a) வேலூர்க் கோட்டையில் நடைபெற்ற புரட்சி ஆங்கில அரசை *அதி*ர்ச்சிக்குள்ளாக்கியது. புரட்சியில் தலைமை தாங்கிய வீரர்களை *விசாரிப்ப*தற்கு கர்னல் ஹர்கோர்ட் (Cornel Harcourt) தலைமையில் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. விசாரணைக் குழுவின் முடிவின்படி 1806, செப்டம்பர் 23-ல் வீரர்களுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதன்படி ஆறு பேர் பீரங்கியின் வாய்களில் கட்டி பிளந்தெறியப்பட்டனர். ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். எட்டு பேர் தூக்கிலிடப்பட்டனர். இரண்டு பேர் நாடு கடத்தப்பட்டனர். இ*ப்படி புரட்சி வீரர்க*ளின் உயிரைக் குடித்து உல்லாச நடனமாடியது *பி*ரிட்டிஷ் பே*யாட்சி!*

b) இப்புரட்சிச் செய்தி இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. இதன் விளைவாக சென்னை மாநில கவர்னராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவும், மாநிலத் தலைமைத் தளபதியாக ***விளங்கி*ய சர்.ஜான் கிர**டாக் என்பவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். அதே சமயத்தில் புரட்சியை அடக்கிய வெள்ளை வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பொருளும், பதவியும் வழங்கப்பட்டன.

ஆற்காட்டிலிருந்து பேய் போல வந்து வேலூர்க் கோட்டைக்குள் நுழைந்த கில்லஸ்பிக்கு 24,500 பொற்காசுகள் வழங்கப் பட்டன. அவன் ஆங்கில அரசால் பாராட்டப்பட்டான். சர்ஜண்ட்
பிராட்லிக்கு *2,8*00 வெண் பொற்காசுகள் பரிசளிக்கப்பட்டன. புரட்சி வீரர்களால் கொல்லப்பட்ட கர்னல் பான் கோர்ட்டின் மனைவிக்கு ஆண்டுக்கு நூறு பவுன்கள் ஊதியம் கொடுக்கப்பட்டது. ஆற்காட்டிலிருந்து வந்த கூலிப் பட்டாளத்திற்கு ஒருமாத சம்பளம் இனாமாகக் கொடுக்க*ப்ப*ட்டது. துரோகம் புரிந்த முஸ்தபா என்பவனுக்கு 2,000 பகோடாக்கள் பரிசளிக்கப்பட்டது. அவன் சுபேதாராக பதவி உயர்த்த*ப்ப*ட்டான்.

c) வேலூர்ப் புரட்சியில் பங்கு கொண்ட வீரர்களின் இரத்தம் குடித்த பரங்கிப் பேய்கள் 'சிப்பாய்களைப் புரட்சி செய்யத் தூண்டியவர்கள்' என்று கூறி மைசூர் இளவரசர்களின் குடும்பங்களைச் சேர்ந்த எட்டு பேர் விசாரிக்கப்பட்டனர். முடிவில் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருவருக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டது. ஒருவருக்கு பத்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. மூன்று பேர் விடுதலை செ*ய்யப்ப*ட்டனர். மைசூர் இளவரசர்கள் வேலூரிலிருந்து கல்கத்தாவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பலத்த காவலில் வைக்கப்பட்டனர்.

d) இப்புரட்சி ஆங்கில அரசுக்கு ஒரு பாடமாக அமைந்தது. வேலூர்ப் புரட்சிக்கான காரணங்களை ஆராய்வதற்காக 1806, ஜூலை 12-ல் மேஜர் ஜெனரல் பாட்டர் (Pater) தலைமையில் ஐந்து பேர்களைக் கொண்ட சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு பல சாட்சியங்களை விசாரித்து தனது முடிவுகளை ஆகஸ்ட் 9-ல் வெளியிட்டது. அதன்படி புதுவகைத் தலைப்பாகைகளை அணிய வ*ற்பு*றுத்தியதாலும், தங்கள் சமயச்

சின்னங்களை அணியக் கூடாது என்று வ*ற்புறுத்தப்பட்*டதாலுமே வீரர்கள் வெறுப்படைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் திப்பு சுல்தான் குடும்பத்தினர் சிப்பாய்கள் உள்ளத்தில் ஆத்திரத்தைப் புகுத்துவதில் வெற்றி கண்டார்கள். இவையே புரட்சிக்கான காரணங்கள் என்று விசாரணையின் முடிவில் தெரிவிக்கப் பட்டது.

e) வேலூர்ப் புரட்சியின் விளைவாக ஆங்காங்கே ஆங்கிலக் கம்பெனிக்கெதிராக கடுமையான எதிர்ப்புகள் ஏற்பட்டன. ஜூலை 12-ம் தேதி ஐதராபாத்தில் சிப்பாய் புரட்சிக்கான அறிகுறிகள் தென்பட்டன. அங்கு சிப்பாய்கள் பகிரங்கமாக புதுவகைத் தலைப் பாகையை அணிய மாட்டோம் என்றனர். பயந்து போன கம்பெனி *அ*ரசு புதுவகைத் தலைப்பாகையை அணிய வேண்டும் என்ற உத்தரவை வாபஸ் பெற்றது. ஆனால் இந்த எதிர்ப்புக்குக் காரணமான மூன்று சுபேதார்களுக்கும், ஒரு ஜமேதாருக்கும் ஆயுள் தண்டனை அளித்து பி*னாங்கிற்கு* அனுப்பிச் சாகடித்தது.

f) வேலூர்ப் புரட்சியின் எதிரொலி ஐதராபாத் புகைச்சலோடு மட்டும் நிற்கவில்லை. நஞ்சியா துர்க்கம், பெங்களூர், பல்லாரி, வாலாஜாபாத் ஆகிய இடங்களில் குமுறல் எழுந்தன. ஆனால் பிரிட்டிஷ் படைகள் துப்பாக்கி முனையில் அவற்றை அடக்கின. நந்தியா துர்க்கத்தில் சில சிப்பாய்கள் இராணுவத்தி*லிரு*ந்து விலக்கப் பட்டனர். வாலாஜா*பா*த்தில் ஒரு படைப் பிரிவினருக்கு *வாங்கப்பட்ட* ஆயுதங்கள் பறிமுதல் செ*ய்யப்பட்ட*ன.

g) வேலூர்ப் புரட்சியைத் தொடர்ந்து 1807-ல் காரைக்காலில் கலகம், மாப்பிளாக் கலகம் மற்றும் கீழக் கடற்கரைப் பகுதிகளில் கலகம் ஏற்பட்டது. ஆனால் இக்கலகங்கள் இரக்கமில்லாமல் நசுக்கப்பட்டன. வேலூரிலேயே 1838-ல் மறுபடி ஒரு பரபரப்பு ஏற்பட்டது. 1869-ல் மே மாதம் வேலூரில் மீண்டும் எரிமலை வெடிக்குமோ என்று அஞ்சும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு 1806-ல் நடைபெற்ற பெரும் புரட்சியின் எதிரொலியாக ஏற்பட்ட நிகழ்ச்சிகளும், உணர்ச்சிகளும் ஓய அறுபத்தி மூன்று ஆண்டுகளுக்கும் மேல் ஆயின.

இவ்வாறு 1806-ல் வேலூரில் நம் தமிழ் வீரர்கள் விதைத்த புரட்சி விதைகள் தான் நாளடைவில் வளர்ந்து சுதந்திர இயக்கம் என்ற பெரிய ஆலமரமாகத் தழைத்தது. வேலூரில் நம் முன்னோர்கள் சிந்திய இரத்தத்திலிருந்து கிளம்பிய மாவீரர்கள் தான் பகவத் சிங், ராஜகுரு, திருப்பூர் குமரன், ஹேமு கல்யாணி, வீரவாஞ்சி முதலியோர் ஆவர். சுருக்கமாகக் கூறினால், வேலூரில் பாரத அன்னையின் பிள்ளைகள் செய்த தியாகத்தின் பெரும் பலன்கள் தான் மகாத்மா காந்தியின் பிறப்பும் இந்தியாவின் விடுதலையும் ஆகும். ஏறத்தாள வேலூர்ப் புரட்சிக்கு ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதே காரணங்களுக்காக 1857-ல் மிகப் பெரிய சிப்பாய் கலகம் இந்தியாவில் வெடித்தது. இந்திய வரலாற்றில் முதல் சுதந்திரப் போர் என்று அது கூறப்பட்டாலும் 1806-ம் வருட வேலூர்ப் புரட்சியே இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்று கூறலாம். ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து பல புரட்சிகளும் கலகங்களும் ஏற்பட்டாலும் வேலூர்ப் புரட்சி இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்!

## நீதிக்கட்சி

**(THE JUSTICE PARTY)**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியிலும், சமுதாயத்திலும், அரசாங்கப் பதவிகளிலும், பிராமணர்களே உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர். அதே சமயம் *ஆங்கிலே*யர்களை எதிர்க்கக் கூடிய அரசியல் இயக்கமான காங்கிரஸ் தலைமையிலும் பிராமணர்களே இருந்தனர். இந்த விசித்திரமான நிலை அவர்களுக்கு அடுத்தபடியாக சமுதாய உயர்விலிருந்த பிள்ளை, முதலியார், நாயுடு, செட்டியார் போன்ற உயர் சாதியினரை அச்சப்பட வைத்தது. சமுதாயத்திலும், அரசாங்கத்திலும் தாங்கள் புறக்கணிக்கப் *பட்ட* நிலையில் இருப்பதாகக் கருதினர். எதிர்கால சீர்திருத்தங்களின் *பயன்கள் பிரா*மணர்களுக்கே போய்விடுமோ என்ற பயத்தில் அமை*ப்பு ரீதி*யாக திரளத் துவங்கினர். அதன் விளைவாக 1916-ல் தோன்றியதே *நீதிக்* கட்சியாகும்.

அதாவது நீதிக்கட்சி என்பது பிராமணரல்லாத உயர் ***சாதியினரு***க்காக அவர்களால் நடத்தப்பட்ட, அவர்களது கட்சியாக ***உருவெடுத்த**து. 1*936-ம் ஆண்டு வரை தமிழக அரசியலில் ஆதிக்கம் ***பெற்றிருந்த**து*. தேர்தலில் பங்கேற்று மூன்று அமைச்சரவை அமைத்து ***பணியாற்றிய**து.* இக்கட்சி திராவிட இனத்தின் மறுமலர்ச்சிக்கு *குறிப்பிட*த் தக்க செயல்களைச் செய்தது. திராவிடர்களை ஒன்று சேர்த்து, திராவிடரின் கொள்கையைப் பரப்பி பிராமணர்களுக்கு
எதிராகத் திருப்பியது நீதிக்கட்சியின் பெரும் செயலாகும். ஆனால் இறுதியில் மக்களின் ஆதரவிழந்து வீழ்ச்சியடை*ந்தது.* நீதிக்கட்சியின் எழுச்சிக்கான காரணங்கள்

**1) பிராமணர்களின் ஆதிக்கம்**

சென்னை மாகாணத்தின் 1911-ம் வருட மக்கள் தொகை கணக்குப்படி மொத்த மக்கள் தொகையில் 35 சதவீதத்தினர் பிராமணர் களாக இருந்தனர். இவர்களில் 75 சதவீதத்தவர் கல்வி கற்றவராக இருந்தார்கள். அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு அடிபணிந்து அலுவலராகவும், ஆலோசகராகவும், ஆசிரியராகவும், வழக்கறிஞராகவும், பொறியியலாளராகவும், அரசியல் தலைவராகவும், பத்திரிக்கை யாளராகவும் இருந்தனர். 1913-ம் வருடம் வாக்கில் மொத்தம் இருந்த 650 பட்டதாரிகளில் 452 பேர் பிராமணர்கள். நிரந்தர முன்சீப்கள் 128 பேரில் 93 பேர் பிராமணர்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த 16 உறுப்பினர்களில் 15 பேர் பிராமணர்கள்.

இப்படி அரசாங்கத்திலும், அரசியலிலும் பிராமணர்களே ஆதிக்கம் கொண்டிருந்தனர். ஆட்சிப் பொறுப்பில் பிராமணரல்லாதவர்களுக்கு அதிக வாய்ப்பில்லை. தங்களை நிர்வாகத்தில் ஈடுபடுத்திக் கொண்டு பயிற்சி பெற சூழ்நிலை இல்லை. இவ்வாறு பிராமணரல்லாதோர் ஆங்கிலேயர் முன் திறமையற்றவர்களாகக் கிடந்தனர்.

**2) பிராமணர் அல்லாதார் விண்ணப்பம்**

*பி*ராமண எதிர்ப்பு அரசியல் வடிவம் பெற்று ஒரு இயக்கத்தின் வழி இயங்குவதற்கு ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1892 ல்

சென்னை மாகாண பிராமணரல்லாதா*ர்* தங்கள் சமூக உரிமையைப் பெற அப்போது சென்னை மாகாண கவர்னராக இருந்த வென்லக் ***என்பவ***ரிடம் விண்ணப்பம் ஒன்று அளித்தனர். அதில் தங்கள் இ*னத்திற்கு* அரசு கல்வி வேலை வாய்ப்பில் முதன்மை *தரப்பட*வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இதனைத் ***தொடர்ந்து பிராம*ணரல்லா**த படித்த சில முற்போக்குத் தலைவர்கள் ஒன்று சேர்ந்தனர். தமக்கும் தம் இனத்திற்கும் முன்னேற்றம் தராத அனைத்தையும் எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்று திரண்ட னர்.

**3) திராவிடர் சங்கத்தின் தோற்றம்**

பிராமண எதிர்ப்பு இயக்கம் இருபதாம் நூற்றாண்டில் தான் ஆரம்பமானது. வருணாசிரமமும் சாதியும் நீக்கப்படாத வரையில்
தென்னக மக்களுக்கு அரசியலில் முன்னேற்றம் இல்லை என்பதை **1908-லிரு**ந்தே பலர் குரல் கொடுக்கத் தொடங்கினர். மூன்று சதவீதம் கொண்ட பிராமணர்கள் 97 சதவீதம் உடைய பிராமணரல்லாதவரை பின்னுக்குத் தள்ளுவதை மாற்ற முயன்றனர். 1909-ல் திரு.சுப்ரமணியம், திரு.புருஷோத்தமன் என்ற இரு வழக்கறிஞர்களால் சென்னை பிராமணரல்லாதவர்கள் சங்கம் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிராமணரல்லாதவர்கள் தங்கள் நலன் காக்க தீவிரமாகச் செயல்பட ஆரம்பித்தனர்.

**4) பிராமண எதிர்ப்புக்கு ஆங்கிலேயரின் ஆதரவு**

ஹோம்ரூல் இயக்கத்தினால் பிராமணர் வளர்ச்சி *அ*திகப்பட்டது. தேசிய இயக்கத்தில் அவர்களின் பங்கு அதிகமானது. இதனால் பிராமணர்கள் மீது ஆங்கில அரசு வெறுப்படைந்தது. மேலும் ஆங்கில அரசுக்கெதிரான விடுதலைப் போராட்டத்திலும் பிராமணர்கள் முக்கியப் பங்கெடுத்தனர். இதனால் பிராமணர் வ*ளர்ச்சியை*க் கட்டுப்படுத்த அரசு நினைத்தது. அதற்கான சூழ்நிலை தென்னகத்தில் காணப்பட்டது. பிராமணர், பிராமணர் அல்லாதார் பிரச்சனையை அது எளிதாகப் பயன்படுத்திக் கொண்டது. எனவே அரசு வேலை வாய்ப்புகளை சாதி அடிப்படையில் வழங்க முடிவு *செய்த*து. இது பிராமணல்லாதவர்களுக்கு ஆதரவாக இருந்தது.

**5) பிராமணரல்லாதாரின் அரசியல் இயக்கம் தோன்றுதல்**

பிராமணர்களின் வர்ணாசிரமக் கோட்பாடும் அரசு வேலை *வா*ய்ப்பில் அவர்களின் ஆதிக்கமும் பலவழிகளில் பிராமணரல்லாத, படித்த, வசதி படைத்தவர்களுக்கு துயரத்தை ஏற்படுத்தியது. அன்று தென்னிந்திய அரசியலில் பிரபலமாக இருந்த டாக்டர்.டி.எம்.நாயரும், தியாகராயரும் பிராமணர்களால் மிகவும் தாழ்வாக நடத்தப்பட்டனர். இதன் எதிரொலியே திராவிட இன மக்கள் ஓரணியில் ஒன்றுபட இயக்கப் பூர்வமான சக்தியாக உருவாக வழிவகுத்தது. இந்த *ஒருங்கி*ணைப்பு முயற்சி பல ஆண்டுகளாக இருந்தாலும் 1916-ம் ஆண்டு *அர*சியல் கட்சியின் உதயத்திற்கு உகந்த ஆண்டாக இருந்தது.

இந்த அரசியல் கட்சியின் தோற்றத்திற்கு ஜே.எம்.நல்லசாமி என்பவர் பெரும் முயற்சி எடுத்தார். பல கூட்டங்கள் கூடி விவாதித்த பிறகு

திரு.எதிராஜுலு என்பவர் வீட்டில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் டாக்டர் தியாகராஜ செட்டியார், டாக்டர் நடேச முதலியார், சிவஞானம், ஜனாப் முகமது, ஆரோக்கியசாமி போன்றோர் கலந்து கொண்டனர். அவர்கள் ஒரு அரசியல் கட்சியின் அவசியத்தை வற்புறுத்தினர். இவ்வாறு

பிராமணரல்லாத உயர் சாதியினர் கல்வித் துறையிலும் அரசு இயந்திரத்திலும் பிராமணர்களே முன்னணியில் இருந்ததை முறியடிக்க முயலத் தொடங்கினர்.

### 6) தென்னிந்திய நல உரிமை சங்கம்

இந்த அடி*ப்ப*டையில் தான் பிராமணரல்லாத தலைவர்களான டாக்டர் டி.எம்.நாயர், பனகல் அரசர், சர்.பி.தியாகராய செட்டியார், டாக்டர் சி.நடேச முதலியார் போன்றோர் 1916, நவம்பர் 20-ம் திே சென்னை நகரின் விக்டோரியா பொது மன்றத்தில் கூடினர். பிராமணரல்லாதார் நலன்களைக் காப்பதற்காக 'தென்னிந்திய நல உரிமை சங்கம்' என்ற அரசியல் கட்சியைத் தோற்றுவித்தனர். இவ்வாறு பிராமணரல்லாதோர் மாபெரும் ஒரு அரசியல் வடிவத்தின் கீழ் முதன் முதலாக இணைந்து செயல்பட ஆரம்பித்தார்கள். இச்சங்கத்தின் பொதுச் செயலாளரான தியாகராயர் சங்கத்தின் கொள்கைகளையும், நோக்கத்தையும் விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

### 7) நீதிக்கட்சி என்ற பெயர் ஏற்படல்

பிராமணர் அல்லாதாரிடம் திராவிட உணர்வை ஊட்ட ஆங்கிலத்தில் 'ஜஸ்டீஸ்', தெலுங்கில் 'ஆந்திர பிரகாசிகா', தமிழில் 'திராவிடன்' போன்ற இதழ்கள் வெளியிடப்பட்டன. தென்னிந்திய நலஉரிமை சங்கமும், இந்த இதழ்களும் பொது மக்களிடம் மாபெரும் வரவேற்பைப் பெற்றன. இதனால் தென்னிந்திய நல உரிமை சங்கம் 1917 முதல் ஜஸ்டீஸ் என்ற இதழின் பெயராலேயே அழைக்கப்பட்டது. இவ்வாறு தான் தமிழில் 'நீதிக்கட்சி' என்ற பெயர் பெற்றது. நீதிக்கட்சியின் கொள்கைகள்

நீதிக்கட்சியின் பொதுச் செயலாளர் தியாகராயர் கட்சியின் கொள்கைகளை வெளியிட்டார். மேலும் 1917, ஆகஸ்ட் மாதம் கோவை *ஒப்ப*ணக்காரர் தெருவில் நடைபெற்ற முதல் மாவட்ட மாநாட்டிலும், 1917, டிசம்பர் 28, 29-ல் சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டிலும் நீதிக் கட்சியின் கொள்கைகள் வெளியிடப்பட்டன.

a) ஆங்கிலப் பேரரசின் அமைப்பினுள் இந்திய நாடு சுதந்திரம் அடைய வேண்டும்.

b) பிராமணரல்லாத எல்லா வகுப்பினரிடையேயும் ஒற்றுமை யையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்த வேண்டும். அவர்களது. நலன்களைக் காப்பாற்ற சமுதாய அடிப்படையில் அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும்.

c) தென்னிந்தியாவில் உள்ள பிராமணரல்லாத எல்லா வகுப்பினர் இடையேயும் கல்வி வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம்,

பொருளாதார சீரமைப்பு, தொழில் முன்னேற்றம் ஆகியவைகளை உருவாக்க வேண்டும்.

d) பொது மக்களின் அபிப்பிராயங்கள் எல்லாப் பிரச்சனைகளிலும் தெளிவாக எடுத்துரைக்கப்பட வேண்டும்.

e) அனைத்து சமூகங்களும் உரிமை பெறும் பொருட்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமை வழங்க வேண்டும்

f) பிராமணரல்லாதாரின் இயக்கத்தின் அடிப்படை அன்பே தவிர பகையில்லை. இயக்கத்தின் குறிக்கோள் தங்கள் உரிமைகளைப் பெறுதலே ஆகும்

இந்தக் கொள்கைகளால் பலவகைகளில் உரிமைகள் மறுக்கப் பட்டுக் கிடந்த மக்களிடம் இந்தக் கட்சி எளிதாகச் செல்வாக்குப் பெற்றது. ஓராண்டு நிறைவடைவதற்குள் அதன் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக இருந்தது. நீதிக் கட்சியின் சாதனைகள்

**1) தமிழகத்தில் ஆட்சி அமைத்தல்**

1918-ம் ஆண்டு சாதி, வகுப்பு அடிப்படையிலான வாக்குரிமைப் *பட்டி*யல் தயாரிக்கும்படி நீதிக்கட்சி கோரிக்கை வைத்தது. இந்தக் கோரிக்கையை சவுத்பரோ வாக்குக் குழு (South Borough Voting Franchise Committee) நிராகரித்தது. எனவே அந்தக் குழுவின் அறிக்கையை நீதிக்கட்சி எதிர்த்தது. மேலும் கே.வி.ரெட்டியின் தலைமையில் ஒரு *வி*ண்ணப்பம் தயாரிக்கப்பட்டு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சமுதாய சமத்துவம் ஏற்பட சாதி, வகுப்பு அடிப்படையிலான வாக்குரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும் என்று அதில் கூறப் பட்டிருந்தது. இதுபற்றி ஆலோசிக்க மெஸ்டன் குழுவை (Meston Committee) அமைத்தது. மெஸ்டன் குழுவின் பரிந்துரைகளை நீதிக்கட்சி ஏற்று தேர்தலுக்குத் தயாரானது.

1919-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி சென்னை மாகாணத்தில் 1920, நவம்பர் 30-ல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் இரட்டையாட்சி முறையை எதிர்த்த காங்கிரஸ் பங்கேற்கவில்லை. ஆனால் நீதிக்கட்சி, ஹோம்ரூல் இயக்கம், முஸ்லீம் லீக், சென்னை மாகாண சங்கம் ஆகியவை *போ*ட்டியிட்டன. இந்தத் தேர்தலில் பிராமணரும், பிராமணர் அல்லாதாரும் முதல் முறையாக அரசியல் வழியாக மோத ஆரம்பித்தனர். தேர்தலில் மொத்தம் உள்ள 98 இடங்களில் 63 இடங்களில் நீதிக்கட்சி வென்றது. 127 பேர் கொண்ட மேல் சபையில்

81 இடங்களைப் பிடித்தது. இவ்வாறு தமிழகத்தில் முதன் முறையாக நடந்த ஓரளவு ஜனநாயக முறையிலான ஆட்சிக்கு நீதிக் கட்சி தலைமை ஏற்றது.

**2) முதல் நீதிக்கட்சி அமைச்சரவையின் சாதனைகள் : 1920-1923**

நீதிக்கட்சியின் முதல் முதல்வராக 1920-ல் சுப்பராயுலு ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குப் பின் 1921-ல் ராமராயநிங்கல் முதல்வரானார். இந்த அமைச்சரவை பல சாதனைகளைப் புரிந்தது.

a) பிராமணர் அல்லாதார் சமூகத் துறையில் முன்னேற வகுப்புவாரி உரிமை சட்டபூர்வ*மாக்கப்பட்ட*து. அதன்படி உள்ளாட்சி மன்றப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும், அரசு வேலை வாய்ப்பிலும் பிராமணரல்லாதவருக்கு இட ஒதுக்கீடு தருகிற 1921, 1922 ம் ஆண்டு வகுப்புவாரி பி*ரதி*நிதித்துவ ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

b) இதைத் தொடர்ந்து சமூக நீதி குறித்த சட்டத்தை நிறைவேற்றியது. 1922-ம் ஆண்டு ஆதிதிராவிடர்களை இழிவுபடுத்தும் 'பறையர்-பஞ்சமர்' என்ற சொல் நீக்கப்பட்டது. இனி அவர்கள் ஆதி திராவிடர் என்றே அழைக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு சமூ மறுமலர்ச்சிக்கான ஆணைகளை நீதிக்கட்சி வெளியிட்டது.

c) தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்தியது. கட்டாய இலவச தொடக்கக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. சென்னை மாநகராட்சியின் சில புள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் ***பயன்பெ***ற்றனர். மீனவர்களின் குழந்தைகள் கல்வி பயில கடற்கரைப் பகுதியில் 37 பள்ளிகள் துவக்கப்பட்டன.

d) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்ட புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்கும் திட்டத்தை நீதிக்கட்சி அரசாங்கம் தொடங்கி வைத்தது. இவர்களது ஆட்சிக் காலத்தில் 4,40,000 ஏக்கர் நிலம் இவ்வாறு வழங்கப்பட்டடது.

e) 1922-ல் சென்னை மாநில ஆலைகளுக்கு பொருளுதவிச் சட்ட ம் (Madras State Aid to Industries Act, 1922) கொண்டு வரப்பட்ட து. இச்சட்டம் ஆலைகளுக்கு பண உதவு செய்யவும், தண்ணீர் வசதிகள் செய்யவு*ம்,* ஆராய்ச்சியை அதிகரிக்கவும், முதலீட்டுத் தொகைக்கு குறைந்தளவு வருவாயாவது கொடுக்க வழி செய்யவும் முயன்றது.

**3) இரண்டாவது நீதிக்கட்சி அமைச்சரவையின் சாதனைகள்: 1923-1926**

முதல் நீதிக்கட்சி மந்திரி சபை நிறைவேற்றிய சட்டங்களால் மக்களின் விழிப்புணர்வு அதிகரித்தது. எனவே 1923-ல் நடைபெற்ற தேர்தலிலும் நீதிக்கட்சியே வென்றது. 1923, நவம்பர் 19-ல் பதவி *ஏற்ற* அமைச்சரவைக்கு மீண்டும் ராமராயநிங்கரே முதல்வரானார். நீதிக்கட்சியின் இரண்டாம் அமைச்சரவையில் சமூக மேம்பாடு குறித்த பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

a) இதுவரை ஆங்கிலேயர் நிர்வாகத்தில் இருந்த இந்திய மருத்துவத் துறையை இந்திய ஆட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மசோதா

நிறைவேற்றப்பட்டது. பின்னர் அது சட்டமாக்கப்பட்டது. இதன்படி சென்னையில் இந்திய முறை மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது.

b) கல்வி அமைச்சராக இருந்த பாத்ரோ முயற்சியால் ஆந்திரப் பல்கலைக்கழக மசோதா நிறைவேற்றப்பட்டது. இது சென்னை மாகாணத்தில் உள்ள தெலுங்கு மொழி பேசும் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டது. இதே போல தமிழ் பேசும் பகுதியில் தமிழ் வளர்ச்சிக்கான பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை ஆராய்ந்து செயல்படுத்த நீதிக்கட்சி இராமநாதபுரம் அரசர் தலைமையில் பி.டி.ராசனை செயலராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது.

c) 1924-ல் பணியாளர் நியமன வாரியம் (Staff Selection Board) அமைக்கப்பட்டது. இதுவே 1929-ல் பப்ளிக் சர்வீஸ் கமிஷனாக மாறியது. இந்தியாவிலேயே இதுவே இத்தகைய முதல் அமைப்பாகும்.

d) நீதிக்கட்சி சமய மறுமலர்ச்சிக்கும், சமய சீர்திருத்தத்திற்கும் வழிகாண முயன்றது. இந்துக் கோவில்களில் காணப்பட்ட குறைபாடு களைப் போக்குவதற்காக இந்து அறநிலைய மசோதா' நிறைவேற்றப் பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் கோவில்களில் உபரியாக கிடைக்குப் பணத்தைப் பொதுச் செயல்களுக்குப் பயன்படுத்தும் உரிமையை அரசு பெற்றது. அறநிலைய பாதுகாப்பு குழுவிற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சர்.பி.சதாசிவ அய்யர் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்தச் சட்டத்தினால் பிராமணர்கள் கோவில் நிர்வாகத்தில் ஆதிக்கம் செய்யும் நிலை தவிர்க்கப்பட்டது. அறநிலையங்களில் உள்ள சொத்துக்கள் ***சமூகப் பணிகளுக்கு***ப் பயன்படுத்தும் போக்கு உருவானது.

**4) மூன்றாவது அமைச்சரவை: 1926-1930**

1926-ல் மூன்றாம் முறையாக நடந்த தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே
நீதிக்கட்சியைச் சேர்ந்த ஏ.சுப்பராயன் தலைமையில் சுயேட்சி அமைச்சரவை அ*மைக்கப்பட்ட*து. இந்த சுயேட்சி அமைச்சரவையில் தான் முதன் முறையாக பெண் ஒருவர் சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த சிறப்பு பெற்ற பெண்மணி டாக்டர் முத்துலட்சுமி ஆவார். இவரால் பெண் விடுதலைக்கு ஆதாரமான சட்டங்கள் இயற்றப்பட வழி ஏற்பட்டது.

a) இந்த அமைச்சரவை காலத்தில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பொது இடங்களில் இழிவாக நடத்தப்படும் முறைக்குத் தீர்வு வந்தது. அரசுப் பொதுப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சேர்த்துக் கொள்ள*ப்ப*டவில்லை என்றால் அரசு நிதி உதவி அளிக்கப்பட மாட்டாது என்று அறிவிப்பு வெளியிடப் பட்டது.

b) தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் வளர்ச்சித் திட்டமாக 1929-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைக்க*ப்ப*ட்டது. இது

தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் கல்வி பெற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. நீதிக்கட்சியின் பிற சாதனைகள்

a) நீதிக் கட்சியின் நிர்வாகத்தின் போது தான் சென்னை மாநகராட்சி விரிவடைந்தது. புதுப்புது கட்டிடங்கள் எழுந்தன. ஆண்களைப் போல பெண்களும் வாக்குரிமை பெற்றனர்.

b) கோவில்களில் பெண்கள் பணிப் பெண்களாக அர்ப்பணிக்கும் தேவதாசி முறையை ஒழிக்க நீதிக்கட்சி அரும்பாடுபட்டது. 1930-ம் ஆண்டு அதனை ஒழிப்பதற்கான மசோதாவை முத்துலட்சுமி அம்மையார் கொண்டு வந்தார். அந்த மசோதா நிறைவேற்றப்பட்டாலும் சட்டமாக வில்லை. எனவே மசோதா நிலையிலேயே பிரசுரிக்கப்பட்டது. இந்த முறை ஒழிப்பால் ஆலயங்கள் அறநெறி குன்றிய நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டன. விலை மகளிர் ஒழிப்பும் நீதிக்கட்சியின் கவனத்தை ஈர்த்தது. அதனைத் தடை செய்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது. நீதிக்கட்சியின் வீழ்ச்சி

1930-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரசும், சுயராஜ்யக் கட்சியும் போட்டியிடாததால் நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைப் பெற்றது. முனிசாமி நாயுடுவின் தலைமையில் நான்காவது அமைச்சரவை பதவி ஏற்றது. 1932-ல் போப்பிலி ராஜா தலைமை அமைச்சரானார். இந்தக் கால கட்டங்களில் நீதிக்கட்சியில் *பி*ராமணர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அமைச்சரவையிலும்
பங்கு பெற்றனர். 1934-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியடைந்தது. ஆனால் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்க மறுத்ததின் காரணமாக நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது. 1935-ம் வருடச் *சட்டப்படி 19*37-ல நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி *வெற்றி பெற்ற*து. ராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை பதவி ஏற்றது. அதன் பிறகு நீதிக்கட்சி தலை தூக்கவே இல்லை .

1938, டிசம்பர் 22-ல் நீதிக்கட்சியின் தலைவராகப் பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிக்கட்சியின் தலைமையை ஏற்ற பெரியா*ர்* தம் கொள்கைகளை தீவிரப்படுத்த மேலும் ஒரு வாய்ப்பு கிடைத்தாகக் கருதினார். 1944, அக்டோபர் 4-ம் தேதி சேலத்தில் பெரியார் தலைமையில் நீதிக்கட்சியின் மாநில மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் அண்ணாவால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின்படி நீதிக்கட்சி 'திராவிடர் கழகம்' என்ற புதுப் பெயரைப் பெற்றது. நீதிக்கட்சி திராவிட இயக்கமாக மாறியது. இவ்வாறு திடீரென்று வளர்ந்த நீதிக்கட்சி நீர்க்குமிழி போல திடீரென்று காணாமல் போய்விட்டது! **நீதிக்கட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

a) பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தோன்றிய நீதிக்கட்சி பிராமணரல்லாத உயர் சாதியினரின் இயக்கமாகவே *காணப்பட்*டது. சாதாரண மக்களைப் பற்றிச் சிந்திக்கவும் அவர்கள் குறைகள் பற்றிச் சிந்திக்கவும் நீதிக்கட்சிக்கு நேரமில்லை. இக்கட்சியிலிருந்த செல்வந்தர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள் அடிக்கடி கூட்டங்கள் போட்டு உல்லாசமாக இருப்பதிலேயே கருத்தாக இருந்தார்கள். எனவே பிராமணரல்லாத தாழ்ந்த சாதி மக்களின் ஆதரவை இழந்தது நீதிக் கட்சி.

b) பிராமணர்களின் மேலாதிக்கத்தை ஒடுக்கி திராவிட இனத்தவரை மேம்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது நீதிக்கட்சி. இந்த நோக்கத்திற்காக ஆங்கிலேய ஆதிக்க *சக்தி*க்குத் துணை போகவும் அவர்கள் தயங்கவில்லை. விடுதலைப் போராட்டத்தில் விலகி இருந்தது மட்டுமல்லாமல் சில எதிர் நடவடிக்கை களையும் மேற்கொண்டனர். இது மக்கள் எதிர்ப்பை
ஏற்படுத்தியது.

c) சமய நம்பிக்கைகளில் பழமைப் பிடிப்பும், சாதிப் பாகு*பா*ட்டில் அசைக்க முடியாத நம்பிக்கையுமுள்ள இந்துக்களே நீதிக் கட்சியில் மேலிடங்களையும், அதிகாரத்தையும் அனுபவித்து வந்தனர். தாழ்த்தப் பட்டோரும், தீண்டத்தகாதவர்களும், முஸ்லீம்களும்
இக்கட்சியிலிருந்து அகற்றப்பட்டனர். நீதிக்கட்சி பதவிக்கு வந்த உடனேயே கட்சியிலிருந்த தெலுங்கர்களுக்கும், தமிழர்களுக்கு மிடையே போட்டி ஏற்பட்டது.

d) மேல்மட்ட சாதியைச் சேர்ந்த ஒருசில பிராமணரல்லாதாருக்கு ஆட்சியில் வேலை தேடித்தரும் ஒரு தரகர் சங்கமாகவே நீதிக்கட்சி விளங்கியது. பதவிக்கு வந்ததும் அதன் அடிப்படைக் கருத்தான சமூக சீர்திருத்த நோக்கு காற்றில் பறக்கவிடப்பட்டது. அத்துடன் சாதிப் பிடிப்பில் நம்பிக்கையுள்ள சில மேல்மட்ட இந்துக்களின் குடும்ப சொத்தாகவும் காணப்பட்டது.

e) காங்கிரசார், பிராமணர்கள், ஹோம்ரூல் இயக்கத்தினர், சுயராஜ்ய வாதிகள் ஆகியோரின் கடுமையான எதிர்ப்புகளை நீதிக்கட்சியினால் சமாளிக்க முடியாமல் போய்விட்டது. இக்கட்சியை ஒரு அரசியல் இயக்கமாக மாற்ற உள்ளுரமும், விவேகமும், வலிமையும் கொண்ட தலைமை இல்லை.

1) மேலும் காமராஜ் தலைமையில் வேகமாக வளர்ச்சியடைந்த காங்கிரஸ் எல்லா சாதியினருக்கும் சம வாய்ப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற திட்டங்களைப் பின்பற்றியதால் அதே திட்டங்களைக் கொண்ட நீதிக்கட்சி செல்வாக்கு இழந்தது.

ஆனாலும் நீதிக்கட்சியின் எழுச்சி பிராமணரல்லாதவர்களுக்கு புத்துணர்வு கொடுத்தது. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழ் இன வளர்ச்சிக்கும் ஒரு களத்தை உருவாக்க வழிவகுத்துக் கொடுத்தது. சமய மறுமலர்ச்சிக்கும், சமய சீர்திருத்தத்திற்கும் வழிகாண முயன்ற நீதிக்கட்சி தமிழக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

## சுயமரியாதை இயக்கம்
## (SELF-RESPECT MOVEMENT)

தந்தை பெரியார் என்று போற்றப்படும் ஈவேராமசாமி திராவிட இயக்கத்தின் பெருந்தலைவராகக் கருதப்படுகிறார். 1879, செப்டம்பர் 17-ல் ஈரோட்டில் பிறந்தார். இளம் வயதில் இவரது பள்ளி ஆசிரியர் இவரை பள்ளிப் படிப்புக்குத் தகுதியற்றவர் என்று கூறியதால் படிப்பை நிறுத்திக் கொண்டார். அதன் பின்பு வியாபாரத்தில் ஈடுபட்டார். இளமைக் காலத்திலிருந்தே தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும் பற்றுக் கொண்டவராக விளங்கினார்.
தேசப்பற்று மிகுந்த ஈ.வெரா. இந்திய தேசியப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். சமுதாய சீர்திருத்தங்களில் அதிக ஈடு*பாட்டி*னைக் கொண்டிருந்தார். ராஜாஜியின் வேண்டுகோளை ஏற்று காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1920-ல் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். கதரைப் பரப்பும் இயக்கத்திலும் ஈடுபட்டார்.

1921-ல் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். 1922-ல் சென்னை காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். 1924-ல் கேரளாவில் வைக்கம் என்னுமிடத்தில் தாழ்த்த*ப்ப*ட்ட மக்கள் ஒரு குறிப்பிட்ட தெருவின் வழியாகச் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு 'வைக்கம் வீரர்' என்ற புகழ் அடைந்தார். சேர்மாதேவிப் பகுதியில் வ.வே.சு.ஐயர் குருகுலத்தில் பிராமணர் அல்லாதவர் துன்புறுத்தப்பட்டதைக் கடுமையாக எதிர்த்துப் போராடினார். பிராமணர்களுக்கு மட்டும் தனியாக பந்தி போடுவதைக் கண்டித்தார். காங்கிரசிலிருந்த பிராமண உறுப்பினர்கள் இவரது செயல்களை எதிர்த்த போது காங்கிரசை விட்டே விலகினார். பெரியார் ஆரம்பித்த இயக்கமே சுயமரியாதை இயக்கமாகும். சுயமரியாதை இயக்கம் தோன்றுதல்

பெரியார் 1920-ல் ராஜாஜி, சேலம் வரதராஜுலு நாயுடு ஆகிய இருவரின் தூண்டுதலின் பேரில் காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசில் சேர்ந்த பெரியார் ஒத்துழையாமை இயக்கம், கதர்ப் பிரச்சாரம், கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் ஆர்வம் கொண்டார். அப்போது சேரன்மாதேவியில் காங்கிரஸ் சார்பில் ஒரு குருகுலம் நடத்தப்பட்டது. அதன் பெயர் 'தமிழ் நாட்டு குருகுலம்' ஆகும். இதன் செயலராக வ.வெ.சுப்பிரமணிய

அய்யர் இருந்தார். இந்த குருகுலத்தில் பிராமண பிள்ளைகளுக்கும், பிராமணரல்லாத பிள்ளைகளுக்கும் தனித்தனியாகவே உணவு வழங்கப்பட்டு வந்தது. இதன் மூலம் சாதிப் பிரிவுக்கு ஆக்கம் கொடுத்து வந்தது. குருகுலம். இப்பிரிவினையைக் கடுமையாக கண்டித்தார் பெரியார். அத்துடன் வகுப்புவாரி உரிமை கோரிக்கை பல வழிகளில் புறக்கணிக்கப்பட்டதாலும் காங்கிரசை விட்டு வெளியேற முடிவு செய்தார் பெரியார்.

காங்கிரசை விட்டு வந்த பெரியார் திராவிடர்களின் சமூக விழிப்புணர்வுக்கும், சுயமரியாதைக்கும் வழிகாண முற்பட்டார். சமூகத்தில் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் எனில் தன்மானம் முக்கியம். தன்மானம் இழந்தவர்கள் சுய உணர்வு பெற்று வாழ இயலாது. ஆகவே திராவிடர் மக்கள் பிராமணர்களால் ப*ண்பாட்டு*

அடிப்டையில் தாழ்த்தப்பட்டுள்ள கொடுமையை மாற்ற விரும்பினார். கா*ங்கி*ரசை விட்டு வெளியேறிய பெரியார் 1925, மே 2-ம் தேதி திராவிட மக்கள் பகுத்தறிவு, தன்மான உணர்வு பெற 'குடி அரசு' என்ற இதழை அச்சடிக்கும் அச்சகத்துக்கு 'உண்மை விளக்கம் அச்சகம்' என்று பெயரிட்டார். முதல் இதழை திருப்பாதிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் வெளியிட்டார். மக்களுக்குள் சுயமரியாதையும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும் என்பதே குடியரசு இதழின் கொள்கையாக இருந்தது.

**சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை**

a) சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக் கூடாது.

b) மனித சமூகம் பொருளாதாரத் தன்மையில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லாருக்கும் சரிசமமாக இருத்தல் வேண்டும்.

c) மக்கள் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சமத்துவம் வேண்டும்.

d) மனித சமூகத்தில் சாதி, மதம், தேசம், வருணம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக ஒற்றுமையே நிலவ வேண்டும்.

e) உலகில் உழைப்பாளி என்றும் முதலாளி என்றும் உயர்வு தாழ்வு இல்லாமல் சமூகத்தின் தேவைகளுக்கு சகல மனிதர்களும் பாடுபட்டு அவற்றின் பயனைச் சரிசமமாக அனுபவிக்க வேண்டும்.

f) ஒவ்வொரு மனிதனும் எவற்றுக்கும் எவ்விதத்துக்கும் அடிமையாகாமல் அவரவர் அறிவு, ஆராய்ச்சி, காட்சி, உணர்ச்சி ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்க வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கை பிராமணர், பிராமணர் அல்லாதவர் இடையே பிறவிப் பேதத்தை நீக்கும் நோக்கம் கொண்டது. இந்து மதமும் அதன் கடவுளும், வேதங்களும் மனிதர்களிடையே உயர் பிறவி, இழி பிறவி என்று கற்பிக்கின்றன. எனவே தான் சமூகத்தில் மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகளை நீக்க இந்து மதத்தையும் அதன் கடவுளையும் எதிர்த்தது எனத் தெரிகிறது பிராமண எதிர்ப்பு இயக்கம் இவ்வாறு சுயமரியாதை இயக்கமாக வலுப்பெற்றது. சுயமரியாதை இயக்கம், இந்து மதத்தைப் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பித்து மூட நம்பிக்கைகளை வளர்த்துப் பார்ப்பனச் செல்வாக்கை வளர்ப்பதையே எதிர்க்கிறது. தனிப்பட்ட பிராமணர் மீது வெறுப்புக் கொண்டு எதிர்க்கவில்லை என்று தம் நிலைப்பாட்டை வகுத்துக் கொண்டது.

பெரியாருக்கு அந்தக் காலத்தில் சாதிப் பாகுபாடுகளையும் வர்ணாசிரமத்தையும் அதில் பிராமணர் மற்றெல்லாரையும் விட பிறப்பால் மேலோன் என்றுள்ள பார்ப்பனீயத்தின் மேல்தான் கடுக்க கோபமே தவிரத் தனிப்பட்ட எந்தப் பிராமணரிடமும் பகைமையோ துவேஷமோ இருந்ததாகச் சொல்ல முடியாது. சொல்லப் போனால் பல பிராமணர்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே இருந்தனர். இவ்வாறு தனிப்பட்டவர் மீது வெறுப்புக் கொண்டு சுயமரியாதை இயக்கம் தோன்றாமல் ஒரு சாராரின் மேலாதிக்கம் காரணமாகவே தோன்றியது. சாதி, மத, வகுப்பு ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டுள்ள பேதங்களையும் சமூகக் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஏற்பட்ட தடையையும் அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாகவும் சகோதா மனப்பான்மையுடன் சமமாகவும் வாழவே சுயமரியாதை இயக்கம் தம் செயல்பாட்டை உருவாக்கியது. இவ்வாறு சமூக மறுமலர்ச்சிக் கொள்கைகளை வகுத்த சுயமரியாதை இயக்கம் தம் கருத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கு மா*நாடுக*ளை நடத்த ஆரம்பித்தது. சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு

ஓர் இயக்கப் பூர்வமான, மக்கள் திரளின் வடிவமாக மாறுவதற்கு சுயமரியாதை இயக்கம் சில கட்டமைப்புப் பணியை மேற்கொண்டது. சுயமரியாதை இயக்க வரலாற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டை 1929, ஆகஸ்ட் 25-ம் தேதி செங்கல்பட்டில் நடத்தினார் பெரியார். இந்த மாநாட்டில் வகுக்கப்பட்ட கொள்கைகள் திராவிட இன வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மாநாட்டின் மிக முக்கியமானதும் புரட்சிகரமானதுமான 34 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இந்த மாநாட்டைத் தொடர்ந்து 1930, 31-ம் ஆண்டுகளில் ஈரோட்டில் மாநாட்டு

நடத்தப்பட்டு சுயமரியாதைக் கருத்துக்கள் வளர வழி வகுக்கப்பட்டன.

சுயமரியாதை சமதர்ம திட்டம்

*சுய*மரியாதை இயக்கம், தமிழர் சமூக விழிப்புணர்வுக்குப் *பொரு*ளாதாரத்தை விடப் பண்பாட்டை முதன்மை*யாகக்* கருதியது. ஆனாலும் 1930-க்குப் பின்னர் சுயமரியாதை இயக்கம் பொருளாதார *விடு*தலையும் அவசியம் என்று எண்ணியது. அதன் பொருட்டு ம.சிங்காரவேலர் ஆலோசனைப்படி, 1932 டிசம்பரில் 'சுயமரியாதை சமதர்மத் திட்டத்தைப் பெரியார் உருவாக்கினார். அரசியலில் குறிப்பாகக் காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கத்தைக் குறைக்கவும், தன்மான இயக்கக் கொள்கைகளை சட்டமாக்கவும், மூட நம்பிக்கைகளை ஒழி*க்க*வும், பொருளாதாரப் பொது உடைமையை ஏற்படுத்தவும் சுயமரியதைச் சமதர்ம இயக்கத்தைச் செயல்படுத்தினார். இந்தத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டது.

சுயமரியாதை இயக்கம் பதிவு செய்யப்படல்

சுயமரியாதை இயக்கம் தம் கருத்தை மக்களிடம் செலுத்த பல்வேறு இதழ்களை ஆரம்பித்தது. கடைசி மூட நம்பிக்கைக்காரன் இந்த நாட்டில் இருக்கின்ற வரையிலும் தன்மான இயக்கத்துக்கு வேலை உண்டு என்பதற்கேற்ப சுயமரியாதை இயக்கம் செயல்பட்டது. இவ்வியக்கம் ஓர் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகச் செயல்பட எண்ணியது. அதன் காரணமாகத்தான் பதிவுச் சுயமரியாதை இயக்கம் மனிதன் பகுத்தறிவு சிந்தனையைப் பெறுவதன் மூலமே மூட நம்பிக்கையையும் சாதியையும் ஒழிக்க சட்டப்படி பதிவு செய்ய எண்ணியதாகத் தெரிகிறது. எந்த ஒரு இயக்கமும் தம் கருத்துக்களை மக்களிடம் பரப்ப முறையான வழிகளைப் பின்பற்றுவது வழக்கம். *அப்ப*டித்தான், இவ்வியக்கம் இந்திய நிறுவனச் சட்டப்படி பதிவு செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் பல *காரணங்க*ளால் பதிவு தள்ளிப் போயிற்று. பின்னர் 1952, செப்டம்பர், 29-ம் தேதி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார இயக்கம்' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது.

சுயமரியாதை இயக்கமும் சாதி ஒழிப்பும்

சுயமரியாதை இயக்கம் மனிதன் பகுத்தறிவு சிந்தனையைப் பெறுவதன் மூலமே மூட நம்பிக்கையையும் சாதியையும் ஒழிக்க முடியும் என்று கருதியது. சமயம், கோவில், கடவுள், புராண இதிகாசங்கள் ஆகியவைகள் தான் சாதியைப் பாதுகாக்கின்றன. ஆகவே அவற்றை ஒழித்தால் சாதியை ஒழித்து விடலாம் என்று கருதியது. ஆகவே தான் 1929-ம் வருட செங்கல்பட்டு மாநாட்டில் சாதிக்கு எதிரான கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

a) மக்கள் பிறவியினால் உயர்வு, தாழ்வு என்ற கொள்கையை *அக*ற்றுதல். சாதியை அதிகரிக்கும் மதம், வேதம், சாஸ்திரம் மற்றும் புராணங்களைப் பின்பற்றக் கூடாது.

b) நான்கு வர்ண முறையை ஏற்றுக் கொள்ளும் வர்ணாசிரமக் கொள்கையை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

c) சாதிப் *பட்ட*ங்களையும், பெயர்களையும் எவரும் பயன்படுத்தக் கூடாது.

d) சாதி சமயப் பிரிவுகளைக் காட்டும் குறிகளை *யாரு*ம் அணிந்து கொள்ளக் கூடாது.

e) வகுப்பு பேதம் கற்பிக்கும் உணவு விடுதி, டீக்கடைகளுக்கு *அரசு* விற்பனைச் சான்றிதழ் அளிக்கக் கூடாது

f) புகைவண்டி நிலைய உணவு விடுதிகளில் சாதி, வகுப்பு, மதம் போன்ற வேறுபாடுகள் காட்டாதிருக்க வேண்டும்.

சாதி சமத்துவத்தைத் தோற்றுவிக்கும் அனைத்து செயற்பாடு களையும் சமூகத்திலிருந்து நீக்க சுயமரியாதை இயக்கம் முயன்றது. 1930-ல் நடைபெற்ற ஈரோட்டு மாநாடு 'மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதிப் பெயர்களைச் சேர்க்கக் கூடாது' என்று கேட்டுக் கொண்டது. விருதுநகர் மாநாட்டில் வர்ணாசிரமக் கொள்கையை ஆதரிக்கும் இயக்கங்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டது. 1932-ல் வெளியிட்ட 'சுயமரியாதை வேலைத் திட்டத்தில்' இந்திய சமூகத்தில் சாதி மதப் பிரிவுகளைக் குறிக்கும் குறிப்புகளை நீக்க வேண்டும். சாதிப் பெயர்களைப் பயன்படுத்துபவர்களை அரசு வேலையில் இடம் பெறச் செய்யாமல் செய்தல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. சுயமரியாதை இயக்கமும் தீண்டாமையும் தமிழகத்தில் தீண்டாமை கொடுமை மனு காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. உயர்ந்த சாதியார், தாழ்ந்த சாதியார்களின் மொத்த உரிமைகளையும் மறுத்தனர். இக்கட்டுப்பாடு மனிதர்களில் ஒரு பகுதியினரை இழிந்தவர்களாக, தன்மானம் அற்றவர்களாக *ஆக்கி*யது. தன்மான உணர்வுகளை மக்களுக்குப் புகட்டத் தோன்றிய சுயமரியாதை இயக்கம் 1929-ம் வருட செங்கல்பட்டு மாநாட்டில் *தீண்டா*மைக் கொடுமைகளை ஒழிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

a) மனித நாகரிகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக இருக்கும் தீண்டாமையை ஒழித்து அனைத்துப் பொதுப் பாதைகள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள், தண்ணீர் பந்தல்கள் முதலிய பொதுத் துறைகளில் உள்ள சாதிய வேறுபாட்டை நீக்கி எல்லோருக்கும் பொதுவாக்குதல்.

b) தீண்டாதாருக்கு அரசு புறம்போக்கு நிலங்களை அளித்து அலுவல*கங்க*ளில் காலி இடங்களில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். தீண்டப்படாதார் மாணவ மாணவியருக்கு *பள்ளி*களில் இலவச நூல்கள், உடை, உணவு ஆகியவை வழங்கப்படல் வேண்டும்.

1931-ல் நடைபெற்ற ஈரோட்டு மாநாட்டில் தீண்டாமை என்பது சமூகத்திலுள்ள அனைத்து சாதிகளையு*ம் பி*டித்த நோய், அது ஒழிய வேண்டுமானால் பிராமணீயம் ஒழிய வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழர்கள் இந்து என்று அழைத்துக் கொள்வதனாலேயே தீண்டாமைக் கொடுமைக்கு இலக்காகின்றனர். எனவே இந்து என்பதை விட்டு விட்டால் தீண்டாமை போய் விடும் என்று சுயமரியாதை இயக்கம் கருதியது. சுயமரியாதைத் திருமணம்

சாதி, சமயம், சடங்கு போன்றவைகளைக் கருத்தில் கொள்ளாது, இருவர் கருத்தொருமித்து செய்து கொள்ளும் வாழ்க்கை ஒப்பந்தமே சுயமரியாதைத் திருமணமாகும். இந்தத் திருமண முறை இதுவரை நடைமுறையில் இருந்து வந்த இந்து திருமண முறையில் உள்ள தேவையற்ற சடங்குகளையும் நீக்கி, புதிய முறைகளைக் கொண்டிருந்தது. இந்து திருமண முறை பிராமணர்களின் வாழ்வுக்காக ஏற்படுத்திய முறை என்றும், இந்து திருமணத்தினை நாம் செய்து கொண்டால் நம்மைப் பிறவியில் கீழ்சாதி சூத்திரன் என்று ஒப்புக் கொள்வதாகும் என்றும் சுயமரியாதை இயக்கம் கருதியது. அதனால் தான் சாதியை ஒப்புக் கொள்ளாத, பிராமணீயத்திற்கு ஆக்கம் தராத திருமணமே தேவை என்ற கருத்தில் சுயமரியாதைத் திருமண முறையை அறிமுகம் செய்தது.

சாதி, சமத்துவத்திற்கும், சாதி ஒழிப்பிற்கும் தடையாக இந்து திருமணம் இருப்பதால் சுயமரியாதைத் திருமணம் திராவிடர்களுக்கு அவசியம் என்றது. மேலும் இந்து திருமணம் பிராமணர் திருமண முறையுடன் இருப்பதால் அதனை மாற்ற விரும்பியது. இந்து திருமணத்தைச் செய்தால் சாதிய முறைகளை ஏற்றுக் கொண்டதாகவே பொருள் கொள்ள முடியும் என்று கருதியது. அதன் விளைவே சுயமரியாதைத் திருமணம். இவ்வாறு சுயமரியாதைத் திருமணம் அறிமுக*ப்படுத்தப்ப*டுவதற்கு இந்துச் சடங்குகளும் சாதிய முறைகளுமே காரணமாக இருந்தன.

ஆணும் பெண்ணும் கூடினால் திருமணம், இதற்கு சடங்கு எதற்கு? சடங்குகள் ஏற்படுத்தியதின் நோக்கம் சாதியை நிலை நாட்டவே தவிர வேறு எதற்குமில்லை . புரோகிதன் எதற்கு? புரோகிதனுக்கும் திருமணத்துக்கும் என்ன தொடர்பு? திருமணத்திற்கும் கடவுளுக்கும் என்ன தொடர்பு? திருமணத்துக்கு ஏன் கடவுளை அழைக்க வேண்டும்? போன்ற பகுத்தறிவுக் கேள்விகளை எழுப்பினார் பெரியார். எனவே இதுவரை பிராமணர்களால் புரியாத மொழியில் மந்தி*ரம்* கூறி நட*த்தி*
வைக்கப்பட்ட திருமண முறையை அகற்ற தீர்மானித்தார் பெரியார். பழைய ஒன்றினை நீக்கும் போது புதிய ஒன்றினை அறிமுகம் செ*ய்ய* வேண்டிய விதியின்படி சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தினார். இந்தத்

திருமணம் அறிவு, அன்பு, பொருத்தம், *அ*னுபவம் ஆகியவைகளை முக்கியமாகக் கொண்டிருந்தது.

தமிழகமெங்கும் இந்தப் புதிய திருமண முறைக்கு ஆதரவு பெருகியது. பலர் சுயமரியாதைத் திருமணம் செய்தனர். ஆனால் சட்டத்திற்குட்படாத இந்தத் திருமண முறையை அரசு விதிகளும் நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ளவில்லை. 1967-ல் அண்ணா தலைமையில் திமுக பதவி ஏற்ற பின் அந்த அரசு சுயமரியாதை திருமணத்துக்கு பாதுகா*ப்பு அ*ளிக்க முன்வந்தது. அதன்படி திருமணச் சட்டத்தில் 7(அ) என்ற புதிய பிரிவை இணைத்து இந்து திருமணச் சட்டம்' என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார் அண்ணா . அது 1968, ஜனவரி 20-ம் தேதி நடைமுறைக்கு வந்தது. சுயமரியாதை இயக்கமும் பெண் விடுதலையும்

சுயமரியாதை இயக்கம் பிறந்த போதே அது பெண் விடுதலைக் கோரிக்கையையும் உள்ளடக்கியிருந்தது. அது வெறும் கருத்துப் பிரச்சாரத்தை மட்டும் செ*ய்யவி*ல்லை. அதனை செயல் பூர்வமாகவும் நிறைவேற்றியது. சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் வெளிவந்த 'புரட்சி' என்ற இதழுக்கு முதன் முதலில் எஸ்.ஆர்.கண்ணம்மா என்பவர் பதிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவரே தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளர் ஆவார். 1929-ல் செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டிலேயே பெண்ணுரிமைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவை வருமாறு:

a) பெண்களின் திருமண வயது பதினாறுக்கு மேற்பட்டிருக்க வேண்டும். விவாகரத்து செய்யும் உரிமை மனைவிக்கு வழங்கப்பட வேண்டும். விதவைகள் மறுமணம் செய்து கொள்ள உதவிகளும், சலுகைகளும் வழங்க வேண்டும்.

b) பள்ளிக்குப் போகத் தகுதியுடைய சிறுமிகளுக்கு ஆரம்பக் கட்டாயக் கல்வி பொது நிதியிலிருந்து போதிக்கப்பட வேண்டும்..

c) பெண்களுக்கு ஆண்களைப் போல சமமாகச் சொத்துரிமைகளும், வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டும். பெண்களும் ஆண்களைப் போலவே எந்தத் தொழிலையும் மேற்கொண்டு நடத்தி வருவதற்கு அவர்களுக்கு சம உரிமையும், அவகாசமும் கொடுக்கப்பட வேண்டும்.

d) பள்ளிகளில் ஆசிரியர் வேலைக்குப் பெண்களே அதிகமாக நியமிக்கப்பட வேண்டும். அதுவும் ஆரம்பப் பள்ளிகளில் பெண்களை மட்டும் தான் நியமிக்க வேண்டும்.

பாரதியாரைத் தொடர்ந்து பெண் விடுதலை குறித்து புதுமையான, விரிவான கோரிக்கைகளை முன்வைத்தது பெரியாரின் சுயமரியாதை இயக்கமேயாகும். பாரதியார் கிட்டத்தட்ட ஒரு தனி மனிதராக

இருந்து இந்தச் சிந்தனைகளை விதைக்க முனைந்தார். ஆனால் பெரியார் இயக்கமோ இவற்றைப் பரவலாக மக்களிடையே கொண்டு சென்றது. அரசாங்கத்தையும், இவை தொடர்பாகச் செயல்படத் தூண்டியது.

இந்தியாவின் பிற பகுதிகளைப் போலவே சென்னை *மா*காணத்திலும் தேவதாசி என்ற சட்டப்பூர்வமான, சமய அங்கீகாரம் பெற்ற விபச்சார முறை காலம் காலமாக இருந்து வந்தது. இதனை ஒழித்துக் கட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் மசோதா ஒன்றை சட்டசபையில் 1929 பிப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தினார். இந்த மசோதாவை பெரியார் உற்சாகத்துடன் வரவேற்றார். 1930-ல் ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் 'மாதர் மாநாடு' என்று ஒன்று தனியாகவும் நடைபெற்றது. அதில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

a) சிறு வயதுப் பெண் குழந்தைகளை தேவரடியார்களாகத் தயாரித்து பொதுவில் ஆடவும், பாடவும் விட்டு பொருள் சம்பாதிக்கும் வழக்கத்தைத் தடை செய்ய வேண்டும்.

b) பொட்டுக் கட்டும் பழக்கம் கைவிடப்பட வேண்டும். கடவுளின் பெயரால் பொட்டுக் கட்டியுள்ள தேவதாசி சகோதரிகள் தங்கள் பொட்டை அறுத்தெறிந்து விட்டு மனதுக்கிசைந்த ஒரு கணவனை மணந்து கொள்ள வேண்டும். இளைஞர்கள் பொட்டுக் கட்டும் பெண்களை மணக்க முன்வர வேண்டும். மேலும் விபச்சாரத் தடைச் சட்டம் நிறைவே*ற்றப்பட* வேண்டும்.

இவ்வாறு பெண் விடுதலை பற்றி பேசியும் எழுதியும் வந்தார் பெரியார். அதை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டார். பெண்கள் விடுதலைக்கு சுயமரியாதை இயக்கம் *பாடுபட்ட*து போல வேறு எந்த இயக்கமும் இவ்வாறு செயல்படவில்லை. இந்த இயக்கத்தால் பெண்கள் விழிப்புணர்வு பெற்றனர். இன்று பெண்கள் அரசியல், சமுதாய விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர். இந்த முன்னேற்றத்துக்குப் பெரியாரின் கருத்துக்களும், உழைப்புமே அடித் தளமாகும். பெண்கள் விடுதலைக்கு இன்று பல பெண்கள் இயக்கங்கள் குரல் கொடுத்துக் கொண்டு உரிமைக் கோரிக்கை வைத்தாலும், இந்த முயற்சிக்கு தமிழகத்தில் பெரியாரின் இயக்கமே வித்திட்டது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பல சாதனைகளைச் செய்தது. இது தமிழக மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. தமிழகத்தில் சாதி, சமயமற்ற சமூகத்தை உருவாக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டது. பெரியாரின் கொள்கைகள் தான் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் அந்த ஆட்சிக்கு வழிகாட்டியாக *விளங்கி*ன.

# UNIT-II

## சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்
## (SOCIO, RELIGIOUS REFORM MOVEMENTS)

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்திய சமுதாயத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சமுதாயம் வளர்ச்சி அடைந்தது. சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த பல தடைகள் உடைத்தெறியப்பட்டன. இதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்தியாவில் தோன்றிய எல்லா சமுதாயச் சீர்திருத்த இயக்கங்களும் சாதி ஒழிப்பையும், பெண்கள் முன்னேற்றத்தையும் வலியுறுத்தி வந்துள்ளன. தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே சமூக சமய சீர்திருத்த சிந்தனைகள் துவ*ங்கிவிட்ட*ன. இந்தச் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் பெண்ணடிமைத்தனத்திற்கும் சாதியத்திற்கும் எதிராகவே இருந்தன. தமிழகத்தில் தோன்றிய சில மகத்தான மனிதர்களும், இயக்கங்களும் சமூகத்திலும், சமய*த்தி*லும் சடங்குகளையும், சம்பிரதாயங்களை ஒழிக்கவும், அன்பு நெறியின் மேன்மையை மக்களுக்கு எடுத்துரைக்கவும் அயராது பாடுபட்டனர்.

அந்தச் சமுதாய, சமய இயக்கங்களை விரிவாகக் *காண*லாம்.

**1) வைகுண்ட சுவாமிகள் : 1803-1851**

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சமூக, சமய சீர்திருத்தங்களைச் செய்தவர் வைகுண்ட சுவாமிகள் ஆவார். இவர் கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள சாமிதோப்பு என்ற கிராமத்தில் ஒரு ஏழை நாடார் குடும்பத்தில் 1803-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் முடிசூடும் பெருமாள், முத்துக்குட்டி ஆகும். 1833-ம் ஆண்டு முதல் இவர் பொது வாழ்வில் இறங்கினார். விஷ்ணு பக்தரான இவர் திருச்செந்தூர் கடலில் குளிக்கும் போது கடல் அலையில் சிக்கி மூன்று *நா*ள் கழித்து வந்ததாகவும் அப்போது நாராயணன்-லட்சுமி தரிசனம் தந்து தன்னை வைகுண்டராக திருப்பி அனுப்பியதாகவும் மக்களிடம் கூறினார்.

தான் பிறந்த தாழ்த்தப்பட்ட நாடார் சமுதாயத்தையும், பிற அடித்தட்டு மக்களையும் உயர்த்த தன் வாழ்நாளை அர்ப்பணித்தார். அன்றைக்கு பனையேறி கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த நாடார் சமூகத்தினர் 'சாணார்' என்று அழைக்கப்பட்டனர். இவர்களைத் தீண்டத் தகாதவர்களாக உயர் சாதியினர் பாவித்து வந்தனர். இவர்கள் பிராமணர் களிடமிருந்து 36 அடி தூரத்திலும், நாயக்கர்களிடமிருந்து 12 அடி தூரத்திலும்

நின்று தான் பேச வேண்டும். பொதுக் கிணறுகளில் நீர் எடுக்க முடியாது. உயர் சாதியினர் வாழும் தெருக்களில் நடக்கக் கூடாது. குடைப் பிடிக்கவோ, செருப்பு அணியவோ கூடாது. ஓட்டு வீடு கட்டக் கூடாது. பெண்கள் இடுப்பில் குடம் வைத்து தண்ணீர் எடுக்கக் கூடாது. ரவிக்கை அணியக் கூடாது!

இந்த நிலையில் தான் களத்தில் இறங்கிய சுவாமிகள் இந்த மக்கள் மத்தியில் ஒற்றுமையை *ஏற்ப*டுத்த 'சமத்துவ சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். தன்னைக் கண்ணனாகப் பாவித்து பஞ்சபாண்டவர் என்று ஐந்து பேரை தனது சீடர்களாக்கினார். ஊர் ஊராகச் சென்று சமத்துவக் கொள்கைகளைப் பரப்பினார். ஒற்றுமை உணர்வினை வளர்த்திடவும், தன்னுடைய போதனைகளைப் பரப்பிடவும் 'நிழல் தாங்கல்கள்' என்ற வழிபாட்டுத் தலங்களைப் பல ஊர்களில் அமைத்தார். ஆலயங்களுக்குள் நாடார்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் நுழைய முடியாத நிலையிலும் அவர்கள் காணிக்கை மட்டும் தேவைப்பட்டது. எனவே கோவிலுக்கு காணிக்கை போடுவதை விருதா' வேலை என்றார்.

ஆதி நாளில் நாடார் சமூக இளைஞனுக்கு 16 வது வயதில் தலையில் தலைப்பாகை கட்டி கையில் பிச்சுவா கத்தி கொடுப்பார்கள். குடும்பத் தலைவர் இறந்ததும் அவரது மகன்களுக்கு இந்தத் தலைப்பாக கட்டுவார்கள். இதற்கு 'உறுமால் கட்டு' என்று பெயர். இது உயர் சாதியினரால் தடுக்கப்பட்டிருந்தது. இந்த அநியாயக் கட்டுப்பாட்டை நீக்கும்படியாக மக்களிடம் கூறினார். தன்னைக் காண வருபவர்கள் தலைப்பாகை கட்டி வர வேண்டும் என்றார். இதேபோல ஓட்டு வீடு கட்டமுடியாது என்ற நிலையையும் மாற்ற முற்பட்டார். ஒரே திசையில் முன் கதவுகளை வைத்து அடுத்தடுத்த வீடு கட்டுமாறு கூறினார். இதற்கு முன்மாதிரியாக முட்டப் பகுதியில் 'சமதர்மக் காலனி' ஒன்றை அமைத்தார்.

மேலும் தனது சொந்த ஊரில் கிணறு ஒன்றை வெட்டி எல்லா மக்களும் அதனைப் பயன்படுத்தலாம் என்றார். அந்தக் கிணறு 'முந்திரி கிணறு' என்றழைக்கப்பட்டது. அனைத்து சாதியினரும் ஒரே கிணற்றில் நீரெடுத்து சமைத்து சமபந்தி போஜனம் செய்ய வைத்தார். தனது சீடர்களை பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி தாழ்த்தப்பட்ட சாதியினரின் வீடுகளில் உணவு அருந்தச் சொன்னார். தாழ்த்தப்பட்ட மக்கள் மாமிசம் தின்பதாலும், சுத்தமில்லாமல் இருப்பதாலும் தீண்டாமை கடைப்பிடிக்கப் படுவதாகக் கூறி அவர்களை சைவ உணவு சாப்பிடப் பரிந்துரைத்தார். சுத்தமாக இருக்கும்படி வலியுறுத்தினார்.

வெறும் போதனை மட்டும் பயன் தராது என்று நினைத்த வைகுண்ட சுவாமிகள் ஒரு முகாம் நடத்தி மக்களுக்குப் பயிற்சி அளித்தார். இதற்கு 'துவையல் பந்தி' என்று பெயர். தனது இயக்கத்திற்காகக் கொடி ஒன்றையும் அமைத்தார். காவி நிறத்தில் வெள்ளை தீபத்தைத் தாங்கிய

அந்தக் கொடி 'அன்புக் கொடி' என்றழைக்கப்பட்டது. சமூக சீர்திருத்த வாதியான இவர் சமூகத் துறையில் ஆதிக்க ***சக்தியாக விளங்கிய*** **பிராமணீய*த்தையும் எதிர்த்தார்*.** அடித்தட்டுப் பெண்கள் உரிமைகளுக் காகவும் குரல் கொ*டுத்தார்* சுவாமிகள். அவர்களைத் தைரியமாக ரவிக்கை அணியுமாறு கேட்டுக் கொண்டார். சுவாமிகள் மறைவுக்குப் பிறகு நாடார்கள் போராடியதால் 1859-ல் நாடார் *பெண்க*ள் ரவிக்கை அணியும் உரிமையை திருவாங்கூர் அரசு வழங்கியது. இந்த உரிமை 1865-ல் பிற தாழ்ந்த சாதி பெண்களுக்கும் வழங்கப்பட்டது.

இவ்வாறு நவீன தமிழகத்தில் தோன்றிய முதல் சமூக சீர்திருத்த வாதியான வைகுண்ட சுவாமிகள் ஒரு புதிய சமநெறியை உருவாக்கி அதன் மூலம் சமூக சீர்திருத்தம் செய்தார். தனது மக்கள் சேவையின் கா*ர*ணமாக 'அய்யா' என்று அன்புடன் எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவரது இயக்கம் ஒருபுறம் இந்து மதத்திற்குள் இருந்த உயர்சாதி வெறியை எதிர்த்துப் போரா*டியது. மறுபுறம்* நாடார் சமூகத்தினரிடையே விரைவாகப் பரவி வந்த கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தியது. தென் தமிழக நாடார் சமூகத்தினரிடம் வைகுண்ட சுவாமிகள் இயக்கத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. ஆனால் சுவாமியைப் பின்பற்றுபவர்கள் அவரை கடவுள் அவதாரமாகப் பார்க்கிறார்களே தவிர சமூக சீர்திருத்தவாதியாக நோக்குவதில்லை.

**2) சென்னையில் பிரம்ம சமாஜம்**

பதினெட்டாம் நூற்றாண்டில் ராஜாராம் மோகன்ராயால் உருவாக்க*ப்பட்ட*து பிரம்ம சமாஜம். இந்து சமயத்திலும் அதன் சாதிய அமைப்பிலும் சில முக்கிய மாறுதல்களைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அன்றைய இறுக்கமான இந்திய சூழலில் வங்கத்திலிருந்து கிளம்பிய. இந்த மெல்லிய பூங்காற்று சென்னைக்கும் எட்டியது*. 18*52-லேயே சென்னை மாகாணத்தின் முதல் அமைப்பான 'மெட்ராஸ் நேட்டிவ் அசோசியேசன்' உருவாகியிருந்தது. இதன் செயலாளரான சீனுவாசப் பிள்ளை அதே ஆண்டில் இந்து முற்போக்கு மேம்பாட்டு சங்கம்' (Hindu Progressive Improvement Society) என்ற சமூக சீர்திருத்த அமைப்பையும் ஏற்படுத்தியிருந்தார். விதவை மறுமணம், பெண் கல்வி, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் போன்றவை இந்த அமைப்பின் திட்டங்களாக இருந்தன.

இ*ந்த நி*லையில் சென்னை உயர்நீதிமன்ற வக்கீல்களான வி.இராஜ கோபாலாசாலுவும், பி.சுப்பரயுலு செட்டியாரும் வேத சமாஜத்தை (பிரம்ம சமாஜம்) 1864-ல் நிறுவினர். இந்த அமைப்பு விக்கிரக ஆராதனை கூடாது, மூடத்தனமான சமயச் சடங்குகள் கூடாது, ஒரே சாதியின் சாதிப் பிரிவுகளை ஒன்று சேர்த்தல், விபச்சாரத்தைக் கண்டித்தல், விதவைகள் மறுமணத்தை

ஆதரித்தல், பெண் கல்வி மேம்பாடு ஆகிய கொள்கைகளைக் கொண்டிருந்தது. இந்த வேதசமாஜத்திற்காக 'தத்துவ போதினி' என்ற தமிழ் மாதப் பத்திரிக்கையும் நடத்தப்பட்டது. இவர் பிரம்ம தீபிகை' என்ற மாத இதழையும், 1857-ல் டம்பாச்சாரி விலாசம் என்ற நாடகத்தையும், 1871 ல் பிரம்மசமாஜம் என்ற நாடகத்தையும் வெளியிட்டார். இந்த நாடக நூல்களில் தாசி முறை, சகுனம் பார்க்கும் மூட நம்பிக்கை ஆகியவை கண்டிக்கப்பட்டன. விதவை திருமணத்திற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

பின்னாளில் வேத சமாஜத்திற்கு யாதரலு நாயுடு என்பவர் செயலர் ஆனார். இவர் வேதசமாஜத்தின் பெயரை 'தென்னிந்திய பிரம்மசமாஜம்' என்று மாற்றினார். இவர் கலப்பு திருமணங்களுக்கு இருந்த சட்டத் தடையை நீக்குமாறு வைசிராயிடம் மனுக் கொடுத்தார். இதனால் 1872-ல் சாதித் தடைகள் நீக்கச் சட்ட ம் (The Cast Disabilities Re moval Act) நிறைவேறியது. பிரம்ம சமாஜத்தின் கிளைகள் கடலூர், கோவை, நெல்லை, திருச்சி ஆகிய நகரங்களிலும் துவக்கப்பட்டன. தென்னிந்தியா பிரம்ம சமாஜம் 1976 வரையில் 27 நூல்களை தமிழில் வெளியிட்டது. 1894-ல் வெளியிட்ட 'வேதம்' என்ற நூலில் பிராமணரல்லாதவரும் வேதம் ஓதத் தகுதி உள்ளவர்கள் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு தமிழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை துவக்கி விட்டதில் பிரம்ம சமாஜத்திற்கு முக்கியப் பங்கு இருந்தது.

**3) அருட்பிரகாச வள்ள லார்: 1823-1874**

தமிழகம் முழுக்க கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களின் பிரச்சாரம், தென்கோடியில் வைகுண்ட சுவாமிகள் இயக்கம், வடகோடி சென்னையில் பிரம்ம சமாஜம் என்றிருந்த சூழலில் கடலூருக்கு அருகே உள்ள வடலூரில் ஒரு சமூக சீர்திருத்த இயக்கம் எழுந்தது. அந்த இயக்கத்தின் கர்த்தா திரு அருட்பிரகாச வள்ளலார் எனப்பட்ட இராமலிங்க அடிகள் ஆவார். இராமலிங்கர் சிதம்பரத்துக்கு அருகே உள்ள மருதூரில் 1823, அக்டோபர் 5-ம் தேதி பிறந்தார். இவர் ஆறுமாதக் குழந்தையாக இருந்த போது, இவரது தந்தை *கால*மாகிவிடவே, குடும்பம் சென்னைக்கு குடி பெயர்ந்தது.

இராமலிங்கர் இளமையிலேயே பக்தி மார்க்கத்தில் இறங்கினார். சென்னைக்கு அடுத்துள்ள திருவொற்றியூர் சிவபெருமானை தினசரி தரிசித்து வந்தார். 1850-ல் இராமலிங்கருக்கு திருமணம் செய்து வைக்கப் பட்டது. ஆனால் இல்லறத்தில் நாட்டம் இல்லாது 185**8-ல் சிதம்பரம்** நோக்கி தலயாத்திரை புறப்பட்டார். 1867 வரை சிதம்பரத்தை அடுத்த கருங்குழியில் தங்கினார். தனக்கென சில சொந்தக் கொள்கைகளை தருவாக்கிக் கொண்ட ராமலிங்கர் 1865-ல் 'சமரச வேத சன்மார்க்க சங்கத்தை' நிறுவினார். 1867-ல் வடலூர் வந்த அவர் அதே ஆண்டில் 'சமரச வேத

தருமசாலையை' நிறுவி ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார். 1872-ல் வடலூரில் 'ஞானசபையை'த் தோற்றுவித்தார். 1874, ஜனவரி 30-ல் சித்தி வளாகம் என்ற தனது இல்லத்தில் தனி அறை ஒன்றில் மறைந்தார். அவரது உடலை யாரும் காண முடியவில்லை.

குறைந்த அளவே கல்வி கற்றிருந்த ராமலிங்கர் கவ*ர்ச்சியாக* சொற்பொழிவு ஆற்றும் திறமைமிக்கவர். இறையருளைப் பெற்ற இவர் சமுதாயத்தில் காண*ப்பட்*ட சமய சமூக சீர்கேடுகளை அகற்ற முனைந்தார். இவர் நடைமுறையிலிருந்த அனைத்து சமயங்களும் பொய்யானவை என்றும், இறைவனது தொண்டர்களின் உடல்கள் இறைவன் வாழும் ஆலயம் என்றும் கூறினார். ஆடம்பரத்தைத் தவிர்த்து எளிமையான முறையில் இறை வணக்கம் செய்ய மக்களை வேண்டினார். சமய ஒற்றுமை, சமரச சுத்தசன்மார்க்க நெறி ஆகியவற்றை இவர் வலியுறுத்தினார். யோகத்தையும் தியானத்தையும் தவிர்த்து அன்பு வழியைப் பின்பற்ற ஆலோசனை வழங்கினார். இவரது கருத்துக்கள் சாதாரண மக்களின் வழிபாட்டு முறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அக்காலத்தில் சமயம் சமுதாயத்தோடு பிணைந்து காணப் பட்டதால் தனது சமயக் கருத்துக்கள் வலுவடைய சமுதாயத்தில் தொன்று தொட்டு நிலவி வந்த சீர்கேடுகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தை இவர் உணர்ந்தார். சமூக அமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வர விரும்பிய இவர் சமூக சாதிப் பிரிவுகள் அர்த்தமற்றவை எனவும், அவை அறியாமையின் வெளித் தோற்றங்கள் என்றும் குறை கூறினார். மேலும் இவர் கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் வலியுறுத்தினார். பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைவரும் உதவ வேண்டும் என்றார். அதற்காகவே சன்மார்க்க சங்கத்தின் ஒரு துணை அமைப்பாக தரும சாலைகளை அமைத்தார். இதன் மூலம் தனது கொள்கைகளையும் நடைமுறையையும் இணைத்தார்.

சன்மார்க்க சங்கத்தின் மற்றொரு துணை அமைப்பாக 'சன்மார்க்க போதனை' பாடசாலையை அமைத்தார். அங்கே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்று மூன்று மொழிகளில் படிப்பு அமைந்தது. முதியோர்களும் இந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். இவ்வாறு தமிழகத்தில் முதன் முதலில் முதியோர் கல்வியைத் துவக்கியவர் இராமலிங்கரே ஆவார். தனது கொள்கையைப் பரப்ப 'சன்மார்க்க விவேக விருத்தி' என்ற தமிழ் பத்திரிக்கையை துவக்க முயன்றார். ஆனால் அது வெளி*வர*வில்லை.

இராமலிங்கரின் செயல்பாடுகளில் உச்சகட்டமானது 1872-ல் அவர் வடலூரில் அமைத்த 'ஞானசபை' கோவில்தான். இது ஒரு வழிபாட்டுத் தலமாகும். இங்கே எவ்வித விக்கிரகமும் கிடையாது. ஜோதி வழிபாடு தான். எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் பொதுவான 'உண்மைக் கடவுள்'

துவங்கும் இடமாக இதனைக் குறிப்பிடுகிறார் ராமலிங்கர். கடவுள் என்பதை ஆதிக்க சக்திகள் மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் ஏழை எளியவர்களைச் சுரண்டுகின்ற சாதனமாக மாற்றியதிலிருந்து அதனை விடுவிக்க முயன்றார் இராமலிங்கர்.

இவை தவிர இராமலிங்கர் பெண் கல்வியை வற்புறுத்தினார். சைவ, வைண*வ சமயங்க*ளை மட்டுமல்ல, சிறு தெய்வ வழிபாட்டையும் எதிர்த்தார். எத்தனையோ பல மூட நம்பிக்கைகளுக்கு இந்த சிறு தெய்வ வழிபாடே காரணம் என்றார்.

இராமலிங்கரின் இயக்கம் தமிழகத்தில் வலுவானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. பெண்கள் விடுதலையில் அவ்வளவு அழுத்தமான கவனம் செலுத்தியிருந்தாலும் சாதி, சமயச் சடங்குகள் மீது மத்திய தமிழகத்தில் சித்தர் காலத்திற்குப் பிறகு தொடுக்கப்பட்ட பரபரப்பான தாக்குதல் இதுவேயாகும். அவரது இயக்கம் அவர் நினைத்த அளவுக்கு வெற்றியடையாமல் போனதற்கு சமயம் சார்ந்ததாக *அவ*ரது சமூக சீர்திருத்த இயக்கம் இருந்ததே காரணம் ஆகும். இன்று வள்ளலாரைர அவரது அன்பர்கள் ஒரு மகத்தான சமூக சீர்திருத்தவாதியாகப் பார்க்காமல், ஒரு இந்து சமயத் தலைவராகத்தான் *பா*ர்க்கிறார்கள்.

**4) வேதநாயகம் பிள்ளை : 1826-1889**

தென்னாற்காடு மாவட்டத்தில் இராமலிங்கர் பரபரப்பாக தனது இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்த அதே காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்தில் அமைதியான முறையில் தனது எழுத்துக்கள் மூலம் சமூக சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து வந்தவர் வேதநாயகம்

இன்னை ஆவார். 1826-ல் பிறந்த வேதநாயகம் ஒரு கிறி**ஸ்தவரா*வார்.*** கால்பால் ஒரு கவிஞர் ஆவார். இவர் படித்து முடித்து முன்சி*ப்* என்ற பக்தியோகத்தில் இருந்தாலும், இவரது உள்ளம் என்னவோ தமிழ் இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திலுமே *சார்ந்தி*ரு*ந்தது.*

வேதநாயகம் பிள்ளை மக்களின் அறியாமைகளைப் பற்றி கவிதை எழுதினார். பஞ்சத்தில் பரிதவித்திட்ட ஏழை மக்கள் நிலை கண்டு பரிதவித்தார். அதனை கவிதைகளாகப் படை*த்துள்ளா*ர். வேதநாயகம் பல நூல்களை எழுதியுள்ளார். அவை *நீதி நூல், பெண்* கல்வி, பெண் மதிமாலை, பெண்மானம், சர்வ சமயச் சமரச கர்த்தனைகள், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி சரித்திரம், தனிப்பாடல்கள் முதலியன ஆகும்.

கிறிஸ்தவர்கள் தீவிரமான மதமாற்ற இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்த போது, அந்தக்கால கட்டத்தில் ஒரு கிறிஸ்தவரான வேதநாயகம் சர்வசமய கீர்த்தனைகள் *பா*டியிருப்பது குறிப்பிடத்தக்கது. பெண் கல்வியைப் பற்றி முதன் முதலில் பாடிய தமிழ்க் கவிஞர்

வேதநாயகமே ஆவார். பெண் கல்வி மட்டுமல்லாது பெண்கள் அன்று சந்தித்த வேறுபல பிரச்சனைகள் குறித்தும் 'பெண்மானம்' என்ற கட்டுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு பெண் கொடுக்கும் சமுதாயச் சீர்கேட்டைச் சாடினார். இதையெல்லாம் விட மிகவும் கொடுமையான பாலிய விவாகத்தையும் கண்டித்தார் வேதநாயகம் பிள்ளை. சோதிட நம்பிக்கை எதிர்ப்பையும் தமது நூல்களில் வெளிப்படுத்தினார். தனது சுகுண சுந்தரி நாவலில் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டித்தார்.

இவ்வாறு பெண் கல்வி, பெண்ணுக்கு பொருள் உரிமை, குழந்தைத் திருமண எதிர்ப்பு, கணவன் மனைவி அணியில் சமத்துவம் போன்ற பெண்கள் விடுதலையின் பன்முகத் தன்மைகளை விரிவாக எடுத்துக்காட்டிய முதல் இலக்கியவாதி வேதநாயகமே ஆவார்.

5) பிரம்ம ஞான சபை : (Theosophical Society)

தமிழகத்தில் கிறிஸ்தவ சமயம் சாராது அனைத்து மத சமத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்து இந்தியாவிற்கு வந்து இங்கே சமூக சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்ட வெளிநாட்டவரும் உண்டு. அமெரிக்காவில் பிறந்த ஹென்றி ஆல்காட்டும், ரஷ்யாவில் பிறந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும் அப்படிப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் பிரம்மஞான சபை என்ற ஆன்மீக அமைப்பை 1875-ல் நியூயார்க்கில் துவக்கினர். 1877-ல் அதனை பம்பாய்க்கு மாற்றினர். 1882-ல் சென்னையிலுள்ள அடையாறுக்கு கொண்டு வந்தனர்.

1883-ல் ஹென்றி ஆல்காட்டும், பிளாவட்ஸ்கி அம்மையாரும் தமிழகத்தின் பல நகரங்களுக்கும் விஜயம் செய்தனர். 'இ*ந்தியாவி*ன் இன்றைய துயரங்களுக்கெல்லாம் காரணம் நான்கு வேதங்களின் உண்மைப் பொருளை மக்களுக்கு எடுத்துச் சொல்லாததுதான்' என்று கருதினர். எனவே இது பழைய வேத காலத்திற்குத் திரும்புகிற ஒருவகை பழைமைவாத அமைப்பாகக் காணப்பட்டது. இந்து மதத்தைப் புனரமைப்பதாக இருந்தது. ஆர். ரகுநாதராவ், ஜி.முத்துசாமி செட்டியார், பி.சீனிவாசராவ், டி.சுப்பாராவ் போன்றோர் இந்த அமைப்பின் ஆரம்ப கால உள்ளூர் தலைவர்களாக இருந்தனர். 1884ம் ஆண்டுவாக்கில் தென்னிந்தியாவில் எண்பது கிளைகளையும், பல ஆயிரம் உறுப்பினர் களையும் கொண்டதாக இந்த அமை*ப்பு* வளர்ந்தது.

மக்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்ட போது இயல்பாகவே சமூகப் பிரச்சனைகளிலும் கவனம் திரும்பியது. குறிப்பாக கல்லாமையும், தீண்டாமையும் ஆல்காட்டை வாட்டின. சென்னையில் அவர் ஆரம்பித்த 'பறையர் பள்ளிகள்' தமிழக வரலாற்றில் அவரை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்துவிட்டன. தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளுக்கு

கல்வி வழங்குவது பற்றி யாரும் கவலைப்படாத அந்தக் காலத்தில் அடையாறில் முதல் 'பறையர் பள்ளி'யை 1894-ல் துவக்கினார். அவர்களுக்குத் தங்குமிடமும் உணவும் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் மேலும் பல பள்ளிகள் தொடங்கப்பட்டன. 1901 வரை இந்தப் பறையர் பள்ளிகளில் படித்தவர்களின் எண்ணிக்கை 534 ஆக இருந்தது. தனது இந்த இனித நேயப் பணிக்கு நிதி திரட்ட 1902-ல் 'ஏழைப் பறையர்' என்ற தலைப்பில் அவர்களின் பரிதாப நிலை குறித்து ஒரு பிரசுரத்தை வெளியிட்டார் ஆல்காட்

1907-ல் ஆல்காட் காலமான பின்பு. அன்னிபெசன்ட் அம்மையார் பிரம்மஞான சபையின் தலைவரானார். இவர் ஆரம்ப காலத்தில் சமூக சீர்திருத்த விஷயங்களில் தீவிரம் காட்டி வந்தார். இந்து சமயத்தை சீர்திருத்துவதின் மூலமே எல்லாவிதமான பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்று நம்பினார். இந்துக்கள் போலவே வாழ்ந்து இந்து புனித இடங்களுக்குச் சென்று வந்தார். *பிரம்ம*ஞானசபை பெண் கல்வியை ஆதரித்தது. குழந்தை திருமணத்தை எதிர்த்தது. சாதி முறை ஒழிப்பிற்கு அறைகூவல் விடுத்தது. விதவைகளின் விழிப்புணர்வுக்கு பிரம்மஞான சபை முக்கியக் *காரண*மாக விளங்கியது.

இந்து மதத்தைப் புனரமைத்து ஆதிவேத காலத்திற்கே திரும்புவதை தங்கள் லட்சியம் என்று அறிவிக்கப்பட்டதால் அதற்குள் பழமைவாதத்தின் கூறுகளும் அமைந்தன. வெகு விரைவில் அவை அதன் சமூகச் சீர்திருத்தச் சாரத்தை உறிஞ்சிவிட்டன. சென்னை அடையாறு பிரம்மஞான சபை விரைவிலேயே வைதீகர்களின் வேதா*ந்த* மடமாகிப் போய்விட்டது. எனவே இந்த இயக்கம் **கால*ப்போக்கில்*** வலுவிழந்தது. 6) இராமகிருஷ்ணா மிஷன்

பிரம்மஞான சபையைப் போலவே எழுச்சியையும் வீழ்ச்சியையும் கண்ட மற்றொரு அமைப்பு இராமகிருஷ்ணா மிஷன் ஆகும். அமெரிக்காவில் நடைபெற்ற சமயங்களின் பாராளுமன்றத்தில் பங்கு கொண்டு விட்டு 1897-ல் சென்னை வந்த விவேகானந்தருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவே*ற்பு விழாவில்* பேசும் போது தான் தனது குருநாதரின் பெயரில் இராமகிருஷ்ணா மிஷனை' தோற்றுவிக்கும் கருத்தை வெளியிட்டார். இந்த அமைப்பு 1897-98ல் கல்கத்தாவில் துவங்கப்பட்டது. அதன் தலைமையகம் மேற்கு வங்கத்தின் பேளூரில் அமைந்தது. அதன் கிளைகள் தமிழகம் வரை படர்ந்த ன.

சென்னைக் கிளையின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டவர் ராமகிருஷ்ணனானந்தா என்பவர் ஆவார். இவர் விவேகானந்தரால் இதற்கென்றே பேளூரில் இருந்து அனுப்பப்பட்டார். சென்னையிலுள்ள சீர்திருத்தவாதிகளைப் பற்றி விவேகானந்தர் நன்கு

அறிவார். எனவே சென்னையில் கிளை அமைப்பதில் அவர் தனி அக்கறை காட்டினார்.

1897-ல் மைலாப்பூரில் ஆரம்பிக்கப்பட்ட கிளையின் நோக்கங்கள், ராமகிருஷ்ணர் போதித்த நோக்கிலிருந்து வேதாந்தத்தைப் பரப்புவது, கல்வி வழங்குவது மற்றும் நிவாரணப் பணிகளில் இறங்குவது ஆகும். இந்த மிஷின் சென்னையில் பல பள்ளிகளை துவக்கியது. அவை இன்றும் இயங்கி வருகின்றன. பெண்களுக்கான பள்ளிகளையும் துவக்கியது. ஆனால் சாதியத்தின் கொடுமைகளை எதிர்த்துப் போராடியதாகத் தெரியவில்லை. இந்த அமைப்பும் வைதீகர்களின் வேதா*ந்த ம*டமாகிப் போனது. சமூக ரீதியில் பின்த*ங்கி*ய மக்களிடையே வலுவான தாக்கத்தை இதனால் ஏற்படுத்த முடியாததின் ***காரணமா***க இந்த இயக்கம் பெரிய அளவில் வளர்ச்சியடையவில்லை. இவ்வாறு தமிழகத்தில் பல சமூக, சமய இயக்கங்கள் தோன்றி மக்களிடம் பலமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. தனி மனிதர்கள் பலரும் பல்வேறு வழிகளில் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தனர்.

# UNIT-III

## மேற்கத்திய கல்வி முறையின் வளர்ச்சி

## (DEVELOPMENT OF WESTERN EDUCATION)

ஆங்கிலேயர் இந்தியாவில் பல்வேறு பகுதிகளை வென்று. தங்கள் அதி*கார*த்தை நிலை நாட்டிய போது *இந்திய*க் கல்வி *முறையி*ல் தலையிடவில்லை. அதை அபிவிருத்தி செய்யவும் விரும்பவில்லை. ஆனால் சிறிது சிறிதாக நம் நாட்டுக் கல்வி முறையில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது மேலும் இந்தியக் கல்வி முறையானது நம் நாட்டில் அவ்வப்போது எழுந்த சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களால் மட்டுமன்றி இங்கிலாந்தில் இத்துறைகளில் எழுந்த மாறுதல்களாலும் பாதிக்கப்பட்டது. 1800-ம் ஆண்டு வரை ஆங்கிலேயர்கள் ஒருசில ப*ள்ளிகளை*யும், கல்வி ஸ்தாபனங்களையும் அமைத்துத் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி போதித்தனர். ஆனால் இந்தியாவில் நிலையான கல்வி வளர்ச்சி 1813-ம் ஆண்டிலிருந்து தான் ஆரம்பித்தது. அதன்பின் கல்விமுறை சீராகவும் நிலை*யா*கவும் வளர்ச்சி அடைந்தது: ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இந்தியக் கல்வி முறை

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பாக இந்தியாவில் பழங்காலக் கல்வி முறையே நடைமுறையில் இருந்தது. சீரான ஓர் கல்வி அமைப்பு இல்லை. அப்போது கல்வியை மத நிலையங்களே போதித்து வந்தன. இந்துக்களின் பாடசாலைகள், முஸ்லீம்களின் மதராசாக்கள் ஆகியவற்றுடன் சில பாரசீகப் பள்ளிகளுமே இருந்தன. இந்துக்களுக்கு சமஸ்கிருதப் பண்டிதர்களும், முஸ்லீம்களுக்கு மௌல்விகளும் கல்வி போதித்தனர். கல்வி முறை

அனைத்தும் இலக்கியம், தத்துவம், மதம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டே இயங்கின. கணிதம், அரசியல், வரலாறு, புவியியல் ஆகியவை போதிக்கப்படவில்லை. சுருங்கக்கூறின், நமது கல்வி முறையானது வெளியுலகத் தொடர்பு இல்லாமல் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி தொடக்கத்தில் கல்வி வளர்ச்சி

ஆரம்பத்தில் ஆங்கிலக் கம்பெனி இந்தியக் கல்வி முறையில் தலையிடவில்லை. 1698-ம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட 'கிழக்கிந்தியக் *கம்பெனிச்* சட்டம்' கல்விப் பணியில் அதனை முதன் முதலாக ஈடுபடுத்தியது. கம்பெனியின் படையாட்களுக்காகப் பாதிரிமார் களையும், ப*ள்ளி*களையும் ஏற்படுத்துமாறு கம்பெனி அலுவலர்கள் இச்சட்டத்தினால் கோர*ப்பட்*டார்கள். எனவே சில பள்ளிகள்

கம்பெனியின் அலுவலர்களின் குழந்தைகளுக்காக நிறுவப்பட்டன. கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் 1781 ல் கல்கத்தாவில் 'கல்கத்தா மதராசா' என்ற கல்வி நிலையத்தை நிறுவினார். 1792-ல் காசியில் ஒரு இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் சர் சார்லஸ் கிராண்ட், வில்லியம் வில்பர்போர்ஸ் போன்ற கல்வியாளர்கள் இந்தியர் களுக்கு ஆங்கில மொழியைப் போதித்து மேனாட்டுக் கலைகளை இந்திய இளைஞர்களிடம் பரப்ப வேண்டும்' என்று அரசை கேட்டுக் கொண்டனர். 1813-ம் வருடப் பட்டயச் சட்டம்

இந்தியாவுக்கு வந்த தலைமை ஆளுநர்கள் ஒரு சிலர் கல்வி வளர்ச்சியில் அவ்வப்போது அக்கறை காட்டினர். பொதுவாக கல்வித் துறையில் கம்பெனியார் கவனம் செலுத்தவில்லை. இந்தியாவில் கல்வி முறை வளர்ந்தால், கல்வி அறிவு பெற்ற இந்தியர்கள் ஆட்சிக்குக் கீழ்படிய மறுத்து, அதனால் ஆட்சிக்குக் கேடு ஏற்படும் என்று நினைத்தார்கள். ஆனால் 1807 முதல் 1813-வரை கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த மின்டோ பிரபு கல்லூரிகளைச் சீர்திருத்த வேண்டுமெனவும், புதிய கல்லூரிகள் ஏற்படுத்த வேண்டுமெனவும் வ*ற்பு*றுத்தினார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் 1813-ம் வருடபட்டயச் சட்டம் இயற்றப்பட்டது. இவருடைய வற்புறுத்தலின் காரணமாகவே இச்சட்டத்தில் 'இந்தியக் கல்வி வளர்ச்சிக்காகவும், இலக்கிய முன்னேற்றத்திற்காகவும், விஞ்ஞான அறிவுப் பெருக்கத்திற்காகவும் ஆண்டுதோறும் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும்' என்ற ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. 'மேலை நாட்டுப் பண்பாட்டினையும், மொழியினையும் பரப்ப முற்படும் பாதிரியார்களுக்கு கம்பெனி அலுவலர்கள் உதவ வேண்டும்' என்றும் வற்புறுத்தப்பட்டது.

'நம் நாட்டுக் கல்வி வளர்ச்சியில் ஆங்கில அரசாங்கம் நேரடியாகப் பங்கு கொள்ள ஆரம்பித்தது இந்தக் கட்டத்திலிருந்து தான்' என்று கூறலாம். மெக்காலேயின் குறிப்புகள் : Mecaulay's Minutes, 1835 Feb.2

இந்த நிலையில் எத்தகைய கல்வி முறையைத் தோற்றுவிக்க வேண்டும் என்பது பற்றி ஆங்கிலேயர் விவாதம் செய்தனர். மேலை நாட்டு அறிவுக் கருத்துக்களை, வடமொழி, பாரசீக மொழி மூலம் போதிக்கலாம் என்று சிலரும், இந்திய மொழிகளின் வழியே போதிக்கலாம் என்று சிலரும், ஆங்கில மொழியே சிறந்த வழி என்று சிலரும் வற்புறுத்தி வந்தனர். ஆனால் ஆங்கில மொழி வழியே விஞ்ஞானம், மருத்துவம் ஆகியவை கற்பிப்பதற்கு ஆதரவு பெருகியது. இக்கருத்து கொண்டவர்களுக்குத் தலைமை தாங்கிய*வர்* மெக்காலே பிரபு என்பவராவார். இவர் 1835 பிப்ரவரி மாதம் தனது புகழ் பெற்ற குறிப்புகளை வெளியிட்டார்.

மெக்காலே குறிப்புகளின்படி ஆங்கில அரசின் கல்வி நோக்கமானது ஆங்கில மொழி வாயிலாக மேல்நாட்டு அறிவினை இந்தியரிடையே பரப்புவதாகும் என்றும், இந்தியப் பண்பாட்டின் *அடிப்ப*டையில் அப்போது நடத்தப்பட்டு வந்த பள்ளிகளை மூடிவிட்டு அவற்றிற்காகச் செலவிடப்படும் பணம் ஆங்கில மொழிப் பள்ளிகளுக்குச் செலவிட*ப்பட* வேண்டும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது. இக்குறிப்பினை ஏற்றுக்கொண்ட அப்போதைய கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு இதற்கேற்றபடி கல்வியமைப்பினை மாற்றியமைக்கும் ஆணைகளைப் பிறப்பித்தார். அதன்படி இந்தியக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆங்கிலமே பாட மொழியாக்கப்பட்டது. இந்தியக் கல்வி வரலாற்றில் 'மெக்காலேயின் குறிப்புகள்' சிறப்பிடம் பெறுகின்றன. சார்லஸ்வுட் என்பவரின் கல்வித் திட்டம் (Wood's Despatch)

1813-ம் ஆண்டு முதல் 1854-ம் ஆண்டு வரை இந்தியாவின் கல்வி முறையில் சில பிரச்சனைகளும் எழுந்தன. வளர்ச்சியும் ஓரளவு ஏற்பட்டது. 1835-ல் கல்கத்தாவில் ஒரு மருத்துவக் கல்லூரியும், 1845-ல் பம்பாயில் ஒரு மருத்துவக் கல்லூரியும் நிறுவப்பட்டன. 1847-ல் ரூர்க்கி என்ற இடத்தில் ஒரு பொறியியல் கல்லூரி நிறுவப்பட்டது. 1847-ல் பெண்களுக்கான பள்ளி ஒன்று வங்காளத்தில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் 1854-ம் ஆண்டை ஒரு முக்கிய மைல்கல் என்றே சொல்ல வேண்டும். அப்போது டல்ஹௌசி தலைமை ஆளுநராக இருந்தார். அவர் கல்வித்துறையில் மிகுந்த ஆர்வமுடையவர். அப்போது கம்பெனியின் நிர்வாகக் குழுவின் தலைவராக இருந்த சர் சார்லஸ் வுட் என்பவர், ஒரு புதிய கல்வி முறையை இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்தியக் கல்வித் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பினார். அதுவே 'வுட்ஸ் வெளியீடு' என்று புகழப்பட்டது. இந்த வுட்ஸ் வெளியீட்டிற்கு டல்ஹௌசி முழு ஆதரவு அளித்தார். வுட்ஸ் கல்வித் திட்டத்தில் காணப்பட்ட பதினொரு அம்சங்கள் பின்வருமாறு:

1) இந்திய மக்கள் ஆங்கிலக் கல்வியின் பயன்களைப் பெறுமாறு செய்வது கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். இது இந்தியர்களின் அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றை வளர்ப்பதுடன் அவர்களை நேர்மையுள்ள அரசாங்க அலுவலர்களாக்கும்.

2) மேலை நாட்டு அறிவினை இந்திய மக்களிடம் பரப்புவதே கல்விக் கொள்கையின் நோக்கமாக அமைய வேண்டும்.

3) இந்திய மொழிகள், ஆங்கில மொழியுடன் இணைந்து கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்திய மொழிகள் புறக்கணிக்கப்படுதல் கூடாது.

4) உயர் கல்வியில் இந்தியப் பண்பாட்டுத் துறைப் பாடங்களைக் கற்க மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர ***வேண்டும்.***

5) புதிய பள்ளிகளை நிறுவுவதில் அரசின் முயற்சியுடன் தனிப் பட்டவர்களின் முயற்சிகளும் வரவேற்கப்பட வேண்டும்

6) இந்திய மாகாணங்களில் கல்வித் துறை' (Department of Education) நிறுவப்பட்டு, இவைகளின் செயல்களைத் திட்டமிட்டு மேற்பார்வையிட பொதுக்கல்வி இயக்குநர்கள் (Director of Public Instruc tion) நியமிக்கப்பட வேண்டும்.

7) கல்கத்தா, பம்பாய் போன்ற முக்கிய நகரங்களில் பல்கலைக் *கழகங்க*ள் அமைக்கப்பட வேண்டும்.

8) ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி என்று பள்ளிக் கல்வியில் பல நிலைகள் இருக்க வேண்டும்.

9) சமய சார்பற்ற கல்வி நிலையங்களுக்கு உதவி மானியங்கள் அளி*க்கப்ப*ட வேண்டும். மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டும்.

10) ஆசிரியர்களாகப் பணிபுரிய விரும்புபவர்களுக்கு பயிற்சி *அ*ளிக்கப்பட்டு அவர்களின் நிலைமை உயர்த்தப்பட வேண்டும்.

11) இந்திய மொழிகளில் நல்ல பாட நூல்கள் எழுதப்பட வேண்டும். தொழிற்கல்வி, பெண் கல்வி ஆகியவற்றிற்கும்
முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த 'வுட்ஸ் கல்வித் திட்டம்' இந்தியாவின் 'கல்வித்துறைப் *பட்ட* யம்' (Magna Carta of English Education in India) என்று புகழப்ப டுகிறது. இந்த ஆலோசனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்று செயல்படுத்தினார் டல்ஹௌசி. 1857-ல் சென்னை , பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. எல்லா மாநிலங்களிலும் கல்வி

இலாக்காக்கள் ஆரம்பிக்கப்பட்டு, பொதுக் கல்வி இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக பள்ளி ஆய்வாளர் நியமிக்கப்பட்டனர். வுட் அறிக்கைக்குப் பின்னர் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி

சார்லஸ் வுட் அறிக்கையின் விளைவாக பழைய உயர் நிலைப் பள்ளியை பல்கலைக்கழக குழு 1857-ல் சென்னைப் பல்கலைக் கழகமாக மாறியது. இதற்கான சட்டத்தை இந்திய அரசியலமைப்புக் குழு இயற்றியது. பல்கலைக் கழகக் குழுவின் கீழிருந்த உயர் நிலைப் பள்ளி பொதுக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு மாநிலக் கல்லூரி என்று பெயரிடப்பட்டது. புதிய பல்கலைக் கழகம் தேர்வுகள் நடத்தும் அதிகாரத்தையும், இதனுடன் சேர்ந்த கல்லூரிகளை நிர்வகிக்கும் பொறுப்பினையும் பெற்றிருந்தது. ஆரம்ப காலத்தில் பாடங்கள் க*ற்பி*ப்பதற்காக பேராசிரியர்கள் யாரும் நியமிக்க*ப்ப*டவில்லை.

1857-ம் வருட சிப்பாய் கலகம் கல்வி வளர்ச்சியைப் பெருமளவில் பாதித்தது. பள்ளிகள் நடத்தும் கிறிஸ்தவப் பாதிரிமார்களுடன் அரசாங்கம் கண்டிப்புடன் செயல்பட்டது. அரசு உதவித் தொகை வழங்குவதிலும் கண்டிப்புடன் இருந்தது. இதனால் தனியார் கல்வி நிறுவனங்கள் சிறந்து வளர முற்பட்டன. 1873-ம் ஆண்டு வரை சென்னைப் பல்கலைக் கழகம் மாநிலக் கல்லூரியின் ஒரு பகுதியிலேயே இயங்கி வந்தது. 1857-ல் இளங்கலை படிப்பிற்கான தேர்வும் இப்பல்கலைக் கழகத்தில் நடத்தப் பட்டன. முதன் முதலில் இந்தப் பட்டப் படிப்பிற்கான தேர்வு எழுதிய இரு மாணவர்கள் யாழ்பாணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இக்காலத்தில் தான் சென்னை மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி ஆகியவையும் துவக்கப்பட்டன. இந்தத் தொழிற் கல்விக்கும் தேர்வுகள் நடத்தும் பொறுப்பு சென்னைப் பல்கலைக் கழகத்திற்கே இருந்தது.

1857-க்கும் 1875க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் சென்னை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கல்லூரிகள் துவக்கப்பட்டன. கும்பகோணத்தில் இருந்த உயர்நிலைப் பள்ளி கல்லூரியாக மாற்றப் பட்டது. தனியார் துறையால் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி துவங்கப் பட்டது. மேலும் சென்னை, நாகப்பட்டினம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கிறிஸ்தவ சமயத்தவர்களால் கல்லூரிகள் துவக்கப்பட்டன. *187*1-ல் மொத்தத்தில் சென்னை மாநிலத்தில் பன்னிரெண்டு கல்லூரிகள் இயங்கின. அடுத்த பத்து ஆண்டுகளில் எண்ணிக்கை இருமடங்காகியது. மாநிலக் கல்லூரியின் முதல் முதல்வராக E.P.போவல் என்பவர் பணியாற்றினார்.

இவ்வாறு வுட்சின் அறிக்கை வெளியிடப்பட்ட பின் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் சென்னை மாநிலம் கல்வித் துறையில் பெரும் முன்னேற்றம் கண்டது. ஆனால் அரசு உயர் கல்விக்குச் செலவிட்டது போல ஆரம்பக் கல்வி மீது அக்கறை காட்டவில்லை. கிறிஸ்தவ

பாதிரிமார்களும் தங்களுக்குத் தாராள சலுகைகள் வழங்கப் படவில்லை என்று வருந்தினர்.

**ஹண்ட ர் உயர் ஆணைக்குழு (The Hunter Commission) : 1882**

*18*82, பிப்ரவரி மாதம் ரிப்பன் பிரபு W.W.ஹண்டர் என்பவரின் தலைமையில் 22 உறுப்பினர்களைக் கொண்ட 'கல்வி உயர் ஆணைக்குழு” ஒன்றை அமைத்தார். 1854-ம் ஆண்டு *ஏற்படுத்தப்பட்ட* சார்லஸ் வுட் என்பவரின் கல்வித் திட்டத்தில் உள்ள நிறை, குறைகளை ஆராய்ந்து அவற்றிற்கு தக்க பரிகாரம் செ*ய்யும்படி* கேட்டுக் கொள்ள*ப்பட்ட*து. இக்குழு பல்வேறு இடங்களுக்குச் சென்று கல்வி பற்றிய பல விபரங்களைத் திரட்டி தனது அறிக்கையை வெளியிட்டது. இதன் முக்கியப் பரிந்துரைகள் வருமாறு:

1) பள்ளிகளை அரசு தானே திறந்து நிர்வகி*ப்ப*தற்குப் பதிலாக, கல்வி முறை கெடாதபடி பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகத்தை தனியாரின் நிர்வாகத்திற்கு மாற்றிவிடுவது நல்லது. முக்கியமாக தொடக்கக் கல்வி நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

2) தனிப்பட்டோரால் தொடங்கப்பட்டு நடத்தப்படும் பள்ளிகளுக்கு அரசு தேவைப்படும் அளவுக்கு மானியம் (Grant) *அ*ளிக்கும். இப்பள்ளிகள் அரசு பள்ளிகளின் தரத்தில் இருப்பதாகவே கருதப்படும். இவற்றின் உள் விவகாரத்தில் அரசு தலையிடாது.

3) அரசு கல்லூரிகளுக்கும், தனியார் கல்லூரிகளுக்கும், பொதுவான மாதிரிப் பாடநூல் ஒன்றை தயாரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

4) பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட சமயம் பற்றி மட்டும் போதனை நடத்தப்பட்டால் பிற சமயத்தைச் சேர்ந்த குழந்தைகள் அவ்வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இருக்கக் கூடாது.

5) தொழிற் பயிற்சிக்கான கல்விக்கு உயர்நிலைக் கட்டத்தில் வாய்ப்புகள் அமைத்துத் தர வேண்டும்.

6) தொடக்கக் கல்வி வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

ஹண்டர் குழுவின் பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. நாட்டில் ஒவ்வொரு ஆண்டிலும் கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி பற்றி ஆண்டறிக்கை தயாரிப்பதற்கும் அரசு ஆணையிட்டது. இதன்பின் உயர்கல்வி முன்னேற்றம் மிக வேகமாக நடைபெற்றது. பெண்கள் கல்வி பண்டைக் காலத்தில் தமிழகத்தில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆனால் மத்திய காலத்திலும், நவீன காலத்திலும் பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வுட்ஸ் அறிக்கை, 1859-ம் வருட கல்வி அறிக்கை ஆகியவை பெண் கல்வியைக் கவனிக்காமல் விட்டுவிட்டன. 1868-ல் தான் மத்திய அரசு பெண் கல்விக்காக ஒவ்வொரு

மாநிலத்திற்கும் பன்னிரெண்டாயிரம் ரூபாய் ஒதுக்கி இதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. சென்னை மாநிலத்தில் துவக்க*ப்பட்ட* பெண்கள் பள்ளிகளின் முதல் கண்காணிப்பாளராக திருமதி.பிராண்டு நியமிக்க*ப்பட்*டார். பெண்கள் கல்விக்கான வளர்ச்சிக்கு அவர் செய்த சேவை மதிக்கத்தக்கதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் மாநிலத்தில் 34 பெண் உயர்நிலைப் பள்ளிகளும், மூன்று பெண் கல்லூரிகளும் செயல்பட்டன. உடற்பயிற்சிக் கல்வி உட*ற்பயி*ற்சிக் கல்வியின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட வில்லை . இதற்கு அரசு, மக்கள், கற்றறிந்தவர்கள் அனைவரும் பொறுப்பாவார்கள். 1877-ல் உடற்பயிற்சிக் கல்விக்கு என தனிநிதி ஒதுக்கப்பட்ட பின்பு தான் மாநிலத்தில் உடற்கல்வி சிறப்புற ஆரம்பித்தது. 1878-ல் விளையாட்டு அரங்கங்களும், மைதானங்களும் அரசாங்கப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் விளையாட்டுக்கென்று ஆசிரியர்கள் பள்ளிகளில் நியமிக்கப் பட்டனர். 1858-ம் ஆண்டில் உடற்பயிற்சிக் கல்வியில் அதிக நாட்டம் செலுத்த*ப்ப*ட்டது. அதுவும் சென்னை நகரில் இருந்த மாணவர்களுக்கு மட்டுமே பயனளிக்கும் வகையில் இருந்தது.

## சிம்லா மாநாடு: 1904

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய கல்வி அமைப்பதில் புதிய மாறுதல்களும் அவற்றைச் செயல்படுத்துவதில் புதிய தீவிரமும் காணப்படலாயின. அப்போது இந்திய தலைமை ஆளுநராக இருந்த கர்சன்பிரபு கல்விப் பிரச்சனையில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். இவர் 1904-ல் சிம்லாவில் பல்வேறு மாகாணங்களின் பொதுக்கல்வி இயக்குநர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அந்த

மாநாட்டில் இந்தி*யாவி*ல் நிலவி வந்த கல்வி முறையின் அமைப்பு, அதன் கறைபாடுகள், அவற்றை நீக்க வழிகள் ஆகியன மீண்டும் ஆராயப்பட்டன. இந்த மாநாட்டின் விளைவாக கல்வி ***வளர்ச்சியில்*** அரசு நேரடியாக தீவி*ர*மாக பங்கு கொள்ள ஆரம்பித்தது. இந்தியப் பல்கலைக் கழகங்களின் சட்டம்: 1904

இந்தியக் கல்வியின் தரத்தை உயர்த்துவதில் கர்சன் பிரபுவின் ஆர்வத்திலிருந்து எழுந்த முக்கிய விளைவுகளில் ஒன்று 1904-ல் உருவாக்கப் பட்ட 'இந்திய பல்கலைக் கழகங்களின் சட்டமாகும்' இச்சட்டத்தின்படி பழைய பல்கலைக்கழகங்களின் சட்ட அதிகாரங்கள் விரிவுபடுத்தப் பட்டன. எல்லா பல்கலைக்கழகங்களும் கல்வி போதனை நிறுவ*னங்க*ளாக அங்கீகரிக்கப்பட்டன. பல்கலைக் கழகங்களின் ஆட்சிப் பேரவையும், ஆட்சிக் குழுவும் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. பல்கலைக் கழகங்களில் காணப்பட்ட சில குறைபாடுகள் நீக்கப்பட்டன. ஆனால் இச்சட்டத்தால் பல்கலைக்

கழகங்கள் மீது இருந்து வந்த அரசுக் கட்டுப்பாடு மேலும் கடுமையாகியது. பல்கலைக் கழகக் கல்வி 1910-ம் ஆண்டிலிருந்து கல்வித்துறை, உள்நாட்டுத் துறையிலிருந்து புதிய கல்வி இலாகா துறைக்கு மாற்றப்பட்டது. இரண்டாம் ஹார்டிஞ்சு பிரபு காலத்தில் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினரான சர்.ஹார்கோன்ட் பட்லர் (Sir Harcount Butler) 1913 பிப்ரவரி 21-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். இத்தீர்மானத்தில் பல்கலைக் கழகங்களின் ஆட்சி எல்லையை வரையறுக்க வேண்டியதின் அவசியம் வற்புறுத்தப் பட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் பல்கலைக்கழகங்களும், ரெசிடென்ஷியல் (Residential) பல்கலைக் கழகங்களும் நிறுவ வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக 1916-ல் காசியிலும், 1917-ல் பாட்னாவிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

**சேட்லர் குழு: 1919**

செம்ஸ்போர்ட் பிரபு அரச பிரதிநிதியாகப் பணியாற்றிய போது, 1917-ல் சர்.மைக்கேல் சேட்லர் தலைமையில் (Michael Sadler) கல்கத்தா பல்கலைக் கழகத்தின் சீரமைப்பு பற்றி ஆராய்வதற்காக, ஒரு குழுவை அரசு நியமித்தது. இக்குழு உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி குறித்த எல்லா அம்சங்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து 1919ல் ஒரு அறிக்கையை அளித்தது. அதன் பரிந்துரைகள் வருமாறு:

1) நாட்டின் முன்னேற்றத்திற்குத் தகுந்த கல்வியை உயர்நிலைப் பள்ளிகள் அளிக்கத் தவறிவிட்டன.

2) உயர் கல்வியில் நடுநிலை வகுப்புகள் (Intermediate Section) பல்கலைக் கழகத்திலிருந்து பிரிக்க*ப்பட்டு* உயர்நிலைப் பள்ளிகளுடன் இணைக்கப்பட வேண்டும்.

3) மத்திய அரசின் ஆதரவில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட்டு, அது ஏனைய பல்கலைக்கழகங்கட்கு மாதிரியாகவும், அவைகளின் குறைகளை நீக்கவும் பயன்படும் வகையிலும் அமைக்கப்பட வேண்டும்.

4) பல்கலைக் கழக வேலைகளில் அ*ப்ப*குதி மக்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும். புதிய கற்பிக்கும் பல்கலைக் கழகங்கள் ஆரம்பி*க்கப்பட* வேண்டும்.

இந்த சேட்லர் குழுவின் தீர்மானத்திற்கேற்ப பல மாற்றங்கள் பல்கலைக் கழகங்களில் செயல்பட்டன. பழைய பல்கலைக் கழகங்கள் சீர்திருத்தப்படுவதற்கும், புதிய பல்கலைக்கழகங்கள் தோன்றுவதற்கும் இக்குழுவின் அறிக்கை ஓர் தூண்டுகோலாக அமைந்தது. இதன்படி 1919-க்கும் 1929க்கும் இடையே 13 பல்கலைக்கழகங்கள் தோன்றின. 1925-ல் பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப் பதற்காக அகில இந்திய பல்கலைக்கழக வாரியம் (Inter University Board) ஒன்று நிறுவப்பட்டது.

**ஹர்தாக் குழு அறிக்கை : 1929**

கல்வி வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்த சீர்திருத்த வாதிகளும், அரசியல் தலைவர்களும் கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அரசை வ*ற்பு*றுத்தினர். எனவே அரசு ஹர்தாக் என்பவர் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. இக்குழு தனது அறிக்கையை 1929-ல் அரசிடம் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை இந்தியக் கல்வி வள*ர்ச்சியின்* வரலாற்றில் முக்கிய*மா*ன ஒன்றாகும். இந்த அறிக்கை இந்தியர்களுக்கு கல்வி கற்பதில் நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், இலக்கியவாதிகளின் எண்ணிக்கையைப் பெருக்கவும், கல்வித் தரத்தை உயர்த்தவும் பரிந்துரை செய்தது.

**1935-ம் வருடச் சட்டப்படி கல்வி நிலை**

மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கியதின் விளைவாக கல்வி நிர்வாக முறை மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்டது. கல்வித் துறையில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. கல்விக்காக தாராளமாக நிதி உதவி செய்வதாக அரசு அறிவித்தது. ஆனாலும் 1930-ம் வருட பன்னாட்டு பொருளாதாரச் சிக்கல்களால் புதிய கல்வித் திட்டங்கள் நடைமுறைப் வக்கப்படவில்லை . 1937-ல் பல மாற்றங்கள் ஏற்பட்டது. நிலங்களில் அமைக்கப்பட்ட பிரதிநிதித்துவ அரசுகள் கல்விக்கென பெருந்தொகையை ஒதுக்கியது. கட்டாய ஆரம்பக் கல்வி முறையைக் கொண்டுவரத் தி*ட்ட*ங்களும், முறைகளும் வகு*க்கப்பட்ட*ன. தொழிற்கல்வி வளர்ச்சி

தொழிற் கல்வியில் அனுபவமிக்க அப்பாட், வுட் போன்றோர் களின் தலைமையில் இந்தியத் தொழிற் கல்வி பற்றி ஆய்வு *செய்ய*ப் பட்டது. இந்தியாவில் கற்பிக்கப்படும் தொழிற்கல்வி ***வேலைவாய்ப்பு*** வழங்குவதாக அமையவேண்டும். பயிற்சி பெ*ற்ற* ***தொழில் கல்வியாளர்*** களுக்கு வேலைவாய்ப்பினைத் தரும் பொறுப்பினை தொழிலதிபர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசாங்கமும் அரசுத் தொழிற்துறையில் பணிபுரிய தொழிற்கல்வி பயின்றவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று இவர்கள் பரிந்துரை செய்தனர். இந்தப் பரிந்துரைகள் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ள*ப்பட்*டாலும், இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டதால் செயல்படுத்தப்படாமல் போ*ய்விட்ட*து. இருப்பினும் தொழிற்கல்வியை உயர்நிலைப் பள்ளியிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பு வரையிலும் கற்பிப்பதற்கான முறைகளை அரசின் ஆணைப்படி கல்வித்துறை மேற்கொண்டது.

**வார்தா ஆதாரக் கல்வித் திட்டம்: 1938**

1935-ம் ஆண்டுச் சட்டப்படி தொழிற்கல்வியின் கல்வி நிலை 1938-ல் காந்தியடிகள் 'வார்தா ஆதாரக் கல்வித் திட்டம்' என்று வழங்கப்படும் தமது புதிய கல்வித் திட்டத்தை வகுத்தார். “கல்வி நிறுவனங்களிலுள்ள தொழில்களைக் கல்வியின் கருவியாகக் கொண்ட *மாணவர்க*ளுக்கு எல்லாப்

*பாட*ங்களையும் கற்பிப்பதே இத்திட்டத்தின் *அடிப்ப*டையாகும்". இந்த ஆதாரக் கல்வி இந்தியாவின் கல்வி முறையில் நிலையான ஓரிடத்தைப் பெற்றுள்ளது. **சர்ஜ ன்ட் கல்வித் திட்ட ம் (Sargeant Scheme for Educcation): 1944**

இரண்டாம் உலகப் போர் முடிவடையும் நிலையில், இந்தியக் கல்வி அமைப்பை மாற்றி அமைக்க உதவக் கூடிய வகையில் 1944-ம் ஆண்டு அரசின் மத்திய ஆலோசனைக் குழு ஒரு திட்டத்தை வெளியிட்டது. இந்தத் திட்டம் இந்திய அரசாங்கத்தின் கல்வி ஆலோசகரான சர் ஜான் சர்ஜன்ட் என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்டதால் இதற்கு 'சர்ஜன்ட் கல்வித் திட்டம்' என்று
*பெயர்*.

**இத்திட்டத்தின் சில கருத்துக்கள் வருமாறு:**

1) கல்வியுடன், மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கான பயிற்சியும் இணைந்து தரப்பட வேண்டும்.

2) மூன்று வயது வரையுள்ள குழந்தைகளுக்கு நர்சரிப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும்.

3) 6 வயது முதல் 14 வயது வரையுள்ள திறமைமிக்க மா*ணவர்* களுக்கு உயர்நிலைக் கல்வி அளிக்கப்படவேண்டும். இதேபோன்று பல்கலைக் கழகக் கல்வியும் அளி*க்கப்ப*ட வேண்டும்.

4) 11 வயது முதல் 17 வயது வரை, திறமைமிக்க மாணவர்களுக்கு உயர்நிலைக் கல்வி அளி*க்கப்ப*ட வேண்டும். இதேபோன்று பல்கலைக்
கழகக் கல்வியும் அளிக்கப்பட வேண்டும்.

5) தொழில் நுட்பக் கல்வி, வாணிபக் கல்வி, கலைக் கல்வி ஆகியவை வளர்க்க*ப்ப*ட வேண்டும். உடல், மனநிலை குறைபாடுடைய குழந்தைகளின் கல்வியிலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

6) சுமார் இருபது ஆண்டுகளுக்குள் முதியோர் எழுத்தறிவின்மைப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். பொது மக்களுக்கு நூல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும்.

7) ஆசிரியப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்க*ப்ப*ட வேண்டும்.

8) கட்டாய உடற்கல்வி, உடல்நலப் பரிசோதனை, உடல் நலம் குன்றிய பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு ஆகியவை அளிக்கப்பட வேண்டும். சமூகச் செயல்கள், பொழுது போக்கிற்கான செயல்கள் ஆகியவை போதியளவு பள்ளிக் கல்வியில் இடம் பெறுவது அவசியம்.

இந்த சர்ஜனட் திட்டம் கல்வி அமைப்பு எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கு உதவும் பல நோக்கங்களைக் குறிப்பிட்டது. இங்கிலாந்தில் காணப்படும் கல்வித் தரத்தைப் போன்ற நிலையை இந்தியா அடைய உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாக *அமைந்த*து. இத்திட்டத்தை

செயல்படுத்த 200 கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப் பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி

a) 1904-ம் வருடச் சட்டம் 1904-ம வருட இந்தியப் பல்கலைக்கழகங்களின் சட்டப்படி, சென்னைப் பல்கலைக்கழக அரசியலமைப்பில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதன்படி செனட்டின் உரிமைகள், அதிகாரங்கள், பல்கலைக் கழக செயல்முறைகள் ஆகியவைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. செனட் குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகவும், நியமன உறுப்பினர் களின் எண்ணிக்கை
குறைவாகவும் இருக்கும்படி அமைக்கப்பட்டது. இது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அரசாங்க நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதற்கு பல வழிகளிலிருந்து எதிர்ப்பு கிளம்பின

b) ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவப்படுதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல புதிய *பா*டங்கள் துவக்கப் பட்டன. ஏற்கனவே நடைபெற்று வந்த துறைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இவை அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். கீழ்த்திசை மொழிகள், குறிப்பாக தென்னிந்திய மொழிகள் ஆதரிக்கவும், ஊக்குவிக்கப்பட்டன. பழமையான கீழ்த்திசை மொழிகளையும், தமிழ் மொழியையும் வளர்ப்பதற்கான கருத்துக்களை வழங்குவதற்காக குழு ஒன்றினை சென்னைப் பல்கலைக்கழகம் 1924-ல் நியமனம் செய்தது. அக்குழு கீழ்த்திசை மொழிகளிலும் உயர்கல்வி ஆராய்ச்சிகள் துவக்கப்படல் வேண்டும் என்று ஆலோசனை கூறியது. அதன்படி தமிழ், தெலுங்கு, கன்னடம், அராபி, பெர்சியன், உருது ஆகிய மொழிகளுக்கு துறைகள் அமைக்க ஏற்பாடு செ*ய்யப்பட்ட*ன. விரிவுரையாளர்கள், ஆராய்ச்சி உதவி*யாள*ர்கள் நியமிக்கப்படவும் வழி செய்யப்பட்டது.

1930-ல் பல மொழிகளின் துறைகள் மறுபரிசீலனை செய்யப் பட்டது. அதன்படி திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய துறைகளுக்குத் தனித்தனியாக விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டனர். புதிய துறைகள் துவக்குவது மட்டுமல்லாமல் நடைமுறையிலிருக்கும் ஆராய்ச்சித் துறைகளை முன்னேற்றும் வழிகள் *செய்யப்ப*ட்டன. 1925-ல் பொருளாதாரத் துறை நிரந்தரமாக்கப் பட்டது. மாநிலக் கல்லூரியின் பொருளாதாரப் பேராசிரியரே சென்னைப் பல்கலைக் கழகப் பொருளாதாரத் துறை பகுதி நேரப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1926-ல் வணிகவியல் துறை துவக்க*ப்பட்ட*து. இந்திய வரலாறு, தொல்பொருளியல் துறைகளுக்கும் பேரா*சிரிய*ர்கள் நியமிக்க*ப்ப*ட்டனர்.

வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறையினர் மெக்கின்ஸியின் கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்தனர். 244 கையெழுத்துப் பிரதிகள்

வெளியிடப்பட்டன. இவை பதினாறாம், பதினெட்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட அரசியல் வரலாற்றைத் தெரிந்து கொள்ள மிகவும் துணை செய்கின்றன.

1919-ம் வருட சட்டப்படி கல்வித் துறை மாநில அரசின் பொறுப்பில் வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1923-ல் இயற்றப்
பட்ட *சட்டப்ப*டி கல்வித்து*றை மாற்றப்பட்ட* துறையின் கீழ் கொண்டு வ*ரப்பட்ட*து. கல்வித் துறை அமைச்சரவையிலிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரின் பொறுப்பில் வைக்கப்பட்டது. *1923*-ம் வருடச் சட்டம் பல்கலைக் கழக*த்திற்கு* தன்னாட்சி வழங்கியது. இதிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் அரசுக்கும் உறவு நெருக்கமாக இருந்த*து.* அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தோற்றம்

சென்னை மாநிலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற *எ*ண்ணம் பலரிடம் காண*ப்ப*ட்டது இந்த மாதிரி மொழியை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவும், எதிர்ப்பும் காணப்பட்டது. 1925-ல் ஆந்திரப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கான ஆதரவு அதிகரித்தது. எனவே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று ஆரம்பி*ப்ப*தற்கான ஆயத்த*ங்களைச்* செய்வதற்காக குழு ஒன்றை சென்னைப் பல்கலைக் கழகம் அமைத்தது.

இச்சூழ்நிலையில் 1921-ல் செட்டிநாடு அரசர் அண்ணாமலைச் செட்டியார் சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியைத் துவக்கினார். முதலில் இளங்கலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் மீனாட்சி கல்லூரியுடன் சேர்ந்த சமஸ்கிருதக் கல்லூரியும், ஒரியண்டல் கல்லூரியும் துவக்கப் பட்டன. 1927-ல் அறிவியல் பட்டப் ப*டிப்பு*களும், இளங்கலை ஹானர்ஸ் படிப்புகளும் மீனாட்சி கல்லூரியில் துவக்கப்பட்டன. அப்போது சென்னை மாநிலத்தில் இருந்த Dr.P.சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவை பல்கலைக் கழகம் துவங்குவதற்கு ஊக்கம் அளித்தது. 1928-ல் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட ஆய்வுக் குழுவும் பல்கலைக் கழகம் துவக்கப்பட வேண்டியதின் அவசியத்தை உணர்த்தியது.

இதே நேரத்தில் அண்ணாமலைச் செட்டியார் மீனாட்சி கல்லூரியின் தரத்தை உயர்த்தி அதனுடன் சேர்ந்த மற்ற கல்லூரிகளையும் ஒருங்கி*ணை*த்தார். ஒரே நிர்வாகத்தின் கீழ் தனிப் பல்கலைக் கழகமாக மாற்றுவதற்காக, இருபது இலட்சம் ரூபாய்க்கு அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தினார். எனவே அந்த அறக்கட்டளையின் பெயரால் 1929-ல் பல்கலைக் கழகம் துவக்க*ப்ப*ட்டது. இது அவரது பெயராலேயே 'அண்ணாமலைப் பல்கலைக் கழகம்' என்று அழைக்கப்பட்டது. இதனை ஒரு

தமிழ்ப் பல்கலைக் கழகமாக்க வேண்டும் என்று கருதினாலும் இங்கு தமிழ் மட்டுமல்லாது சமஸ்கிருதம், அறிவியல் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இது தமிழகத்தில் தொடங்கப்பட்ட இரண்டாவது சிறந்த பல்கலைக்கழகமாகும்.

1947-ம் ஆண்டுக்குப் பின் சுதந்திர இந்தியாவின் வளர்ச்சிக்கான திட்டங்களில் கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகள் முக்கிய இடத்தைப் பெற்றன. 1948-ல் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது தலைமையில் பல்கலைக் கழக அமைப்பினை ஆராய்வதற்கு ஒரு கல்விக்குழு அமைக்கப் பட்டது. அதன் பின்னர் 1952-ல் உயர்நிலைக் கல்வியின் சீரமைப்பிற்காக டாக்டர் A.L.முதலியார் அவர்களது தலைமையில் கல்வி ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1964, அக்டோபர் 2-ல் டாக்டர் கோத்தாரி என்பவரது தலைமையில் நெகிழ்ச்சியுள்ள கல்வியமைப்பை ஆராய்ந்து உருவாக்கவும், பல்வேறு கல்விப் பிரச்சனைகளுக்கு நாட்டு நலன்களுக்கு உகந்த வகையில் தீர்வுகாண உதவவும் ஒரு கல்விக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுக்களின் பரிந்துரையின்படி தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி சீராக நடைபெற்று வருகிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், நலனுக்கும் கல்வி அடிப்படையாகும். விஞ்ஞான அறிவு, தொழில் நுட்பத்திறன், மனித சக்தியினை நன்கு பயன் படுத்துதல் போன்றவற்றைப் பொறுத்தே இன்று ஒரு நாட்டின் முன்னேற்றம் அமைந்து வருகிறது. எனவே, கல்வி அமைப்பினை நன்கு உருவாக்கி கல்வித் தரத்தினை உயர்த்த மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் நாட்டின் ஒற்றுமையினையும் வளர்ச்சியினையும் உறுதியாக்க முடியும்.

## கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள்
## (CHRISTIAN MISSIONARY ACTIVITIES)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியில் ஆர்வமிகு முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களே ஆவர். அவர்கள் மனிதாபிமான உணர்வோடு, சமய நோக்கத்துடன் சாதி மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு தமிழர் களிடையே தொண்டாற்றினர். தமிழக சமுதாயத்தில் காணப்பட்ட பல கொடிய பழக்கவழக்கங்கள் ஒழிக்கப்படுவதற்குக் காரணமானார்கள். சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றிவிட்ட சாதி வேற்றுமைகளையும் பிற சமூகச் சீர்கேடுகளையும் கண்டித்தனர். அவர்களது நோக்கம் மதம் மாற்றுவதே என்றாலும் அதற்காக தமிழக மக்களை அணுகும் போது அவர்களின் சமூகப் பிரச்சனைகளில் கவனம் செலுத்தினர். இதனால் தமிழகத்தில் கிறிஸ்தவ மதம் வேகமாகப் பரவியது. சமயப் பரப்பாளர்களின் வருகை ஐரோப்பியர்கள்

வருகையுடன் தமிழகத்தில் கிறிஸ்தவ சமயம் வேரூன்றத் தொடங்கியது. பதினாறாம் நூற்றாண்டில் பிரான்சிஸ் சேவியர் காலம் முதற்கொண்டு கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் இந்தியாவில் தங்கள் பணியை ஆற்றி வந்தனர். தமிழகத்தில் கிறிஸ்தவ சமய உண்மைகளைப் பரப்பிய துறவிகளுள் இயேசு சங்கத் துறவிகள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். அவர்களுள் மதிக்கப்படத்தக்கவர் மதுரா மிஷினைச் சேர்ந்த ராபர்ட்-டி - நொபிளி என்பவராவார். தமிழகத்தில் இவர் ஐம்பது ஆண்டுகள் சமயத் தொண்டாற்றினார். மேலும் மதுரா மிஷினைச் சேர்ந்த ஜான்-டி-பிரிட்டோ , ஜோசப் பெஸ்சி போன்றோர் திருச்சி, மதுரை பகுதிகளில் சமயத்தைப் பரப்பினர்.

கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகள் காரணமாக உள்ளூர் மக்களின் உணர்ச்சிகள் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் கொண்டதால், கிழக்கிந்தியக் கம்பெனி தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவர்கள் குடியிருக்க அனுமதி வழங்க மறுத்துவிட்டது. எனவே அவர்கள் கம்பெனி ஆட்சிக்குட்பட்ட பகுதிக்கு வெளியே தங்கி சமயத்தைப் பரப்பி வந்தனர். அப்படிப்பட்ட சமயப் பரப்பாளர்களில் முக்கியமானவர் செராம்பூரில் தங்கிப் பணியாற்றிய வில்லியம் கேசரி ஆவார்.

1813-ம் வருட பட்டயச் சட்டத்தின்படி கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் இந்தியாவுக்கு சென்று சமயத்தைப் பரப்ப அனுமதிக்கப் பட்டது. சமய நிர்வாகத்தைக் கவனிக்க தனித்துறை ஒன்றை அமைக்கும்படி கம்பெனி கேட்டுக் கொள்ளப்பட்டது. எனவே கல்கத்தாவில் கிறிஸ்தவ சமய வட்டத் தலைவர் அமர்த்தப்பட்டார். பிறகு அங்கு மூன்று கிறிஸ்தவ சமய வட்டத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். கருணை வடிவமான பிஷப் ஹீபர் என்பவரும், துடிதுடிப்புடன் பணியாற்றிய டேனியல் வில்சன் என்பவரும் இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்துக்குத் தனிச் சிறப்பையும் விறுவிறுப்பையும் ஏற்படுத்தித் தந்தனர். அதுமுதல் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர் குழுக்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரித்தது. ஆங்கிலேயர்களைத் தவிர ஜெர்மானியர்களும், அமெரிக்கர்களும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் இந்தியா வந்தனர்.

**தமிழகத்தில் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள்**

**a) பார்த்தலோமியோ சீகன்பால்க்**

இந்தியாவிற்குப் புரட்டாஸ்தந்து சமயப் பரப்பாளர்களை அனுப்ப வேண்டும் என்று முதன் முதலாகக் கருதியவர் டென்மார்க் நாட்டின் அரசர் நான்காம் பிரடரிக் ஆவார். அப்போது கிறிஸ்தவ இறையியல் பயின்று வந்த பர்த்தலோமியோ சீகன் பால்க், ஹென்றி புளுச்சாய் ஆகியோர் இந்தியா செல்ல முன்வந்தனர். இவர்கள் *17*06-ல் தரங்கம்பாடி வந்தடைந்தனர். இவர்களால் அமைக்க*ப்பட்டதே* தரங்கம்பாடி மிஷின் ஆகும்.

இவர்கள் தரங்கம்பாடியில் சமயத் தொண்டும் சமூகப் பணியும் புரிந்தனர். சமயக் கொள்கைகளை தமிழ் மக்களிடம் பர*ப்ப* சீகன்பால்க் தமிழ் கற்றார். தமிழ் இலக்கணத்தைக் கற்றுத் தேறினார். கிறிஸ்தவ சமய நூலான புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார். தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகி மதமாற்றம் செய்தார். 1707-ல் முதல் முதலில் ஒன்பது தமிழர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். மேலும் கிராண்ட்லர், ஜார்டன், போவிங் போன்றோரும் தரங்கம்பாடி வந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் அதிக அக்கறை காட்டினர். ஜான் பிஷப் பெப்ரிஷியஸ் என்பவர் கிரேக்க மொழியிலிருந்து பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

**b) ஸ்வார்ட்ஸ்**

*தர*ங்கம்பாடி கிறிஸ்தவ மிஷினரிமார்களில் மிகவும் புகழ் பெற்றவர் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் ஆவார். 1750-ல் தரங்கம்பாடி வந்த இவர் 1798-ல் தான் இறக்கும் வரை சமயப் பரப்பும் பணியில் ஈடுபட்டு வந்தார். இவர் கடலூர், நாகப்பட்டிணம், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய ஊர்களில் ஊழியம் செய்து கிறிஸ்தவ சமயக் கொள்கைகளைப் பரப்பினார். திருநெல்வேலியும், பாளையங் கோட்டையும் சமயத்தைப் பரப்ப உகந்த இடங்கள் என்றுணர்ந்து அங்கு சமயத்தைப் ப*ரப்பு*வதற்கான அடித்தளம் அமைத்தார். 1778-ல் முதன் முறையாக ஸ்வார்ட்ஸ் பாளையங்கோட்டை வந்தார். அப்போது கிளாரிண்டா என்ற பிராமணப் பெண்ணை மதமாற்றம் செய்தார். 1780-ல் பாளையங்கோட்டையில் நாற்பது பேர் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். மேலும் திருச்சிக்குத் தெற்கே முதன் முறையாக பாளையங்கோட்டையில் தேவாலயம் கட்டப்பட்டது. அதனை *178*5-ல் ஸ்வார்ட்ஸ் பிரதிஷ்டை செய்து வைத்தார். மேலும் ஜெனிக்கே, ஜெரிக்கே, ஜேம்ஸ்ஹறவ் போன்றோர்களும் திருநெல்வேலிப்பகுதிகளில் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம் செய்து வந்தனர்.

**c) ரேனியர்ஸ்**

சார்லஸ் தியோபிலஸ் எவால்ட் ரேனியஸ் ஒரு ஜெர்மானிய சமயப் பர்ப்பாளர் ஆவார். இவர் சமயப் பரப்பாளராக 1814, ஜூலை மாதம் சென்னை வந்தார். தரங்கம்பாடி சென்று தமிழ் கற்று வந்தார். 1820-ம் ஆண்டு வரை சென்னைப் பகுதியில் சமயப் பிரச்சாரம் செய்து வந்தார். சென்னையில் பல இடங்களில் கிறிஸ்தவ சபைகளைத் தோற்றுவித்தார். அதன்பிறகு 1820-ல் திருநெல்வேலி வந்தார். அங்கு 1838ம் ஆண்டு வரையில் கிறிஸ்தவ சமயப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். திருநெல்வேலி மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரவுவதற்கு முக்கியக் காரணமாக விளங்கியவர் ரேனியஸ் ஆவார்.

**d) ராக்லாந்து**

வட திருநெல்வேலி அப்போஸ்தலன் என்றழைக்கப்படும் தாமஸ் கெஜட்டன் ராக்லாந்து 1853, டிச*ம்ப*ர் மாதம் சென்னை வந்தார். இவர் சென்னையில் அப்போது தங்கி சமயப் பணி செய்து வந்த *நண்ப*ர்களான டேவிட்பென், ராபர்ட் மெடோஸ் ஆகியோர்களுடன் சேர்ந்து சென்னையிலிருந்து புறப்பட்டு 1854, ஜனவரியில் நெல்லை வந்து சேர்ந்தார். ராக்லாந்து சிவகாசியை மையமாக வைத்து சுமார் 150 சதுர மைல் பரப்பளவுடைய வட திருநெல்வேலியில் சமயப் பணியை மேற்கொண்டார். சிவகாசி, விருதுநகர், சங்கரன்கோவில், புளியங்குடி, பனையடிப்பட்டி, சாத்தூர், கோவில்பட்டி போன்ற பெரிய ஊர்களிலும், எண்ணற்ற சிறிய கிராமங்களிலும் கிறிஸ்தவ சமயப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். 1858-ல் தான் இறக்கும் வரையில் ஊழியம் செய்து சுமார் 47 கிறிஸ்தவ சபைகளை உருவாக்கினார். சுமார் எழுநூறு பேருக்கு மேற்பட்டவர்களை கிறிஸ்தவ மதத்தில் முறைப்படி சேர்த்தார். இவ்வாறு சென்னை மாகாணத்தின் பல பகுதிகளிலும் கிறிஸ்தவ பாதிரிமார்கள் சமயப் பரப்பும் பணியில் ஓய்வில்லாமல் ஈடுபட்டு வந்தனர். சமயப் பரப்பும் பணியில் மட்டுமல்லாது கல்வி வளர்ச்சியிலும், சமுதாய முன்னேற்றத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களின் பல்வேறு பணிகள் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் கிறிஸ்தவ ஒழுக்கக் கோட்பாடுகளை மக்களுக்குப் போதித்து வந்தனர். அவர்களுள் பலர் கிறிஸ்தவ சமய கோட்பாடுகளை மேல்நாட்டுக் கருத்துக்களுடன் இணைத்தே போதித்து வந்தனர். அவர்களது நடத்தை, ஒழுக்கம், வாழ்க்கை முறை முதலியவற்றின் மூலம் மேற்கத்தியக் கருத்துக்களுக்கேற்ப பல மாறுதல்களைச் செய்தனர். புதிய தமிழகத்தின் வளர்ச்சிக்கு பெரிதளவில் உதவி புரிந்தனர். அவர்கள் அளித்த உதவியின் அருமையை நாம் அளவிட முடியாது. அவர்கள் இருவகை விளைவுகள் ஏற்படக் காரணமாக இருந்தனர். முதலாவது, பழைய பழக்க வழக்கங்களைக் கண்டிக்க முற்பட்டு மறுப்புத் தெரிவிக்கும் மனப்பான்மையை வளர்த்தார்கள். இரண்டாவதாக, பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் நன்னெறியை தங்கள் சொந்த வாழ்க்கையிலும் கடைப்பிடித்து ஆக்க முறையிலான விளைவுகளை ஏற்படுத்தினார்கள்.

**a) சமயப் பரப்பாளர்களின் கல்விப் பணி**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் தமிழகத்தில் திண்ணைப் பள்ளிகளும், ஆசிரியரின் வீட்டிற்கே சென்று தங்கிப் படிக்கிற படிப்பு முறையும், சைவ வைணவ மடங்களில் கல்வி கற்பதுமே இருந்து வந்தன. இதனால் உயர் ஜாதியினருக்கு மட்டுமே கல்வி கிடைத்து வந்தது. பிராமணர், வைசியர், வேளாளர் சாதியினரே கல்வி கற்பதில் அக்கறை காட்டினர். இப்படி*ப்பட்ட* நிலையில் ஒரு மாற்றத்தை முதன் முதலில் கொண்டு

வந்தவர்கள் சமயப் பரப்பாளர்களே ஆவர். அவர்களது நோக்கம் மதமாற்றமாக இருந்தாலும் ஐரோப்பாவில் எழுந்த நவீன கல்வி முறையை தமிழகத்தின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் அறிமுகப் படுத்தியவர்கள் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களே ஆவர். இவர்கள் 1830-ம் ஆண்டு முதல் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தினர். ஸ்வார்ட்ஸ் என்பவரின் முயற்சியில் தஞ்சாவூர், ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய பகுதிகளிலும், ரேனியஸ் என்பவரின் முயற்சியினால் திருநெல்வேலி மாவட்டத்தின் பெரும் பகுதிகளிலும் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. சாதாரணப் பொது மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தால் முதலில் சமயப் பரப்பாளர்கள் தமிழிலேயே போதித்தனர். ஆனால் நாளடைவில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக்கினர். அவர்களின் வழக்கமான பாடத் திட்டம் படித்தல், எழுதுதல், பைபிள் பாடங்கள், கணித வாய்ப்பாடுகள் ஆகியவைகள் ஆகும். கல்லூரிகளில் இலக்கியம், வரலாறு, கணிதம் ஆகிய பாடங்கள் நடத்தப்பட்டது. 1854-ல் கல்விக் கொள்கை ஒன்றை ஆட்சியாளர்கள் அறிவித்தனர். அதன் விளைவாக பொதுக் கல்வித் துறை ஒன்று உருவாக்க*ப்ப*ட்டது. இதன் மூலம் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் அமைத்திருந்த கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை வெகுவிரைவாக வளர்ச்சி அடைந்தது. அவ்வகை கல்வி நிறுவனங்களுள் தலைசிறந்தது சென்னை கிறிஸ்தவக் கல்லூரியாகும். இந்தியாவின் பிற பகுதிகளைவிட தமிழர்கள் மத்தியில் கிறிஸ்தவ சமயப் *பர*ப்பாளர்களின் கல்விப் பணிகள் அதிக வெற்றியடைந்தன. 1870-ல் எட்டு சமய போதகர் அமைப்புகள் சென்னை மாகாணத்தில் 483 பள்ளிகளை நடத்தி வந்தனர். இதில் மொத்தம் 27,000 மாணவர்கள் பயின்று வந்தனர்.

**b) பெண்கள் மேம்பாட்டு நடவடிக்கைகள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெண்களின் நிலையில் குறைகூறத்தக்க வகையில் பல பண்புக் கூறுகள் காணப்பட்டன. அவை உடன்கட்டை ஏறுதல், பெண் குழந்தைகளைக் கொல்லுதல், வயதடையும் முன் மணம் செய்வித்தல், முகத்திரை அணிதல், பலதார மணம், தேவதாசி முறை போன்றவை*யா*கும். இந்தக் குறைபாடுகளை எதிர்த்து அரசாங்கத்தினரே போராடி வந்தனர். பல சட்டங்கள் இது தொடர்பாக இயற்றினர். கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் இந்தக் குறைபாடுகளைப் போக்கப் பல வழிகளில் அரசுக்கு உதவி செய்தனர்.

அவர்கள் பெண்களின் மோசமான நிலை பற்றி கண்டித்துப் பேசினர். அன்றைய தமிழக மக்களுக்கு புதிதாக தோன்றிய பெண்மையைப் பற்றிய கருத்தை முன்னிலை வைத்தார்கள். அந்தப் பெண்மையின் தன்மைகளை அக்காலத்தில் வாழ்ந்து வந்த பெண்களைக் கொண்டு விளக்கி வந்தார்கள். இப்போது அரசாங்கத்தினரின் மறைமுக நடவடிக்கைகளுக்கு பயன் தரத் தக்க பின்னணி போல் அவர்களது நடவடிக்கைகள்

அமைந்திருந்தன. பெண் கல்விக்காக சமயப் பரப்பாளர்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பெண்களுக்கான கல்லூரிகளும், பள்ளிகளும் தொடங்கப்பட்டன. இவ்வாறு பெண்கள் கல்லூரிகளையும், மருத்துவ சாலைகளையும் அமைப்பதில் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களே வழிகாட்டியாக விளங்கினார்கள். இந்தியா சுதந்திரம் அடையும் முன்பு இந்தியாவில் அமைக்கப்பட்டிருந்த கல்வி நிறுவனங்களில் பாதி கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களால் ஏற்படுத்தப்பட்டவைகள் ஆகும்.

**c) சாதி எதிர்ப்பு நடவடிக்கைகள்**

கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களுக்கு தமிழக சமுதாயத்தில் காணப்பட்ட சாதிப் பிரச்சனை பெரும் புதிராக இருந்தது. மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் மக்கள் பிடிப்புள்ளவர்களாக இருந்ததைக் கண்டு அதிசயித்துப் போனார்கள். சாதி அழுக்கைக் குலைத்தால் மத மாற்றத்திற்கு ஆள் கிடைக்காது என்று நினைத்தனர். எனவே சாதி முறையை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவத்திற்கு ஆள் சேர்க்க முனைந்தனர். 1727-ல் புரட்டஸ்தாந்து பாதிரியார்கள் சாதி முறையை நீடிப்பதற்கும், சூத்திரர்களை ஒரு கஜம் தள்ளி உட்கார அனுமதிக்கலாம் என்றும் முடிவு செய்தனர். ஆனால் கிறிஸ்தவத்துக்குள் இந்த சாதியத்தைப் புகுத்தியதால் பலன் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் சாதியத்தை வைத்துக் கொண்டே மதம் மாறலாம் என்றால் மதம் மாற வேண்டிய அவசியம் உயர்ந்த, தாழ்ந்த சாதி ஆகிய இரு சாராருக்குமே இல்லாமல் போய்விடுகிறது. இதனைத் தாமதமாகப் புரிந்து கொண்ட சமயப் பரப்பாளர்கள் சாதியத்தை எதிர்க்கக் கிளம்பினர். 1850-க்குப் பிறகு சாதி வேறுபாட்டை திருச்சபை விதிகளுக்கு எதிரானதாக ஆக்கினார்கள். 1858-ல் சென்னையில் நடைபெற்ற தென்னிந்தியப் போதகர்கள் மாநாட்டில் சாதியத்திற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சாதி முறையை வெளிப்படையாகக் கண்டிக்க வேண்டும் என்று அனைத்து போதகர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அரசின் செயல்பாடுகளில் சாதியின் வெளிப்பாடு இருந்தால் அதனைக் கண்டிக்க வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை என்றும் கூறப்பட்டு இருந்தது. இவ்வாறு சாதி ஒழிப்பிற்கான வலுவான தொடக்கத்தை தென்னிந்திய அளவில் செய்தவர்கள் கிறிஸ்தவ சமயப்பரப்பாளர்களே ஆவர்.

**d) அடிமை ஒழிப்பு**

கிறிஸ்தவ சமயப்பரப்பாளர்கள் மக்களின் வேறுசில பிரச்சனை களுக்கும் கிறிஸ்தவத்தில் தீர்வு இருக்கிறது என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்ட முயன்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் அடிமைகள் இருந்தனர். இதனை ஒழிக்கக் கம்பெனி அரசு ஆரம்பத்தில் அக்கறை காட்டவில்லை. தமிழ் பேசும் பகுதிகளிலும், இந்தி*யா*வின் இதர பகுதிகளிலும் நிலவிய இந்தக் கொடுமையான நிலை குறித்து இங்கிலாந்து

மக்களின் கவனத்தைத் திருப்பியதில் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களுக்கு முக்கியப் பங்கு இருந்தது.

சமயப் பரப்பாளர்கள் நடத்திய அடிமை எதிர்ப்பு இயக்கமே 1843-ல் அடிமை ஒழிப்புச் சட்டம் மற்றும் 1861-ல் இந்திய தண்டனைச் சட்டம் இயற்றப்படக் காரணமாயின. சொந்த மண்ணின் *சங்க*ராச்சாரியார் களும், சைவ மடாதிபதிகளும் அந்தப் பாவப்பட்ட ஜென்மங்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. ஆனால் அடிமை முறையை சட்டப்படியாக ஒழித்து சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அறிவிக்கப்பட்டது தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இதைச் செய்ததில் கிறிஸ்தவ சமயப்பரப்பாளர்களுக்கு முக்கியப் பங்கு இருந்தது.

**e) சமயப் பரப்பாளர்களின் பஞ்ச நிவாரணப் பணிகள்**

பசியோடிருக்கும் மக்கள் முன்பு இறைவன் உணவு வடிவில் வந்தால் தான் கடவுளுக்கு மதிப்பு கிடைக்கும் என்று கிறிஸ்தவ சமயப் ப*ர*ப்பாளர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அந்தக் காலத்தில் அடிக்கடி நாட்டில் பெரும் பஞ்சங்கள் ஏற்பட்டு வந்தன. 1837, 1876, 1896 ஆகிய ஆண்டு காலங்களில் ஏற்பட்ட பஞ்சங்களின் விளைவாக மக்கள் வாடினர். பலர் செத்து வீழ்ந்தனர். அப்போது மன்னர்களும், மடாதிபதிகளும் மக்களுக்குப் பெரிய அளவில் உதவவில்லை . ஆனால் அவர்கள் சாப்பாடு போட்டதெல்லாம் பிராமணர்களுக்கு மட்டுமே. காரணம் பிராமணர் களுக்கு தொடர்ந்து போஜனம் கொடுத்தால் சொர்க்கத்தின் கதவுகள் தானாகத் திறக்கும் என்று *நம்பப்ப*ட்டது. ஆனால் சூத்திரர்கள், சண்டாளர்கள் பற்றி யாரும் கவலைப்பட்டதில்லை.

இதில் மாறுதல்கள் ஏற்படுத்தியவர்கள் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களே ஆவர். பஞ்சம் வந்த காலத்தில் கஞ்சி ஊற்றும் வேலையில் அவர்கள் தீவிரமாக இறங்கி*னர்*. சென்னை மாகாணத்தில் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பெரும் பஞ்சங்களின் போது கிறிஸ்தவர்கள் செய்த பரிவான பராமரிப்பும் பொறுமையான ப*ணி*களும் மக்கள் மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இதனால் பஞ்சங்கள் முடிவுக்கு வந்த போது அதனால் பாதிக்கப்பட்ட
ஆயிரக்கணக்கானவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். இவை தவிர அனாதை இல்லங்கள் அமைத்தல், மருந்து சாலைகள் ஏற்படுத்துதல், கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல் போன்ற சமூக நலப் பணிகளில் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் ஈடுபட்டனர். மேலும் ஐரோப்பாவில் எழுந்திட்ட நவீன ஜனநாயகக் காற்றை முதன் முதலாக தமிழகத்தில் வீசச் செய்தவர்களும் அவர்களே. ஐந்து விரல்களும் ஒன்றா? என்று கேட்டு வர்ணாஸ்ரமத்தை நியாயப்படுத்தி வந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழர்கள் மத்தியில்

அனைத்து மனிதர்களுக்கும் விரல்கள் நீளம் குட்டையாகத்தான் உள்ளன, பிறப்பில் மனிதர்கள் அனைவரும் ஒன்றே என்று புது நீதி தந்தவர்கள் அவர்களே. தமிழர்கள் மத்தியிலிருந்தே சமூக சீர்திருத்தவாதிகளும் கிளம்புவதற்கு நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமானவர்கள் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களே ஆவர்!

## பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்
## (ORIGIN AND GROWTH OF PRESS)

தமிழ் நாட்டில் செய்தித் தாள்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது. அது தமிழர்களின் வாழ்வில் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது. அச்சுக் கூடங்களை அமைப்பதிலும், செய்தி நிறுவனங்களை நிறுவுவதிலும் முதலில் ஐரோப்பியர்களே முயற்சி எடுத்தனர். ஆரம்பத்தில் தமிழில் வாரப் பத்திரிக்கைகளே ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் பல தினசரிப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழ் செய்தித் தாள்கள் முக்கியப் பங்கெடுத்தன. இந்தியாவில் பத்திரிகைகளின் ஆரம்பம்

இந்தியாவிற்கு *வியாபார* நோக்கத்துடன் வந்த ஐரோப்பியர்கள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டாலும், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் ஒற்றுமையுடன் செயல்பட்டனர். இந்தியாவில் புன்னக்காயல், த*ரங்கம்பா*டி, பம்பாய், சென்னையிலுள்ள வெப்பேரி ஆகிய ஊர்களில் அ*ச்சுக்கூட*ங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவில் முதன் முதன் முதலாக 1780, ஜனவரி 29-ல் ஜேம்ஸ் அகஸ்டஸ்ஹிக்கி என்ற ஆங்கிலேயரால் பெங்கால் கெஜட் என்ற பத்திரிக்கை *தொ*டங்கப்பட்டது. இது ஒரு அரசியல் சார்பில்லாத பத்திரிக்கை ஆகும்.

### தமிழ் நாட்டில் பத்திரிகைகளின் ஆரம்பம்

தமிழ் நாட்டில் கம்பெனியின் ஆட்சியின் போது 1785-ல் ரிச்சர்ட் ஜான்சன் என்பவர் 'மெட்ராஸ் கூரியர்' எ*ன்ற ஆங்கி*லப் பத்திரிக்கையை வெளியிட்டார் இது முழுக்க முழுக்க அரசு சார்புடைய இதழ் ஆகும். 1795-ல் வில்லியம்ஸ் என்பவர் மெட்ராஸ் கெஜட் என்ற பத்திரிக்கையையும், இந்தியன் ஹெரால்ட் என்ற பத்திரிக்கையையும் கொண்டு வந்தார். 1836-ல் ஜே.ஆக்டர்லோனி என்ற ஆங்கிலேயர் தி ஸ்பெக்டேட்டர் என்ற ஆங்கில தினசரியை ஆரம்பித்தார். இது ஒரு அரசு சார்பற்ற பத்திரிக்கையாகும். 1844-ல் கஜுலு லட்சுமண ராசு செட்டி கிரசன்ட் என்ற இந்து சமய ஆதரவு இதழைத் தொடங்கினார்.

1860-ல் காண்ட்ஸ் பிரதர்ஸ் என்ற புத்தகக் கம்பெனி மெட்ராஸ் டைம்ஸ் என்ற பத்திரிக்கையைத் தொடங்கியது. இது காலையிலும்,

மாலையிலும் இரண்டு பதிப்புகளாக வெளிவந்தது. இது அரசின் கொள்கைகளைக் கண்டித்ததால் அப்போது கவர்னராக இருந்த நேப்பியருக்குப் பிடிக்கவில்லை. எனவே இந்தப் பத்திரிக்கையின் ஆசிரியர்கள் விலகி தனியாக 1868-ல் மெட்ராஸ் மெயில் என்ற பத்திரிக்கையைத் தொடங்கினர்.

**முதல் தமிழ்ப் பத்திரிக்கை**

முதலாவது தமிழ்ப் பத்திரிக்கை இலங்கையில் தான் ஆரம்பிக்கப் பட்டது. 1802-ல் 'சிலோன் கெஜட்' என்ற பத்திரிகையே அது ஆகும். சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ்ப் பத்திரிக்கையின் பெயர் 'தமிழ்ப் பத்திரிக்கை' என்பதே ஆகும். இது 1831-ல் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1833-ல் சென்னையில் 'ராஜவிருத்தி போதினி' என்ற இதழ் தொடங்கப்பட்டது. ஆங்கில அரசை ஆதரிப்பதும், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதுமே இதன் நோக்கமாக இருந்தது.

பின்னர் 1840-ல் நாகர்கோவிலில் இருந்து சுவிசேஷ பிரபாவ விளக்கம், 1841-ல் டில்லியிலிருந்து ஜனசினேகன், 1849-ல் திருநெல்வேலியில் இருந்து நற்போதம், 1855-ல் சென்னையிலிருந்து தினவர்த்தமானி போன்ற பத்திரிக்கைகள் தொடங்கப்பட்டன. 1866-ல் முதன் முதலாக இந்து மத சார்புடைய கலாவர்த்தினி என்ற மாத இதழ் சென்னையிலிருந்து தொடங்கப்பட்டது. பின்னர் பல்வேறு நோக்கங் களுக்காக பல பத்திரிகைகள் தொடங்கப்பட்டன.

**தேசிய இயக்கமும், தின வார இதழ்களும்**

*ப*த்திரிகைகள் சமுதாய இயக்கத்தையும் அதன் வளர்ச்சியையும் காட்டும் காலக் கண்ணாடிகள் ஆகும். எனவே நாட்டின் வரலாற்றுடன் அவையும் சேர்ந்தே வளர்கின்றன. இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்த காலத்திற்கு முன்பே தேசபக்திமிக்க பல குழுக்கள் இயங்கி வந்தன. சென்னையில் நேட்டிவிட்டி அசோசியேஷன், சென்னை மகாஜன சபை, திருவல்லிக்கேணி இலக்கிய சங்கம் போன்றவை அமைந்திருந்தன.

இதில் திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தின் உறுப்பினர்கள் பெரும்பான்மையோரும் பட்டதாரிகள் ஆவர். சட்டம், இலக்கியம், பொருளாதாரம், அரசியல் ஆகியவை பயின்றவர்களாக இருந்தனர். இந்த உறுப்பினர்களில் ஆறுபேர் ஒன்று சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகையே “இந்து” என்ற பத்திரிகை ஆகும். இது 1878-ல் ஒரு வாரப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. 1889-ல் இது தினசரி பத்திரிகையாக மாற்றப்பட்டது. இதன் ஆசிரியரான ஜி.சுப்ரமணிய ஐயர் ஆங்கிலத்தில் மிகவும் புலமை வாய்ந்தவர். இந்தப் பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் புதிய கண்ணோட்டத்தில் மக்களின் தேசிய உணர்வையும், தன்மான உணர்ச்சியையும் தூண்டுவதாக அமைந்தன. இந்தப் பத்திரிகை மக்களின்

பேராதரவைப் பெற்று வளர்ச்சியடைந்தது. தேசபக்தி மிகுந்த ஜி.சுப்பிரமணிய ஐயர், விடுதலை இயக்கத்தின் குரல் தமிழகத்தில் பரவ வேண்டும் என்றால் தமிழில் பத்திரிகை அவசியம் தேவை என்று உணர்ந்தார். எனவே 1882-ல் சுதேசமித்திரன் என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கினார். இந்து பத்திரிகை போலவே சுதேசமித்திரன் எல்லா வகையிலும் சிறந்த பத்திரிகையாக ***விளங்கியது***. 1904-ல் பாரதியார் சுதேசமித்திரனின் துணை ஆசிரியர் *ஆனார்.*

1905-ம் ஆண்டு *பார*தியார் சுதேசமித்திரனிலிருந்து விலகி இந்தியா என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். இதில் முழுக்க முழுக்க அரசியல் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவை ***வெளிவந்தது***. காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்த அன்னிபெசன்ட் என்ற ஆங்கிலேய அம்மையார் 1916-ல் ஹோம்ரூல் என்ற இயக்கத்தைத் தொட*ங்கினார்*. அவர் தனது கொள்கையைப் பரப்புவதற்காக 'நியூ இந்தியா' என்ற தினசரியையும், 'காமன்வீல்' என்ற வாரப் பத்திரிகையையும் தொடங்கினார். 1917-ல் 'தேச பக்தன்' என்ற பத்திரிகையும் தொடங்கப்பட்டது. இதைப் போல சுதந்திரப் போராட்ட காலத்தில் நவசக்தி, சுயராஜ்யா, தமிழ்நாடு, காந்தி,
மணிக்கொடி, சுதந்தி*ரச் ச*ங்கு, பாரத தேவி போன்ற பத்திரிகைகளும் தொடங்கப்பட்டன. திராவிட இயக்கப் பத்திரிகைகள்

தமிழ் நாட்டில் தோன்றிய நீதிக்கட்சி காங்கிரசுக்கு விரோதமாகவும், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாகவும் செயல்பட்டது. மேலும் இந்தக் கட்சி பிராமணர் எதிர்ப்பையும் முக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தது. இந்தக்கட்சி தனது பிரச்சாரத்திற்காக திராவிடன் என்ற தமிழ்ப் பத்திரிகையையும், ஜஸ்டிஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டது. திராவிடன் பத்திரிகை திராவிடப் பத்திரிகைகளுக்கு முன்னோடியாக *விளங்கி*யது. இந்தப் பத்திரிகையில் பிற்காலத்தில் அறிஞர் அண்ணா எதுகை மோனையுடன் அழகான தமிழில் எழுதினார்.

நீதிக்கட்சி வீழ்ச்சியடைந்த பின்னர் அது திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் பெற்று ஈ.வே.ரா பெரியார் பொறுப்புக்கு வந்தது. ***அவர்*** தனது கொள்கையைப் பரப்புவதற்காக, பகுத்தறிவு, குடியரசு என்ற இரு பத்திரிகைகளைத் தொடங்கினார். 1935-ல் அண்ணாத்துரையை உதவி ஆசிரியராகக் கொண்டு விடுதலை என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கினார் பெரியார். இந்த இதழ் திராவிட உணர்வுக் கொள்கையைப் பரப்பியது.

1949-ல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திமுக தோன்றியது. அப்போது கட்சியின் நாளிதழாக 'நம்நாடு' வெளிவந்தது. பின்னர் முரசொலி வார இதழாகத் தொடங்கப்பட்டு பின்னர் தினப் பத்திரிகை ஆனது. திமுகவிலிருந்து பிரிந்த அதிமுக 'அண்ணா ' என்ற இதழை ஆரம்பித்தது.

பின்னர் தாஸ் என்ற பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அதிமுக கட்சி இதழாக வெளிவருவது நமது எம்ஜியார் ஆகும். கம்யூனிசக் கட்சியின் சார்பாக தீக்கதிர் என்ற பத்திரிகை வெளிவருகிறது. பிற பத்திரிகைகள்

தமிழ் நாட்டில் மேலும் பல புகழ் பெற்ற பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளன. அவை வருமாறு: தினத்தந்தி, தினமணி, தினமலர், மாலை முரசு, மாலை மலர், தினகரன், கதிரவன், தமிழ் முரசு போன்ற தினசரி பத்திரிகைகளும், குமுதம், குங்குமம், ஆனந்த விகடன், அவள் விகடன், ராணி, தேவி, இந்தியா | டுடே, சிநேகதி போன்ற வார இதழ்களும், ஜுனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர், நெற்றிக்கண், நக்கீரன் போன்ற புலனாய்வு இதழ்களும் வெளிவருகின்றன.

2001-ம் வருட இந்திய அரசின் அறிக்கையி*ன்படி, தமிழ் நாட்டி*ல் 366 தினசரி பத்திரிகைகள், 43 வாரம் இருமுறை இதழ்கள், 411 வார இதழ்கள், 241 மாதம் இருமுறை இதழ்கள், 987 மாத இதழ்கள், 37 மூன்று மாதம் ஒருமுறை இதழ்கள், 26 ஆறுமாதம் ஒருமுறை இதழ்கள், 8 வருட இதழ்கள் வெளிவருகின்றன.

*******